தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு

துணர்	திருவள்ளுவர் யாண்டு ௧௯௯௪	மலர்
௩௯	சோபகிருது, ஆனி, ஆடி. 1963 ஜூன், ஜூலை.	௩, ௪.

எழுத்துப்பணி ஓர்—அறம்

புலவர். தி. நா. அறிவு ஒளி

எழுதுவது ஓர் அறம். எழுத்துத் தொண்டு நனி சீரிய ஆற்றல் சான்ற சீர்திருத்தப் பணியாம். எத்துணையோ கோடி மக்களுக்குப் பல்லாயிரக் கணக்கான ஆண்டுகட்கு அறிவும், உணர்வும், ஆறுதலும், பண்பும், அன்பும், ஆர்வமும், நயமும், சுவையுமாகிய விருந்துகளை ஊட்டும் திருப்பணி எழுத்துப் பணியே. எனவே, பொறுப்போடும், நாகரிகத்தோடும், கண்ணியத்தோடும், கருத்தோடும், விழிப்போடும் ஆற்ற வேண்டியதொரு நற்பணி இது. அறம், செயலால் மட்டு மன்று; எழுத்தாலும் விளைவது என்பதை எழுத்தாளர்களும் பிறரும் நன்குணர வேண்டும்.

இரக்கமும் அருளும் மக்கட்டன்மையின் இருகண்களாம். அவ்விரக்கமும், அருளுணர்வும் பொதுமக்களுள்ளத்தில் பொங்கிப் பெருகுமாறு அன்பிலக்கியங்களை, அருட்படைப்புக் களைப் படைப்பது புலவோர் தம் கடமையாம்.

ஒழுக்கக் கேட்டுக்கும், உணர்ச்சி வெறிக்கும் பரிந்து எழுதப்படும் கதைகளும், பிறவும் இலக்கிய அங்காடியில் பேரளவில் விலைபோகின்றன வென்றால், இலக்கியம் வளரும் போக்கும், எழுத்தாளர் அகநிலையின் தன்மையும், சுவைஞர்கள் இழிந்த விருப்பும் எந்நிலையி லுள்ளதென்பதைச் சொல்லாமல் தெரிந்து கொள்ளலாம். இந்நிலை எழுத்துத் துறைக்குப் பேரிழுக்குச் சூழ்வதென்பதை நல்லோர் உணர்ந்து இந்நிலையை மாற்ற முயல வேண்டாமா?

‘எழுத்தால் நன்மை விளைய வேண்டும்; எழுத்தால் அறம் செழிக்க வேண்டும்.’ என்ற நோக்கத்தை எழுத்தாளர்களே மறந்து, புறக்கணிப்பது நாட்டுக்குப் பெருங்கேடு சூழ்கின்ற

நிலையாகும். பண்பற்றவர்கள், ஒழுக்கத்தை நம்பாதவர்கள், அறத்தை வழிபட்டு ஒழுகாதவர்கள், நாகரிகம்—நேர்மை—நடுநிலைகளைப் பற்றி அறியாதவர்கள் எழுத்துத்துறையில் நிறைந்த அளவில் பெருகிவருவதே பண்பற்ற பயனற்ற—படைப்புக்கள் தோன்றுவதற்குரிய அடிப்படையாம். துப்பறியும் கதைகள் என்றும், "அழிவிலக்கியத்தை வெல்லும் மக்களிலக்கியம்" என்றும், வாழ்க்கை இலக்கியமென்றும், 'மெய்ம்மை யிலக்கியம்' என்றும் பலப்பல பெயர்களைச் சூட்டிக் கொண்டு, காம வெறிக்களியாட்டங்களும் கொள்ளை—கொலை நிகழ்ச்சிகளும், வேறு பிற இழிந்த செய்திகளையும், இழுக்குடைச் செயல்களையும் உணர்ச்சி வெறி ஏற்றுமாறு தாழ்ந்த நடையில் எழுதி வருகின்ற பண்பின்மை தமிழ் நாட்டைத் தொழுநோயாய் அலைத்து வரக் காண்கின்றோம். இத்தகு படைப்புக்களைப்(?) படிப்போர் யார்? பள்ளி மாணவர்கள், நனி இளம் மகளிரும் இளையரும், மணவாழ்விற் புகுந்தோரும் ஆகியவர்களே யாவர்.

உணர்ச்சித் தெளிவோ, அறிவுவளமோ முழு அளவில் அடையப் பெறுதோரே இனைய நூல்களை—எழுத்துக்களைக்—கற்கின்றனர். இவர்தம் உள்ளமும், உணர்ச்சியும் இவற்றால் எத்துணை பாழ்படும் என யாரே அளவிட்டுரைக்க வல்லார்? இவற்றையெல்லாம் தடுக்க நாட்டரசு கனவிலும் கருதுவதில்லை! ஆயின், பயனற்ற துறைகளில் முன்முன்வந்து சட்டமியற்றுகிறது. வருங்கால மரபைக் கெடுக்கும் எழுத்துப் பணியைவிட, நாட்டுக்குத் தீமை பயக்கும் செயல் வேறு எதுவும் இருக்காது. மக்களை இழிந்த நிலைக்குத் தூண்டும் எழுத்துக்கள் வெளியிடப்படாமல் தடுக்க வேண்டும். கருவிலேயே 'அழிவுக் கருத்துக்களை' அழிக்காமல், மக்களிடை அவை பரவிவிட வாய்ப்பளித்துவிட்டுப், பின் இளைஞர்களைக் குறை கூறுவதோ அறிவுரை கூறுவதோ பயன்படுமா? இந்நிலை அறிவுடைமையா?

பண்டைக் காலத்தில் உணர்ச்சித்துறையில் 'வன்மை வாய்ந்த நெறியான கட்டுப்பாடு' மக்களைப் பிணித்திருந்தது. இன்று அறிவுத்துறைக் கட்டுப்பாடு மக்களைத் தளை செய்து ஆட்டி வருகிறது.

பண்டை நாளில் உணர்வுகளை எவ்வளவு மறைக்கலாமோ, எவ்வளவு அடக்கலாமோ, அவ்வளவும் நாகரிகமான நடை எனக் கருதிவந்தனர். இன்று, உணர்வுகளை எவ்வளவுக் கெவ்வளவு வெளிப்படையாகப்—பச்சையாகக்—கொட்டிக் காட்டி வெறித்து அலையலாமோ, அவ்வளவும் நாகரிகம் எனக் கருதப்படுகிறது.

பழங்காலத்தில் உணர்ச்சிக் கட்டுப்பாடு மிகுதி. அதனல், உணர்ச்சிப் பெருக்கம். உணர்வழுத்தம்' உணர்ச்சித் துடிப்பு மிகுதியாக இருந்தது. அதனல் மன்பதையின் பொது ஒழுக்கம் நனிசீரியதாக—விழுமியதாக—அமைந் திருந்தது. இன்று உணர்ச்சிக் கட்டுப்பாடும், ஒழுக்க வரை யரையும் புறக்கணிக்கப்படுகின்ற நிலே அமைந்ததால் பொது வாழ்விலும்—தனிவாழ்விலும் இழுக்குகளும் வழுக்களும் மலிந்து விட்டன. நாட்டின் ஒழுகாறே இதனல் பாழ்பட்டு விட்டது. இக்குறைகளுக்கு 'மஞ்சள் எழுத்துக்கள்' எனப் படும் 'பாழ்மைப் படைப்புக்களே' வேராகும். இவ்வேர்ப் பாழை அழிக்க வேண்டுவது தலைமைசான்ற நல்லறிஞர்கள் கடனும்.

தனிவாழ்க்கையின் அதிர்ச்சிகள் பொது வாழ்க்கையைத் தாக்கும். அவ்வாறு தாக்கப்படாமல் காத்துப் பொது வாழ்வில் ஈடுபடுவர் உண்மையில் நல்ல பொதுத் தொண்ட ராவார். ஆயின் பெரும் பாலோர் தனிவாழ்வுக்கேற்பவே பொது வாழ்வில் ஈடுபட்டு வாழ்பவராக உள்ளனர். ஆகவே, தனிவாழ்க்கைச் செம்மையே முதற்கண் பேணிப் புரக்கத் தக்கதாகும். தனிவாழ்வுச் சீர்மை பொதுநல அரணுகு அமையும். இவ்வுண்மையைத் தெளிந்து அரசும், அறிவுத் துறையும் ஒழுகினல் இளைஞர்கள் செவ்வியராவர்; உலகு சிறக்கும்.

அச்சம் முன்னேற்றத்தின் எதிரி; அஞ்சாமையே வளர்ச் சிக்கு நல்லுரம். ஆயின் மறைமுகமாகவும், வெளிப்படை யாகவும் அச்ச உணர்வு மக்களிடையே வளர்ந்து வருகிறது. அதனைத் துணிவாகவே அரசியலாளர்களும், அதிகாரிகளும் வளர்த்து வருகின்றனர். 'அமைச்சரைக்காட்டி, சட்டமன்ற-பாராளுமன்ற உறுப்பினரைக்காட்டி, இயக்குநர்-மேலாளரைக் காட்டி, மேற்பார்வையாளர், தலைமையாளரைக் காட்டி செயற் றுரைகளில் அச்சுறுத்தல் கொடுங்கோல் புரிகிறது. கட்சி, தலைவர், தலைவருக்கு வேண்டியவர்—உறவினர் என்போர் பொது வாழ்வில் அஞ்சுமியல்பைக் காக்கின்றனர். காரண மற்ற அச்சம், எதற்கும் அச்சம் நிலவுவது பண்பற்ற செயலைக் காட்டும் அறிகுறி. 'அச்சமே கீழ்களது ஒழுக்கம்' என வள்ளுவர் கூறிய மொழியை நினைவுறுத்துவதோடு அமைகிறேன்.

கருத்து வெளியிடுவதில் அச்சத்திற்கு இடமிருக்கக் கூடாது. முறையானவகையில் எத்தகு கருத்தையும் யாரும் வெளியிடக் கூடிய வாய்ப்பு எக்காரணத்தாலும் சிதைவதோ, குறைவதோ குடியாட்சி நாட்டுக்கு நல்லதன்று. எழுத்

தாளர்கள் இவ்வகையில் மறவர்களாக நடந்துகொள்ள வேண்டும். மன்பதையின் வழக்குரைஞர்களாக—பரிவுரையாளர்களாக விளங்க வேண்டியவர்கள் எழுத்தாளர்களே யாவர். நிறைகளை எடுத்துக்காட்டிப் பெருமை செய்வது போன்றே, "குறைகளைச் சுட்டிக் காட்டிச் சீர்திருத்த வேண்டியது எழுத்தாளர்களின் தலையாய முதற் பெருங்கடனாகும். இக்கடமையிலிருந்து அரசியலோ, கட்சியோ, செல்வமோ, செல்வாக்கோ எழுத்தாளரை வழுவச் செய்வது கூடாது. ஆனால், இவற்றுக்கு இன்றைய எழுத்தாளர்கள் இரையாகிக் கிடக்கும் தன்மதிப்பற்ற நிலை நாணத்தக்கதாம்.

நாட்டில் பலதுறைகளில் குற்றங் குறைகள் மிகுந்திருக்கக் காண்கிறோம். 'பெரியவர்'கள் என்போரிடமே சொல்ல முடியாத குற்றங்கள் திணிந்து கிடக்கின்றன. அறிவுரை கூறி வருபவர்களிடமே அறியாமை செறிந்துள்ளது. தம் குறைகளை அறிய அவர்களுக்கு, ஓய்வில்லையோ, என்னவோ! அல்லது பிறர் குற்றங்களைக் கூறினால் தங்குற்றம் மறைந்துவிடும் என்பது அன்னார் எண்ணமோ; என்னவோ? ஆயின் அவர்கள் குறைபாடுகளையும் நாம் களையவேண்டும். அவர்கள் வழுக்களை விளக்கிக் காட்டி, அறிவுறுத்துவதும் பெரியதொரு நாட்டுத் தொண்டாகும்.

மன்பதையத் திறயைக்கெழுதும் இலக்கியம், உயரிய நல்வாழ்வுக்கு—அறநெறிக்குத் துணைபுரிவதாகவும் இருக்க வேண்டும். அந்த எழுத்துக்கள் தடைசெய்யப்படாமல் பரப்பப்படவேண்டும். போலி எழுத்துக்களைத் தடுத்தழிக்க வேண்டும். இதைச் செய்ய நாடு விரைக!

முதனிலை

நெஞ்சை வளப்படுத்துவாய்—தம்பி
நெஞ்சை வளப்படுத்துவாய் —(நெஞ்)

இடைநிலை

வஞ்சம் மடமையறி யாமை எனுங்குழியில்
தஞ்சம் அடைந்துமிகக் கொஞ்சிக்குலவு முன்றன் —(நெஞ்)

இறுதிநிலை

வாழும் நெறிதவிர்த்துப் பாழும் பேராசையினால்
வாடிநிலை திரிந்து ஓடி யிளைத்துலகம்
தாழும் பகைவளர்த்துத் தன்னை வியந்துமிகத்
தருக்கிப் புகழ்விரும்பிச் நெருக்கி நிலைகுலையும் —(நெஞ்)

ச. பாலசுந்தரம்

பழையவலம் கல்வெட்டுகள்

வித்துவான். சி. கோவிந்தராசனார்,

(தமிழ் விரிவுரையாளர் கரந்தைப் புலவர் கல்லூரி, தஞ்சை-2.)

நமது முன்னோர்களின் நாகரீக வாழ்வுக்கு எடுத்துக் காட்டாக விளங்குவன அவர்களால் எடுப்பிக்கப் பெற்ற திருக்கோயில்களாகும். இவைகள் தெய்வ பக்தியை உண்டாக்கும் இடங்களாவதன்றியும் பண்டைத் தமிழக நாகரீகக் கலை வளர்ச்சிக்குரிய சின்னங்களாகவும் நின்று விளங்குகின்றன.

தஞ்சை மாவட்டத்தில் திருவாரூருக்கு வடகிழக்கேயுள்ள கேக்கரை என்னும் சிற்றூர் வழியாகச் செல்லும் மட்சாலை வழியே நான்கு கல் அளவைக் கடப்போமாயின் குறுக்கிட்டுச் செல்லும் வெட்டாற்றின் வடகரையில் உள்ள பழைய வலத்தைக் காணலாகும். ஊர் இன்று மிகச் சிறிய அளவில் இருப்பினும், ஒரு காலத்தில் சிறந்த முறையில் இருந்திருக்க வேண்டுமென்பதற்குரிய பழைய சின்னங்கள் கிடைக்கின்றன. திருவாரூர் தலபுராணத்தில் நாக கண்டத்திலுள்ள வில்வாரண்யம் என்று கூறப்பட்டுளது. பழைய வலத்தின் வடக்குப் பகுதியிலேயே சிவன்கோயில் அமைந்துள்ளது. அகத்தியர் பூசித்த தலங்களுள் இதுவும் ஒன்ருகக் கூறப்படுவதால் கோயில் அகத்தீசுவரம் என்று பெயர் பெற்றுளது. இக் கோயிலை 11-3-62-ல் ஆராய்ச்சி செய்து, கல்வெட்டுகளையும் படியெடுத்துளேன். அதுபோது உடனிருந்து ஆவன உதவியவர் அன்பமர்ச் செல்வர் திருவாளர் திருவாரூர் இராசகோபால் பிள்ளையவர்களாவர்.

முதல் இராசராசன் காலத்தில் எழுந்துள்ள கல்வெட்டுகளில், இப்பகுதி குணசீலமணி வளநாட்டு திருவாரூர் கூற்றத்துள் அடங்கியிருந்ததென்பது புலனாகின்றது. பின்னர் வளநாட்டின் பெயர் மாற்றமடைந்து கெயமாணிக்க வளநாடென்று கூறப்பட்டுள்ளதைப் பன்னிரண்டாம் நூற்றாண்டில் திருவாரூர் கூற்றத்துள் எழுந்துள்ள சோழர் காலக் கல்வெட்டுகளாலும் பாண்டியர் காலக் கல்வெட்டுகளாலும் அறிய முடிகின்றது.

மருத நிலத்தின் மாண்பைக் காட்டும் நன்செய் நிலங்கள் சூழ்ந்துள்ள பழைய வலத்திலுள்ள இச்சிவன்கோயில் 194 அடி நீளமும், 100 அடி அகலமுமாக அமைந்துள்ளது. இதன் அகன்ற திருச்சுற்றிடத்தின் மேற்குப் பகுதியில் விநாயகர், முருகன், சத்யாயதாட்சி என்று அழைக்கப்பெறும் அம்மன்

ஆகிய தெய்வங்கட்குரிய கோயில்கள் இடம் பெற்றுள்ளன. கருவறை, முகமண்டபம், மகாமண்டபம் என்ற பகுதிகளோடு கோயில் அமைந்துள்ளது. கிழக்கு நோக்கியுள்ள கோயிலின் தலைவாயிலாகும் தோரணவாயில் நெடுநிலை மாடங்களோடு விளங்க, கருவறையின் மேலிடம் பத்மவிமானமாகக் காட்சி யளிக்கின்றது. கருவறை அடிப்படைக் கட்டிட வரியும் உயர் நிலை அமைப்பும் (உபான வரிசை) தஞ்சைப் பெரிய கோயிலின் அடிப்படை முறையைப் போன்றே சிறிய வடிவில் எழுப்பப் பட்டுள்ளது. சித்திர வரிகளும் கர்ண கூட்டினை அடுத்துள்ள யாழவரியும், போதிகை பலகை ஆகியவைகளும் முதல் இராச ராசன் காலத்தில் எழுந்த சிற்பச் சுவடுடைய கற்பணிகளா கவே காணப்படுகின்றன. கருவறைத் தெய்வ மாடங்களில் தென்பாலுள்ள விநாயகர் திருமேனிக்கு மேலாக குடைகவிந் துள்ளது. விநாயகர் திருமேனியமைப்பில் இத்தகைய புதிய சிற்பச் சுவட்டினை முதல் இராசராசன் காலமே கண்டுளது. மற்றும், வடபுறமுள்ள கொற்றவையின் திருமேனியும் இக் காலத்தையே உறுதி செய்ய வாய்ப்பாக அமைந்துளது. இக் கருத்திற்குச் சான்றாக இக்கோயில் முதல் இராசராசனின் இருபதாம் ஆட்சியாண்டில் எழுந்துள்ள கல்வெட்டும் உள்ளது. எனவே, இக்கோயில் கி. பி. 11-ம் நூற்றாண்டின் தொடக்கத்தில் கருங்கற் பணியாக எழுப்பப்பட்டிருக்க வேண்டுமென்று தெரிகின்றது. இன்றுள்ள கோயிலைச் சார்ந்து மேற்கே அமைந்துள்ள பரந்த மேடு, ஒரு காலத்தில் இக்கோயிலின் பகுதி அழிந்திருக்கின்றதென்பதைக் காட்டு கின்றது. இங்கு, சிதைவடைந்தும் தேய்ந்தும் நிற்கும் பல்லவர் காலச் சிற்பச் சுவடுடைய சிவமூர்த்தங்களும் இக்கருத் திற்குச் சான்றாக விளங்குகின்றன. பெரும்பான்மை செங்கற் திருப்பணியாக மிகப் பெரிய அளவில் இருந்த சிவன்கோயில் கி. பி. 10 ஆம் நூற்றாண்டளவில் சிதைவு பெற அவ்விடத்தில் முதல் இராசராசன் காலத்தில் புதிய வடிவில் சிறிய அளவில் கோயில் முழுவதும் கருங்கற்பணியாக எழுப்பப்பட்டிருக் கின்றது. இதனை, கோயில் மதிற் சுவர்களிலும் பிறவிடங் களிலும் ஆங்காங்குள்ள கல்வெட்டுச் சிதைவுகளால் நன்கு அறியலாகும்.

சிவன் கோயில்களில் திக்கு நோக்கி அமைக்கப்பெறும் கோள் நிலைத் தெய்வமொன்பதும் இக்கோயிலில் ஒரே பலகைக் கல்லில் வரிசையாக செதுக்கப்பட்டுள்ள முறைமை புதுமையாகும். பழைய ஊரம் சிவன் கோயிலிலுள்ள கல் வெட்டுகள் ஐந்தாகும். அவற்றையான் படியெடுத்திருப் பினும், அதிகச் சிதைவில்லாதிருக்கும் கல்வெட்டுகளையே தந்துளேன்.

கல்வெட்டு—1

விநாயகர் கோயில் உபான வரிசையில் உள்ள கல்வெட்டு

வரி 1. ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவனச் சக்கரவத்திகள் ஸ்ரீ ராஜ ராஜ தேவர்க்கு யாண்டு ௰கூ-வதின் எதிராம் யாண்டு மகர நாயற்று அபர பக்ஷத்து பிரதமையும் புதங்கிழமை......

வரி 2. ள ராஜாதிராஜ வளநாட்டு தசியூர் பெரும்பற்ற புலியூர் மேலைச்சேரியில் ஸ்ரீ பதஞ்ஜலி தேவந் திருமடத்து எழுந்தருளி இருக்கும் பிச்சமடத்து முதலி......குலொ

வரி 3. துங்க சோழ வளநாட்டு திருநறையூர் நாட்டு மருத்தூருடையாந் தாளம் பெற்றுன் ஆனந்த(வு) ளகழலாங் விஸ்வேஸ்வர தெவநென் கெயமாணிக்க வளநாட்டு திரு வாரூர் கூற்

வரி 4. றத்து பழைய வல்லத்தும் ராஜ ராஜ பிர்ம மங் கலத்தும் உடையார் திருவகத்தீஸ்வரமுடைய நாயநார் கோயில் திருமாளிகை விநயகப் பிள்ளையாருக்கு திரு (அ)த்த சாமத்து அமுது செய்தரு......க இந்த ராஜ ராஜ

வரி 5. பிர்ம மங்கலத்து பிறந்த குலொத்துங்க சோழன் குருகாடியிலாங் காணியாய நான் அனுபவித்து வருகிற நில மாய் திருநாமத்துக் காணியாக குடுத்த நிலமாவது புவன முழுதுடை வரிக்கு மொக்கும்

வரி 6. புரவரி வாய்க்காலுக்கு வடக்கும் உகூ சதிரத்து பனங்கால் என்று பேர் கூவப்பட்ட சதிரத்துக்கு கீழ்பார் கெல்லை உகமிருந்தான் பெருமான் நிலத்துக்கும் தெங்பார் கெல்லை குருகாடி கீழையாங் தஞ்ச நாட்டு மு

வரி 7. வேந்த வேளாரும் திருவகத் தீஸ்வரமுடையாரும் நிலத்துக்கு வடக்கும், மேல்பார் கெல்லை மே......ராகள் நிலத்துக்கு கிழக்கு, வடபார் கெல்லை கருணைகர வாய்காலுக்கு ......ற்கும், ஆக இசைந்த இந்தநெ கெல்லை உள் நடுவுடத்து உடனே கூ

வரி 8. லம் மூன்று மாவும் குடுத்தெங் இந்த விஸ்வேஸ் வர தெவங்னெங் இங்நிலம் மூன்று மாவுக்கும் இம்மடத்து முங்பு நான் இறுத்து வருகிற படியெ பொத்தகப்படி ஏற்றி வந்த நிலத்துக்கு இறுத்து இறைமிகுதி ஸ்ரீ பண்டாரத்து உடனே கூ

வரி 9. ட்டி மிகுத்து குறைவு உள்ளடங்க இச்சநதி அமுது செய்தருள கடவதாகவும் குடுத்தென் இந்த விஸ் வேஸ்வர தேவனெங் இவர் அருளிச் செய்ய இப்பிரமாணம் எழுதினெங் கோயில் காணி வலமுடையனெங் குடிதாங்கி

வரி 10. ஞங் கடக்கத்தாங்னெங் எழுத்து இங்நிலம் மூன்று மாவும் திருநாமத்துக் காணியாக குடுத்த மருத்தூரு

டையாந் தானம் பெற்றுந் ஆனந்......கழலான் விஸ்வெஸ்வர தேவந் எந் எழுத்து. இப்படி அ

வரி 11. றிவேந் சிக்க.........ரகவா குணராயந்னெந் இப்படி......கிழாந்வெந்......டய..... ராந சொழந்றுந தஞ்சை நாட்டு விழுப்பரையந் நென் இப்படி அறிவெந் குளக்கடையான்...—(சிதைந்துள்ளன)

கல்வெட்டு—2

அம்மன் கோயில் மண்டபத் தூணில் உள்ள கல்வெட்டு

(தென்முகப்பு)

ஸ்வஸ்திஸ்ரீ திரும
கள் பொலபெ
ருணில சில்வியு
தனக்கெவுரிமை பூண்
டமை மணக்கொள
காந்தளூர் சாலே
கலமறுத் தருளிவெ
ங்கை நாடும் கங்கபாடி
யுநுளம்ப பாடியும்
குடமலே னாடும் கொ
ல்லமுங் கலிங்கமு
ம் எண்டிசை புகழ்தர
ஈழ மண்டலமும் ரெட்டபா
டி ஏழரை இலக்கமும் திண்
டிறல் வென்றித் தண்டாற்
கொண்டதனெழி வளர்
ஊழியினெல்லா
யாண்டும் தொழுதக
விளங்கும் யாண்டெ
செழியரை.

தேசகொள்ளு கோவிரா
ஜராஜ கேசரி பந்மராண
ஸ்ரீ இராஜ இராஜ தெவற்கு
யாண்டு உ௰ வது
குணசீலமணி வளநாட்டு
திருவாரூர் கூற்றத்து பழ
ய வல்லத்தூரார்
எங்களூர் திரு......
நித்த விநொத வள
நாட்டு கிழார்க் கூற்ற
த்துக் குருகாடி குருகா
டி கிழான் பரமன் பழ
பாடி ஆன சோழர் கோ
ன் இட்ட அபிஷெகம்
காசு நிறைபொன் ஐ
ய்ம்பதிக் கழஞ்சு
பொன்...............

கல்வெட்டு—3

கருவறை வடபுறம் தொடங்கி மேற்குப்புறம் வரையிற் செல்லும் கல்வெட்டு

வரி 1. ஸ்ரீ கோச்சடை பன்மர் திரிபுவனச் சக்ரவத்திகள் ஸ்ரீ சுந்தர பாண்டிய தெவர்க்கு யாண்டு உ௰ ஆவது

வரி 2. கன்னி நாயற்று அபர பக்ஷத்து சத்தமியு......... வெள்ளிக்கிழமையு பெற்ற மிருக ஸ்ரீ ஷத்து நாள் செய மாணிக்க வளநாட்டு தி

வரி 3. ருவாரூற் கூற்றத்து(?) பரம் மண்டலத்து உடையார்க்கு......(சிதைந்துள்ளன)

இயற்கையின் இனிமை இலக்கியத்தில்

நாமக்கல் வி. ஆர். சௌரிராஜன்

இயற்கையின் இனிமையை இதயத்தில் நிறுத்தி அதனைப் போற்றிப் பாடாத கவிஞன் இல்லை எனலாம். கவியுள்ளம் காணத் துடிப்பதையெல்லாம் காட்டி நிற்பது இயற்கை. அவ்வியற்கைச் செல்வத்தைக் கவினுறப் பெற்றிருக்கும் தமிழகத்தின் நிலைக் கண்ணாடியாகத் திகழ்வது தமிழிலக்கியம். எழிலார்ந்த இத்தகைய பாக்களைத் தாங்கி நிற்கும் தமிழைக் கவிஞன் ஒரு மலர்க் காடாகக் காண்கிறான். தன்னைத் தும்பியாக எண்ணிக் களிக்கிறான்.

'கன்னற் பொருள் தரும் தமிழே நீ ஓர் பூக்காடு நானோர் தும்பி' என்னும் புரட்சிக் கவிஞரின் இதயத்தினின்றும் பொங்கிவரும் இச்சொற்கள் அக்காட்டில் மலர்ந்து கிடக்கும் —காலத்தால் கருகாத மலர்களை—அவைகளின் இதழ்களைக் காண வேண்டும் என்னும் பேரவாவினை நமக்கு ஊட்டுகின்றன. காணும் இயற்கைக் காட்சிகளெல்லாம் காணும் பாவலன் இதயத்தில் புகுந்து, கற்பனை வளமிக்க தேன் கவி மலர்களாக வெளிவரும்போது இதயத்தைச் சுண்டியிழுக்கும் திறன் பெறுகின்றன. அவை உள்ளத்தின் உள்ளிருந்து வருவன. இதயத்தில் ஏற்றம் பெற்றுத் திகழ்வன. உள்ளத்து உணர்ச்சிகளை உரைக்கும் ஓவியம் பாடல் "உலகின் அழகு வெள்ளமெல்லாம் கவிஞன் இதயத்தில் பாய்கின்றது. அவ்வியற்கை எழில் அவன் உயிரோடு இசைத்து ஒலிநயம் பெற்றுப் பாட்டாய் மூகிழ்க்கிறது. ஓவியமாய்த் தன்னுடன் உரையாடும் உலகிற்கு, கவிஞனது உயிர் பண் கலந்து விடை பகர்கின்றது. என்னும் கவிஞர் தாகூரின் இனிய சொற்கள் இதயத்தைக் கவர்வன. கற்பனைகள் உணர்ச்சிகள் இவற்றின் கலப்பு மொழியே பாட்டு. அதனை இயற்றுபவன் உணர்ச்சிகளுடன் விளையாடும் ஓர் அற்புதக் கலைஞன்.

'எளிமையும் உணர்ச்சி வேகமும் இசையினிமையும் தமிழின் சிறப்புக்களாம்." அச்சிறப்புக்கள் கைவரப் பெற்ற கம்ப நாடுடைய வள்ளல் காணும் புலர்ந்தும் புலராத இளங் காலை அழகிய சித்திரமாக அமைகின்றது. புற்களிலும் இலை களிலும் படிந்து நிற்கும் அவ்வழகிய பனித்துளிகள் முத்துக்கள் போல் பிரகாசிக்கின்றன. எழுகின்ற ஞாயிற்றுச் செம்மலோ, 'உங்கள் பணி முடிவுற்றது நண்பர்களே, வாருங்கள்' என அவற்றைத் தன்னிடத்தே அழைத்துக் கொள்கிறான்.

மூங்கிலிலை மேலே தூங்கும் பனிநீரே—அத்
தூங்கும் பனிநீரை வாங்கு கதிரோனே.

அனுதினமும் நடக்கின்ற காட்சிதான். ஆனல் கவிஞன் உள்ளமாகிய திருக்கோயிலினின்றும் அவை உயிரூட்டப்பட்டு வெளி வருகின்றன.

கவிஞருள்ளத்தில் வேற்றுமை இல்லை. அவர்கள் கருத்தெல்லாம் ஒன்றே. அந்தந்த நாடுகளின் இயல்பிற்கேற்ப அவர்களது கருத்துக்களின் சாயலும் அமைகிறது. ராபர்ட் ப்ரௌனிங் என்னும் ஆங்கிலப் பாவலர் இயற்றிய 'பிப்பா செல்கிருள்' என்ற காவியத்தில் மலரும் எழிற் பூக்கள் இவை. காலை மலரும் எழிலைக் கண்டு கவிஞன் உள்ளம் மலர்கிறது பேராசிரியர் ஆ. சீனிவாசராகவன் அவர்கள் தம் கவிதை உள்ளத்தில் தமிழாக்கப்பெற்று அழகூட்டப்பட்ட இதழ்கள் இவை.

பகல் !

மேகக் கிண்ணியில் ஒடுங்கிக் குமுறிய பகல்
இதோ வேகத்துடன் படுவேகத்துடன்
இரவின் விளிம்பின் மேல்
பொங்கி வழிகிறது சொக்கத் தங்கமாய்
....
முதலில் ஓர் ஒலி அலை, அதன் பின் ஒன்று
அலை அலையாகத் திரண்டது உதயம்;
திரண்டது; எழுந்தது; சிவந்தது.

அழகுத் தமிழ் எழிலார் நடையைக் கண்டு வியப்பதா அன்றி இயற்கைச் சித்திரத்தைக் கலைவண்ணம் சொட்டச் சொட்டப் படைக்கும் கவிஞனைப் போற்றுவதா?

இதோ கம்பர் பெருமான் காட்டும் எழிற் காட்சியொன்று சாலையை ஒட்டி நிற்கும் வயல் வெளியெல்லாம் காலை இளம் பரிதியின் ஒளியில் மூழ்கிக் கவிஞன் கண்களிலே பட்டுப் புத்தொளி பெறுகிறது. வரப்பிலே காணும் பனித் துளிகளெல்லாம் முத்துக்கள்; நீர் துள்ளும் மடையில் வெண் சங்குகள்; கரையெல்லாம் தங்கத் தகடு; இடையே செங்கழு நீர் மலர்கள்; அம்மலர் பூத்த நீர் வெளியில் புரளும் எருமை; சமநிலத்தில் பவளம் போல் மலர்ந்து கிடக்கும் செந்நிறப் பூக்கள். இவை மட்டுமா? அல்ல, அல்ல இதோ சாலிப் பரப்பினூடே மிதந்து வரும் அன்னங்களின் கூட்டம், அருகிலே செந்தேன் கவிந்த கரும்புத் தோட்டம். இவ்வளவும் இருக்குமிடத்தில் வண்டில்லாமல் உண்டா? இவ்வழகிய காட்சியைக் கவியரசர் கம்பர் சுவை கூட்டிக் காட்டுகிருர்.

வரம்பெல்லாம் முத்தம்;
தத்து மடையெல்லாம் பணிலம்; மாநீர்க்
குரம்பெலாம் செம்பொன்;
மேதிக் குழியெலாம் கழுநீர்க் கொள்ளை

பரம்பெலாம் பவளம் ;
சாலிப் பரப்பெலாம் அன்னம் ; பாங்கர்க்
கரும்பெலாம் செந்தேன் ;
சந்தக் காவெலாம் களிவண்டீட்டம்.

கடலலைகள் ஒன்றன்பின் ஒன்ருகப் பொங்கி எழுவது போல் கவிஞன் உள்ளத்தில் எழுச்சி அலைகள் அடுக்கடுக் காகக் கிளம்பி வருகின்றன. அந்தப் புனிதத்தில் நனைந்து நனைந்து நாமும் புத்துணர்ச்சி பெறுகிருேம்.

மார்கழி மாதத்தில் புலர்ந்து மலரும் ஒவ்வொரு காலைப் பொழுதும் இயற்கை இரசிகர்கள் உள்ளத்தைக் கவரும் தன்மை பெற்றது. இறைவனை நோக்கி உள்ளத்தை ஒரு முகப் படுத்திய ஆண்டாளின் திருப் பாவையாம் இதயத் தடாகத்தில் மலர்ந்து முப்பது கவிதைத்தேன் துளிகளும், மார்கழி என்னும் மலரின் எழில் இதழ்களாகக் காண்கின்றன எனின் மிகையாது.

ஒருகாலை நேரம் பொழுது புலர்ந்து வரும் சமயம். தந்தக் கட்டிலில் கண்வளரும் கன்னியைத் துயிலெழிப்புகிருர் கவிஞர். "இள நங்கையே! இதோ பாரம்மா! செந்நெல் இடையே கயல்மீன் துள்ளுகிறது. குவளை மலரில் வண்டு துயில்கிறது. உங்கள் புழக்கடைத் தோட்டத்தைப் பார் அங்கே குளத்தில் செங்கழுநீர் மலர் தன் நாயகனை வரவேற்க வாய் நெகிழ்ந்தது. காதலைக் காணு ஆம்பல் இதழ் குவித்தது இதோ கேள், இந்த ஆனைச் சாத்தன் பேச்சரவம். கோழிகள் நின்னை அழைக்கின்றன, மாதவிப் பந்தரில் குயிலி கான மிசைத்தாள், இறைவன் உறையும் இல்லத்தின் தலைவாயிலில் சங்கின் பேரொலியைச் செவி மடுத்தாயா? கீழ்வானம் வெள் ளென்றது. எருமைகள் மேயப் புறப்பட்டன. பார், "குத்து விளக்கெரிய தந்தக் கட்டிலில் கண் வளரும் இளங்கிளியே! இன்னம் உறக்கமா!"

ஓங்கு பெரும் செந்நெல் ஊடு கயல்உகள
பூங்குவளைப் போதில் பொறிவண்டு கண்படுப்ப
உங்கள் புழக்கடைத் தோட்டத்து வாவியுள்
செங்கழுநீர் வாய் நெகிழ்ந்து ஆம்பல் வாய் கூம்பின காண்
கீசுகீசு என்று ஆனைச் சாத்தன் கலந்து
பேசின பேச்சரவம் கேட்டிலையோ?
வந்தெங்கும் கோழி அழைத்தன காண் மாதவிப்
பந்தரில் பல்கால் குயிலினங்கள் கூவின காண்.
புள்ளும் சிலம்பின காண் புள்ளரையன் கோயில்
வெள்ளை விளி சங்கின் பேர் அரவம் கேட்டிலையோ?
கீழ்வானம் வெள்ளென்று எருமை சிறுவீடு
மேய்வான் பரந்தன காண்.
குத்து விளக்கெரியக் கோட்டுக்கால் கட்டில் மேல்...

புதுப்பொலிவும்: கணந்தோறும் மாறும் அற்புதக் காட்சி களும் கவிஞன் இதயத்தில் புதுத்தெளிவை யூட்டுகின்றன.

அலையடித்து நிலை கொள்ளாமல் பதறும் நீலக் கடலில் நடைபெறும் விந்தையெல்லாம் தெளிந்து கூறுகின்றான், இறைவனை 'ஆன்ம வேட்டையாடுபவனாக வருணிக்கும் கவிஞன் பிரான்சிஸ் தாம்ஸன். பேராசிரியர் அ. சீ. ரா. அவர்கள் கை வண்ணத்தில் மெருகு பெறுகிறது இப்பாடல்.

இயற்கை இரகசியங்கள் என்ற கதவின்
தாளைத்திறந்தேன்
கணந்தோறும் புதுப்பொலிவு பூண்ட வானத்தின்
முகத்தில்
அலை அலையாகப் புரண்ட பற்பல குறிப்பின்
பொருளெல்லாம தெளிந்தேன்
வெறிகொண்ட கடல் குமுறிக் கனைத்தது.
அதன் பெருமூச்சில் வெண்ணுரை திரண்டது
இந்நுரையிலிருந்து மேகங்கள் எழுந்தன.

தெள்ளிய குளத்தில் ஒரு வட்டக் கல்லை இட்டதும் சுழல் சுழல்களாக நீர் வட்டங்கள் மிதந்து வருவதுபோல் கவிஞனது கருத்துக் குவியலும் பல வட்டங்களாக வளைந்து வருகின்றது.

ஓடும் பகலைத் தொடர்ந்து வருகிறது மாலை. 'அந்திப் பொழுது' என்னும் பூங்காவில் இருவரும் சந்திக்கின்றனர். அன்றைய இறுதிச் சந்திப்பு இது. செத்தாரைச் சாவார் சுமப்பது போன்ற வாழ்வில் மடிந்து கொண்டிருக்கும் பகலுக்காக மடியப்போகும் மாலை மருகுகிறது. இதோ ஆதவனின் கடைசி ஒளித்திரள் ஒடுங்க பகல் இருளுக்கு இரையாயிற்று. அதற்கிடையே வரும் அந்திப் பொழுதோ அழகான விளக்குகளை ஏந்தி நிற்கிறது. தாம்சனின் இதயத்தில் மலர்ந்த மலர்ப் பொய்கை :

'பகற்பொழுதின் புனித சமாதியைச் சுற்றி
மினுமினுக்கும் தீபங்களை ஏற்றி வைத்துத்
தொழுதது அந்திப்பொழுது.

நெஞ்சின் ஒரு மூலையில் கீற்றாகப் படரும் சோகத் திரையை உயிர் வடிவாகக் காட்டுகின்றான். மேலை நாட்டு வைரத்துண்டுக்குப் பட்டை தீட்டி வண்ணம் ஏற்றுகிறார் பேராசிரியர் அ. சீ. ரா. அவர்கள்.

இதே அந்திப் பொழுதில் நிகழ்ந்த மற்றொரு நிகழ்ச்சி கவிச் சக்ரவர்த்தி கம்பனின் கண்களில் பட்டுப் புத்துருக் கொள்கிறது. அவர் காட்டும் காட்சி :

திடீரென மேகம் கவிந்தது. சூழ்ந்த அக்கரு மேகங்களைக் கண்ட மயில்கள் மகிழ்ச்சி பொங்கத் தம் அழகிய சிறகுகளை விரித்து ஆடின. அவ்வெழிலார் மயில் கூட்டத்தின் ஆடலுக்கேற்ப மலர்ந்த தாமரை மலர்கள் விளக்கம் தாங்கின. முகிலோடு முகில் பொருதி எழுப்பிய ஒலி மத்தளத்தின் குரலாகியது. தேன் பிழி மகரயாழ் போன்ற தம் குரலால் வண்டுகள் பண் இசைத்தன. காண நாங்களுள்ளோம்

என்பதுபோல் குவளை மலர்கள் இரசிக்கத் துவங்கின. இயற்கை நிகழ்ச்சியை நாடக அரங்காக்கி மகிழ்கின்றார் கம்பர். கவிஞனின் கட்புலனும் செவிப்புலனும் கூர்மையுற்றிருத்தல் வேண்டும். காணும் இனிய காட்சிகளெல்லாம் கவிஞன் இதயத் தடாகத்தில் பதிந்து தக்க பருவத்தில் எழில் மிக்கக் கவி(ன்) மலர்களாய் முகிழ்க்கின்றன. இதோ கம்பன் குரல்.

தண்டலை மயில்களாடத் தாமரை விளக்கந் தாங்கக்
கொண்டல்கள் முழவினேங்கக் குவளை கண் விழித்து நோக்கத்
தெண்டிரை யெழினி காட்டத் தேம்பிழி மகரயாழின்
வண்டுகளினிது பாட மருதம் வீற்றிருக்கும் மாதோ
—(நாட்டுப்படலம்)

'நெஞ்சிற் பதிவு செய்யச் செஞ்சொற் கவியே சிறந்தது' என செகவீர பாண்டியனார் மொழிந்தது எவ்வளவு உண்மையாகிறது.

பகலைக் கண்டோம் அந்தியை அனுகினோம். இரவெண்ணும் இறைவியைக் காண வேண்டாமா? ஆதவன் மறைய, திரையிடுவது போல் மெல்ல மெல்ல இருள் சூழத் தொடங்குகிறது. நட்சத்திர நங்கையர்கள் கண்சிமிட்டி அரிய ரகசியம் பேசி வானிலே தோன்றுகின்றனர்.

இந்திரநற் சால வித்தை யெதுவோவென் றிழைக்க
இட்ட திரை யெனத் திசைக வெட்டுமிருள் விரிய
அந்தரத்தே கண்சிமிட்டிச் சுந்தரத்தா ரகைகள்
அரியரகசியந்தமக்குள் ளறைந்து நகைபுரிய
(மனோன் மணீயம்)

இயற்கையின் இனிமையைக் காணப் பொழுதில்லையே என வருந்துகிறான் கவிஞன் வில்லியம் ஹென்றி டேவிஸ் தனது 'ஓய்வு' என்னும் கவிதையில்.

பட்டப்பகலில் ஓடையின் அலைமேல்
ஒளி புரளுகிறது: நட்சத்திர வரிசையாய்
இரவு வானம் பகலில் எதிர்ப்படும் இந்த விந்தையை
நின்று பார்க்க நேரம் வேண்டாமா?
(தமிழாக்கம், அ. சீ. ரா. 'இலக்கியமலர்கள்')

கவிஞன் நெஞ்சில் துளிர்க்கும் இச்சோகம் ரசிகன் மனத்திலும் படர்கிறது. இயந்திர கதியில் செல்லும் வாழ்க்கையில் இவற்றைக் காண நேரம் ஏது?

இவற்றையெல்லாம் சுவைத்துத்தான் கவிமணி அவர்கள்.

உள்ளத் துள்ளது கவிதை—இன்ப
உருவெடுப்பது கவிதை—

என்று புகழ்ந்து உரைத்தார் போலும்.

சொல்லாட்சித் திறனாய்வு:

"நிற்க அதற்குத் தக"

வித்துவான். நடேசநாராயணன்

மனித உளத்து நுண்மைச் சிந்தனையின் மறையுணர்வையும் புறத்திழுத்துப் புலப்படுத்தும் புலமைப் பெற்றி, வள்ளுவரிடம் தலைமைத் திறமாக அமைந்துள்ளது. அதனாற்றான் அவர் சொல்லாளும் பான்மையான் சுவையாளும் குறளமைத்தார். அழியாத கருத்துக் கமழும் அறிவு மலர் பூக்களான அக்குறள்கள், என்றும் வாடா ஏற்றம் பெற்றுள்ளன. அவை, தாம் பெற்றுள்ள சொற்களான்—அச்சொற்கள் ஆளப் பெற்றுள்ள திறத்தான் உலகியல் அடைவுகட்கும் உளவியல் தத்துவங்கட்கும் முற்றப் பொருந்தி விளங்குகின்றன. எடுத்துக்காட்டாக ஒரு திருக்குறளைக் காண்போம்.

கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக (391)

இக்குறள் பொருட்பாலில் இறைமாட்சிக்கு அடுத்து 'கல்வி' என்ற அதிகாரத்தில் நிறைமாட்சியாக நிலவுகின்றது.

கல்வியை வள்ளுவர் முதற் பொருளாகக் கொண்டமை பொருட்பாலில் இறைமாட்சிக்கு அடுத்து முதல் அதிகாரமே கல்வி என்று இருப்பதான் தேறலாம். அவ்வதிகாரத்தின் முதற்குறள் இதுவே. எடுத்த எடுப்பிலேயே மக்கட்கெல்லாம் அறிவுறுத்துகின்ற வகையில் 'கற்க' என்றார். மக்களெல்லாம் கல்விகற்றவர்களாக விளங்க வேண்டும் என்ற தமது நோக்கத்தை, ஆவலை 'கற்க' என்ற சொல்லை முதலில் வைப்பதன் மூலமாகக் காட்டுகின்றார். 'கற்க' என வியங்கோள் வினையாகக் கூறியிருப்பது, பிறரை மதிக்கும் பெருந்தன்மையைக் காட்டுகிறது.

கற்க என்றவர் உடனே அதையடுத்தே 'நிற்க' என்று கூறிவிடவில்லை. அவ்வாறு கூறின் பிழையாம் என அறிவார் வள்ளுவர். (இங்குப் பிழையென்பது தளை பொருந்தாமையையன்று; கருத்துப் பொருந்தாமையையாகும்) மன்பதை வாழ்வில் மக்களினத்தின் போக்கு எத்தகையதாயுள்ளது என்பதை அறிந்தவர் வள்ளுவர். அதனால் கற்க என்று கூறியதையடுத்தே நிற்க என்று கூறத் தயங்கினர். கற்க என்பதையடுத்து நிற்க என்று கூறிவிடின், மக்கள் எவ்வெவ்வற்றை எவ்வெவ்வாறு கற்றார்களோ அவ்வவ்வற்றை அவ்வவ்வாறே செயலாற்றக் கூடும் அல்லவா? அவ்வாறு செயலாற்றின் அச்

செயல் சில சமயங்களில் ஏன், பல சமயங்களில் தவருகவும் தீங்காகவும் முடியக்கூடும்.

பெரியோர்கள் சொன்ன அறிவுரைகளையும் பழமொழிகளையும் கற்கும் மக்கள், அவற்றிற்குத் தவருகவும் பிறழ்வாகவும் பொருள் கொண்டு அவற்றையே சரியான பொருள் என நம்பி, கற்றதை வாழ்க்கையில் கடைப்பிடிக்கின்றனர். அதன் காரணத்தால் அவர்கள் பல இடர்பாடுகட்கு ஆளாக நேர்கிறது. இதனை ஓர் எடுத்துக் காட்டால் அறியலாம். (தெரிந்த காட்டுத்தான்)

ஒரு வீடு தீப்பற்றி எரிந்து கொண்டிருந்தது. அதன் உரிமையாளர் பக்கத்துத் தெருவில் நண்பர் இல்லம் சென்றிருந்தார். அவர், செய்தியறிந்த பின்னும் பரபரப்பின்றி மெல்ல வந்தார். 'வீடு எரிவதை அறிந்த பின்னும் விரைவின்றி நடக்கலாமா' என வினவியதற்கு அவர், 'பொறுமை கடலினும் பெரிது அன்றோ' எனச் செப்பினராம். பொறுமையாக நடந்து போய் வீட்டைக் கண்டபோது வீட்டின் பெரும் பாகம் தீக்கு இரையாகிவிட்டிருந்தது. அந்தத் தீயைக் கடலும் வந்து அணைக்கவில்லை; கடலினும் பெரிதும் வந்து அணைக்கவில்லை.

இக்கதை நமக்கு ஒரு படிப்பினையன்றோ? வீட்டின் உரிமையாளன் சொன்ன அப்பழமொழியில் பிழை இல்லை. 'பொறுமை கடலினும் பெரிது' தான். ஆனால் எவ்வெச் செயலில் எவ்வெந் நேரங்களில் பொறுமையை மேற்கொள்ள வேண்டும் என்பதை அறியாததே குற்றமாயிற்று. அவன் கற்றனே யொழியக் கசடறக் கற்கவில்லை. எந்தெந்த நிலைமைக்கு எப்படி எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்பதை உணரவில்லை. அப் பழமொழியின் கருத்தைக் குற்றமற உணராது கற்றபடி நடந்ததனல் அவன் தன் வீட்டைத் தீக்குப் பறி கொடுக்க வேண்டியதாயிற்று. எக் கருத்தையும் கசடறக் கற்கா முன்னமே செயலாற்றின் இத்தகைய தீங்கே நேரும் என்பதை அறியலாம்.

வள்ளுவர் கற்க என்று கூறியவுடன் 'நிற்க' என்ற கருத்தை இடம்பெறச் செய்யாததற்குக் காரணம், இப்படிப் பட்ட—மேலே கூறியது போன்ற—தவறுகள் பல நேரக் கூடும் என்பதை அறிந்ததேயாகும். கசடறக் கற்கா முன்னமே ஒன்றைச் செயல்படுத்த முனைந்தால் தவறுகள் நேரவே நேரும் என்பதை உணர்ந்தவர் வள்ளுவர். அதனல் கற்க என்று சொன்னவர், அடுத்துக் 'கசடற' என்றார். இதனல், ஒன்றைப் பற்றிக் கசடறக் கற்ற பிறகே அதனைச் செயலளவில் மேற் கொள்ள வேண்டும் என்பதாயிற்று. (இடையில் குறளமைப்பைப் பற்றிய ஒரு தெளிவை ஏற்படுத்திக் கொண்டு மேலே ஆராய்வது நன்று)

கற்க என்றபின் நிற்க எனின் தளை கெடும் என்பதும் 'கசடற' என்றாலே அது பொருந்தும் என்பதும் அறிந்ததே. எனினும் வள்ளுவர், "கற்க என்றவுடனேயே அவ்வாறு நிற்றல் வேண்டும் என உணர்த்தலே நன்று" என்று கருதியிருப்பரா யின் தளை பொருந்துமாறு வேறு சொல்லைப் பெய்தேனும் அன்றி வேறு வகையாகத் தொடங்கியேனும் தம் கருத்தை அமைத்திருப்பர். இயலா அளவுக்கு அவர் ஏதும் புலமையில் வறுமையுடையாரல்லர். ஆனால் கற்றவுடனேயே அவ்வாறு நிற்றல் வேண்டும் என்பது வள்ளுவரின் கருத்தன்று. அதனால் தான் 'கசடற' என்றார். தளை பொருத்தத்துக்காக மட்டும் இவ்வாறு சொல்லை ஆண்டவரல்லர்; கருத்துப் பொருத்தத் துக்கே சொல்லாட்சியில், வைப்பு முறையில் சிந்தை செலுத்தி யிருக்கின்றார்.

மேற்போக்காகக் காணுங்கால், கருத்துப் பொருத்தம் கருதி இவ்வைப்பு முறையை மேற்கொண்டாரல்லர் என்றும் தளை பொருத்தம் கருதியே மேற்கொண்டார் என்றும் கருதத் தோன்றும். அவ்வாறு தோன்றுவதற்குக் காரணம், தக்க சொற்களைத் தேர்ந்த வள்ளுவரின் புலமையும் அவற்றை அவர் பெய்தாண்டுள்ள திறமையுமேயாம். உன்னி உணரினே இவ்வுண்மை புலனும்.

'இக்கருத்துக்கு ஈதன்றிப் பிற சொல் பொருந்தா' எனத் தோன்றுமாறு முழுப் பொருத்தமுள்ள சொற்களைத் தேர்ந் தெடுத்துத் தளை பொருந்தவும் வைத்தாளும் நுண்மாண் நுழைபுலம் மிக்கவர் வள்ளுவர். தளை பொருத்தம் கருதி மட்டுமே சொல்லையாளும் குறைப் புலமையர் அல்லர் அவர்.

சுருங்கக் கூறின் நாம் எடுத்துக் கொண்ட குறளிலுள்ள சொற்கள் அனைத்தின் வைப்பு முறையையும் முழுதுமாக உன்னிக்காணின் 'அவர் தளைக்காக மட்டுமே இவ்வைப்பு முறையை மேற்கொள்வாராயினர்' என்பது பொருந்தாமை உணர்வர். கருத்துப் பொருத்தம் கருதியே இவ்வைப்பு முறையைப் போற்றியுள்ளார் என்பதை இக்கட்டுரை முழுமை யும் படித்த பின்னே எவரும் தெளியலாம்.

இனிக்கட்டுரையைத் தொடர்ந்து காண்போம். வள்ளுவர், 'கற்க கசடற'—'கசடறக் கற்க'—என்றுதான் கூறிவிட்டாரே அடுத்தேனும் நிற்க என்ற சொல்லைப் பெய்திருக்கலாமன்றோ எனினும் பெய்தாரல்லர். அவ்வாறு பெய்யின் மற்றோர் குறை—மற்றோர் இடையூறு—ஏற்படக்கூடும் என்று கருதினர். கசடறக் கற்ற பிறகும் அதன்படி நின்று ஒழுகுவதில் சில தவறுகள்—தீங்குகள்—ஏற்பட இடம் உள்ளது என்று கருதினர்.

இக்காலத்தில் பல்திறத்த நூல்கள் வெளிவருகின்றன. அவற்றுள் நன்னூல்களும் உள்ளன; புன்னூல்களும் உள்ளன. மக்களின் உள்ளத்தை மாசுபடுத்தும் கதைகளும் நாவல்களும் கூடத் தோன்றுகின்றன. மக்களைத் தீச் செயல் செய்யத் தூண்டும் கட்டுரைகளும் கவிதைகளும்கூட உதிக்கின்றன. மக்களைக் கீழ்த்தர உணர்ச்சியில் இன்பங்காணுமாறு செய்யும் கிழ்மை இதழ்களும் திங்கள் இதழ்களும் மலிந்துள்ளன. அரசியல் பொருளாதார சமூகச் செய்திகட்கே முதலிடம் தர வேண்டியதை மறந்து சில நாளேடுகள், சிற்றின்பத்தைத் தூண்டும் செய்திகளையே விரிவாக அளிப்பதையும் காண் கிறோம்.

இவைகளைக் கற்கின்ற ஒருவன் அவ்வாறு கற்றபின் கற்ற தோடு மட்டுமன்றிக் கசடறவும் கற்றபின் தான் கற்றபடி நிற்கக் கூடுமன்றோ? தீய செயல்கட்கு இடமளிக்கும் இத்தகைய எழுத்துக்களே ஒருவன் என்னதான் ஐயமறக் கற்றாலும் சற்ற அந்நெறியில் ஒழுகுவது அவனுக்கு மட்டுமன்றி அவனைச் சார்ந்த பிறர்க்கும் தீங்காக முடியும் என்பதில் ஐயம் உண்டோ? ஆண் பெண் உடலுறவு பற்றிய முறையற்ற சில நூல்களைப் படித்துக் கெடுகின்ற இளைஞர்களையும் பார்க்க வில்லையா நாம்?

இவ்வாறெல்லாம் நேரக்கூடும் என்பதை உணராதவ ரல்லர் வள்ளுவர். அதனாற்றான் 'கற்க கசடற' என்ற பிறகும் 'நிற்க' என்று கூறத் தயங்கினர்; கூறாமலும் விட்டார். கசடறக் கற்றால் மட்டும் போதாது; கற்பவை கற்க வேண்டும். அப்போதுதான் தீங்கு ஏற்படாது என்று எண்ணினர். எனவே 'நிற்க' என்று கூறுதற்கு முன்னர், 'கற்பவை கற்க' என்று உணர்த்தினர்.

கற்க வேண்டும். கசடறக் கற்க வேண்டும். கற்பவை கற்க வேண்டும். அதன் பின்னரே கற்றபடி நிற்க வேண்டும். அறம் பொருள் இன்பம் வீடு பற்றிய தீமை ஏதும் இல்லாத நூல்களைத்தான் கற்க வேண்டும். கற்பதற்கு உகந்ததான நூல்கள் எவை எவையோ, நன்மை தரக்கூடியவைகள் எவை எவையோ அவைகளைத்தான் கற்க வேண்டும்.

கல்வி கரையில கற்பவர் காள்சில
மெல்ல நினைக்கிற் பிணிபல—தெள்ளிதின்
ஆராய்ந் தமைவுடைய கற்பவே நீரொழியப்
பாலுண் குருகிற் றெரிந்து　(நாலடியார்)

'கற்க கசடறக் கற்பவை' என்றார். 'கற்பவை கசடறக் கற்க' என்று பொருள்படுமாறு மாற்றித் தனை பொருந்த வேறு சொல் பெய்தும் கூறியிருக்கலாம். அவ்வாறு கூறாமல் 'கற்க

கசடறக் கற்பவை' என்று சொற்களை முறைப்படுத்தி வைத்துக் கூறியதன் காரணத்தை இதுகாறும் உலகியல் அடைவையொட்டி ஆராய்ந்தோம். இனி, அதே தொடரின் சொல் வைப்பு முறையை உளவியல் தத்துவத்தையொட்டிச் சிறிது ஆராய்வோம்: இறுதியாக 'நிற்க அதற்குத் தக' என்பதைப் பார்க்கலாம்.

'கற்க கசடறக் கற்பவை' என்ற தொடரிலுள்ள சொற்களின் வைப்பு முறை வாழ்வியல் அடைவுகட்குப் பொருந்துமாறு அமைந்திருப்பது போலவே மனித மனத்தின் போக்குக்கு ஏற்பவும் அமைந்துள்ளது. வள்ளுவர் மனித மனத்தின் போக்கினை உளத்திற் கொண்டே பல குறள்களை அமைந்துள்ளார் என்பதற்கான சான்றுகள் பல உள்ளன. ஈண்டு சிலவற்றை மட்டும் சுட்டிச் செல்வேன். விளக்கின் நீளும் என்றஞ்சிக் குறள்களை மட்டும் எடுத்துக் காட்டுவதோடு அமைவேன்.

எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியார்
திண்ணிய ராகப் பெறின் (666)

விரைந்து தொழில் கேட்கும் ஞாலம் நிரந்தினிது
சொல்லுதல் வல்லார்ப் பெறின் (648)

இன்பம் இடையறா தீண்டும் அவாவென்னும்
துன்பத்துள் துன்பங் கெடின் (369)

அறன் ஈனும் இன்பமும் ஈனும் திறனறிந்து
தீதின்றி வந்த பொருள் (754)

தொடக்கத்திலேயே பயனை உணர்த்திவிடும் இக்குறள்கள், மனித மனத்தின் போக்கினையொட்டி யாக்கப்பட்டிருத்தலைப் புலப்படுத்தும்.

குழலினிது யாழினிது என்பதம் மக்கள்
மழலைச்சொல் கேளா தவர் (66)

இதில் ஆளப்பட்டுள்ள 'தம்மக்கள்' என்ற சொல் மனித மனத்தை உணர்ந்து ஆளப்பட்டதே.

'கற்றிலனாயினும் கேட்க' (414) என்ற தொடரும், "எண்பொருளவாகச் செலச் சொல்லி" (424) என்ற தொடரும் மக்கள் மனமறிந்து எழுதப்பட்டதே.

நற்றாற்ற லுள்ளுந் தவறுண்டு அவரவர்
பண்பறிந் தாற்றாக் கடை (469)

எனைவகையான் தேறியக் கண்ணும் வினைவகையான்
வேறாகும் மாந்தர் பலர் (514)

இவை இரண்டு குறளும், வள்ளுவர் மனித மனத்தை எவ்வளவு நன்கு எடைபோட்டு வைத்துள்ளார் என்பதற்குச் சான்றாகும். இப்படி இன்னும் பல குறள்கள் உள்ளன.

விரித்தால் தனிக் கட்டுரையாகும். எனவே இதோடு நிறுத்தி மேலே செல்வேன்.

ஈண்டு நாம் எடுத்துக் கொண்ட குறளின் அமைப்பிலும் இத்தகைய மனத்தத்துவம் இடம் பெற்றிருப்பதைக் காண லாம். குழந்தை முதலில் 'சோச்சி' என்று சொல்கிறது. அப்போதே, 'இப்படிச் சொல்லக்கூடாது; சோறு என்று தான் சொல்ல வேண்டும்' என்று கட்டுப்பாடு செய்தால் —திருத்த முயன்றால்—அக் குழந்தை சோச்சி என்று கூறு வதையும் நிறுத்திவிடும் அதனால் தொடக்கத்திலேயே கசடறக் கூறவேண்டும் என்று எதிர்பார்க்கக் கூடாது. எவ்வாறேனும் பல சொற்களை, பல செய்திகளை முதலில் அக் குழந்தை தெரிந்து கொள்ள வேண்டும். அதன் பிறகே அதைப் படிப்படியாகத் திருத்தலாம். இதை உணர்ந்து தான் வள்ளுவர், 'கசடற' என்பதை முதலில் கூறவில்லை. 'கற்க' என்று சொன்ன பிறகே 'கசடற' என்றார்.

எடுத்த எடுப்பிலேயே சிறுவனிடம் இதைத்தான் கற்க வேண்டும், அதைத்தான் கற்கவேண்டும் என்று கட்டுப்பாடு விதித்தால்—'கற்பவை கற்க' எனின்—அவன் கல்வியின் பாலே வெறுப்புக் கொள்ளத் தொடங்கிடுவான். எனவே தொடக்கத்தில் அவனுடை போக்குப்படியே எதையாவது கற்கட்டும் என்று விட்டுவிடவேண்டும். அப்போதுதான் அவனுக்குக் கற்பதில் விருப்பம் ஏற்படும். முதலில் படிப் பதில் விருப்பம் உண்டாக்கி விட்டால் பிறகு படிப்படியாக 'இதைப்படி' 'அதைப்படி' என்றெல்லாம் வழிகாட்டலாம்; கட்டுப்படுத்தலாம். முதலில் ஊற்றுச் சுரந்து தண்ணீர் ஓடி வரட்டும். பிறகு அதனை மடைமாற்றம் செய்யலாம். இதை உணர்ந்த வள்ளுவர் முதலில் 'கற்க' என்று பொதுவாகச் சொன்னார். பிறகே 'கற்பவை' என்பதைப் பெய்தார்.

இவ்வாறு உணர்த்திய பிறகே வள்ளுவருக்கு உளநிறைவு ஏற்பட்டது. ஒருவன் கற்க வேண்டியதைக் கசடறக் கற்று அதன் பின்னரே கற்ற அவ்வழி நிற்றல் வேண்டும். அவ்வாறு நின்றால் தவறுக்கு இடமில்லை; தீங்குக்கு வழியில்லை என்று தெளிந்தார் வள்ளுவர் பிறகுதான் 'நிற்க' என்றார்.

கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க............................

கற்பவை கசடறக் கற்றபின் நிற்க என்று செப்பிய பிறகும்—கூட வள்ளுவருக்கு முழுநிறைவு (பூரண திருப்தி) ஏற்படவில்லை போல் தெரிகிறது. அதனால்தான் இறுதியில் 'அதற்குத்தக' என்றும் சேர்த்தார். அவ்வாறு சேர்த்த பிறகே அவர் குறைவில் நிறைவு பெற்றிருத்தல் வேண்டும்.

கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக.

கற்க வேண்டிய நூல்களைக் கற்க வேண்டும். அவ்வாறு கற்ற பிறகே அதனை வாழ்வில் மேற்கொண்டு ஒழுகல் வேண்டும்—கற்ற அவ்வழி நிற்றல் வேண்டும். இவ்வாறியம்புவதால் கற்க வேண்டியவை அனைத்தையுங் கற்ற பிறகுதான் செயல்பட வேண்டும் என்று கருதிக் கொள்ளல் வேண்டா. கற்க இயன்ற வரையிலாவது கசடறக் கற்றல் வேண்டும். எவ்வளவு குறைந்த அளவுதான் கற்றிருப்பினும் தாழ்வன்று ஆனால் கற்ற அந்த அளவையேனும் குற்றமறக் கற்றிருக்க வேண்டும். பிறகே கற்றவாறு செயலாற்ற வேண்டும். அங்ஙனம் செயலாற்றும்போது கூட காலத்தையும் இடத்தையும் நோக்கத்தையும் அறிந்து இன்றியமையாத போது (அவசியமானபோது) சூழ்நிலைக்கு, சந்தர்ப்பத்துக்கு ஏற்றாற் போல நடந்து கொள்ள வேண்டும். இதனை வலியுறுத்துகின்ற நோக்கோடுதான் 'அதற்குத்தக என்ற தொடரையும் உடன் சேர்த்தார்; 'அதற்குத்தக நிற்க' என்றார்.

'அதன்படி நிற்க' என்று சொல்லாமல், அதற்குத் தகுந்த மாதிரி—கற்றதற்கு ஏற்றாற்போல—ஒழுக வேண்டும் என்றார். 'தக' என்ற சொல்லில் நுட்பமான கருத்தை அமைத்துள்ளார். அதாவது சில நேரங்களில் கற்றபடி நடக்க இயலாவிட்டாலும் தவறில்லை என்ற குறிப்பை அதில் உணர்த்தியுள்ளார்.

கற்க வேண்டிய வற்றைக் கசடறக் கற்றபிறகும் அதன்படி நிற்க முடியாமல் இருக்கலாம். அவ்வாறு நிற்பது (ஒழுகுவது) சில நேரங்களில் தவறாகவும் முடியலாம். அதனால் கற்றது இவ்வாறுதானே என்று எல்லா நேரங்களிலும் எல்லாரிடத்திலும் அவ்வாறே நடந்திடக்கூடாது. சந்தர்ப்பச் சூழ்நிலைகளை எண்ணி அதற்கேற்றாற்போல் நடக்கவேண்டும். இக்கருத்து வள்ளுவரின்

செயற்கை அறிந்தக் கடைத்தும் உலகத்து
இயற்கை அறிந்து செயல் (637)

என்ற குறளாலும் விளக்கப்படுகிறது. இக் குறளுக்குப் பரிமேலழகர் கூறும் உரையினை உன்னுமின்.

"நூல் நெறியான் வினைசெய்யுந் திறங்களை அறிந்த
விடத்தும்
அப்பொழுது நடக்கின்ற உலக இயற்கையை அறிந்து
அதனோடு பொருந்தச் செய்க
நூல்நெறியே யாயினும் உலக நெறியோடு பொருந்தாதன
செய்யற்க. செய்யின் அது பழிக்கும்"—பரிமேலழகர்

இதனால் சில நேரங்களில் சில இடங்களில் கற்றபடி நடக்க முடியாத நிலையும் நேரும் என் அறியலாம்.

நூலறிவு வேறு; உலக அறிவுவேறு. நூலறிவால் உலக அறிவைப் பெறக்கூடும் எனினும் (உலகறிவால் நூலறிவைப் பெற வியலாது) இரண்டுக்கும் சிறிது வேற்றுமையுள்ளது. அதனால்தான் வள்ளுவப் பெருந்தகையார்,

> உலகத்தோ டொட்ட ஒழுகல் பலகற்றும்
> கல்லார் அறிவிலா தார் (140)

என்று குறள் யாப்பாராயினர். ஈண்டு உலகத்தோடு ஒட்ட ஒழுகக் கற்றலையும் நூல் கற்றலையும் வெவ்வேறாகக் கூறி உணர்த்தியதை உன்னுக. நூல் பல கற்றிருப்பினும் உலகத்தோடு ஒட்டி வாழ்கின்ற முறைமையையும் அறிய வேண்டும்.

உலகத்தோடு ஒட்டி வாழ்கின்ற முறைமையை 'இப்படித் தான்' என்று திட்டவட்டமாகச் சொல்லிவிட முடியாது. அது இடத்தாலும் காலத்தாலும் சூழலாலும் அவ்வப்போது மாறி மாறி அமையலாம். ஓரிடத்திலோ காலத்திலோ சூழலிலோ நன்றாயமைந்தது; பிறிதோரிடத்திலும் காலத்திலும் சூழலிலும் தீமையாகவும் ஆகலாம். எனவே 'இப்படித் தான் நடக்கவேண்டும்' 'அப்படித்தான் நடக்கவேண்டும்' என்று உறுதியான நிலைத்ததான எந்தத் திட்டத்தையும் எய்தல் இயலாது. 'உலகத்தோடொட்ட' என்பதற்குப் பரிமேலழகர் தரும் விளக்கத்தையும் உன்னுதல் ஈண்டு ஏற்புடைத்தாம்.

> அறநூல் சொல்லியவற்றுள் இக்காலத்திற்கு ஏலாதன
> ஒழிந்து' சொல்லாதன வற்றுள் ஏற்பன கொண்டு
> வருதலான் அவையுமடங்க 'உலகத்தோ டொட்ட'
> என்று கூறினர்—(140)

இதுகாறும் விளக்கியவற்றான் நூலறிவு பெற்றால் மட்டும் போதாது என்றும் உலகத்தோடொட்ட ஒழுகும் அறிவைப் பெறுவதே இன்றியமையாத தென்றும் தெளியலாம்.

இன்னும் ஆழ்ந்து நோக்கினால் நூலறிவு என்பது உலகத்தோடு ஒட்ட ஒழுகலுக்குத் துணை செய்யவேண்டிய ஒரு கருவிதான் என்பது புலப்படும். அதனால்தான் வள்ளுவர் ''கற்றிலனாயினும் கேட்க'' (414) என்றும் குறள் யாத்தார். இதில் நூலறிவு இல்லெனினும் குறையன்று என ஒரு நிலையில் நூலறிவையும் புறக்கணித்தார். ஆனால் உலகத்தோடு ஒட்ட ஒழுகலையோ, எந்நிலையிலும் அவர் புறக்கணிக்கத் துணிய வில்லை. அதனை இன்றியமையாததாக, முதன்மையானதாகக் கருதினர். அதுவே அறிவு என்றும் அவர் கருதினர் என்பதைக் கீழ்க்காணும் குறள் புலப்படுத்தும்.

எவ்வ துறைவது உலகம் உலகத்தோடு
அவ்வ துறைவது அறிவு (426)

நூலறிவை உலகத்தோடொட்டஒழுகும் அறிவிற்கு அடுத்தோ அன்றி அதற்குத் துணையாகவோ தான் கருதினர்; உலகத்தோடொட்ட ஒழுகலுக்குத்தான் நூலறிவே தவிர, நூலறிவிற்கேற்ப உலகத்தோடொட்ட ஒழுகலன்று. இதனை 'உலகத்தோடொட்ட ஒழுகல் கல்லார் பல கற்றும் அறிவிலாதார்' (140) என்ற கருத்து உறுதிப்படுத்தும். பலகற்பது எதற்காக? உலகத்தோடொட்ட ஒழுகுவதற்காக என்கிருர்.

ஆகவே வாழ்க்கையின் இன்பத்திற்கும் அமைதிக்கும் தான் அறநெறிகளே யொழிய அறநெறிகட்காக வாழ்க்கையன்று என அறியலாம். வாழ்க்கையின் அமைதிக்கோ இன்பத்திற்கோ எங்கேனும் அறநெறி இடையூருக அமையுமெனின் அங்கே அறநெறியைப் புறக்கணித்து விடலாம். இத்தெளிவு பெற்ற காரணத்தினுல் தான்,

தன்நெஞ் சறிவது பொய்யற்க பொய்த்தபின்
தன் நெஞ்சே தன்னைச் சுடும் (293)

என்று அறிவுறுத்திய வள்ளுவர்,

பொய்மையும் வாய்மையும் இடத்த புரைதீர்ந்த
நன்மை பயக்கும் எனின் (292)

என்றும் உரைப்பாராயினர்.

உண்மை பேசவேண்டும் என்பது அறநெறி. அந்த நெறியை நிலை நிறுத்தும் வகையில் மனிதன் வாழவேண்டுவது இன்றியமையாததே. ஆயின் பொது நன்மைக்கு அந்நெறி இடையூரும் போது அதனைப் புறக்கணித்தல் எவ்வாற்ருனும் குற்றமன்று. பொய், உண்மைக்கு முற்றும் மாருனதுதான். எனினும் பொது நன்மையைக் கருதிச் சிலநேரங்களில் சில இடங்களில் பொய் பேசத்தான் வேண்டும். நோயாளியின் நன்மைக்காகப் பொய்பேசுவது மருத்துவருக்கு இன்றியமையாததன்ருே?

அறநெறிகள் செயற்கையானவை. (இதனை 'செயற்கை அறிந்த'—637—என்ற குறளால் அறியலாம்) அரசியல் சட்டங்களைப்போல் நம்மால் வகுக்கப்படுபவை. அதனுல்தான் அந்நெறிகள் நாட்டுக்கு நாடு மதத்துக்கு மதம் இனத்துக்கு இனம் மாறுபட்டும் வேறுபட்டும் பிரிந்தும் திரிந்தும் உள்ளன. பரந்த நோக்கில் இதை உணர்ந்து பார்த்தால் வாழ்க்கையின் நலத்துக்கே அறநெறிகள் அமைந்தன என்பதை உணரலாம் பன்மையில் சமுக வாழ்க்கைக்கு மட்டுமன்று ஒருமையில் தனி மனிதன் வாழ்க்கைக்கும் இம்முடிவு ஒருவாறு பொருந்தும்.

ஒருகால் அறநெறிக்காகத் தனிமனிதன் வாழலாம். உறுதியாக இருந்தால் வாழமுடியும். ஆனால் சமூகம் அவ்வாறு வாழமுடியாது. சமூக நன்மைக்காகவே அற நெறிகள் அமைதல் வேண்டும். தனி மனிதன்கூட அறநெறிக் காகவே வாழ்வதென்பது முழுதும் பொருந்தா. சில நேரங் களில் சில இடங்களில் பொது நன்மையோ பிறர் நன்மை யையோ கருதியேனும் அறநெறியினின்றும் சிறிது மாறுபடத் தனி மனிதனும் தயங்கக்கூடாது, அறநெறிக்காகவே வாழ்வ தாகச் சொல்லித் தயங்கினால் அது சிறப்பாகாது. அறநெறிக் காக வாழ்வதைவிட மக்கட்காக வாழவேண்டும். மக்களுக் காக வாழும் வகையில் அறநெறி உதவும்போதெல்லாம் அதனைப் போற்ற வேண்டும். அவ்வாறு உதவாத இடங்களில் அதனை ஒதுக்கி வைக்கவேண்டும். இடையூறாக நிற்கும் இடங்களில் அதற்கு முரணாகவும் நடக்க வேண்டும் இதனை உணர்ந்தே வள்ளுவரும்,

> நற்ருற்ற லுள்ளுந் தவறுண்டு அவரவர்
> பண்பறிந் தாற்ருக் கடை (469)

என்று கூறினார். அவரவருடைய பண்பு அறிந்து தன்மை யறிந்து நோக்கமறிந்து செய்யாவிட்டால் சரியான செயலுங் கூடத் தவருக முடிந்திடுமாம். நல்ல செயலுங்கூடக் கெட்ட செயலாக முடிந்திடுமாம். ஆகவே நல்லதே செய்வதாயினும் ஆளின் பண்பைப் பார்த்தே செய்தல் வேண்டும். ஒருவருடைய பண்பு, அவருடைய மனநிலைக்கேற்ப வெவ் வேறு நேரங்களில் வெவ்வேருக மாறியமைவதும் உண்டு என்பதையும் ஈண்டு நினைவிற் கொள்ள வேண்டும். ஒரோ வோரமயங்களில் தீமை செய்வதனாலேயே பிறர்க்கு நன்மை விளைக்கவும் நேரலாம்.

இவ்வாறு கருதுவதற்கு மேற்கூறிய குறளே இடமளிக் கின்றது. 'நன்ருற்றலுள்ளுந் தவறுண்டு' என்ருல் 'தீய வாற்றலுள்ளும் நன்றுண்டு' எனல் பொருந்துமன்ருே? இத ஞல் சில சமயங்களில் நன்மை கருதித் தீமை செய்வதிலும் தவறில்லை என அறியலாம். நாம் கற்றது இவ்வாறுதானே என்று அதன்படியே எப்போதும் எங்கும் ஒழுகிவிடக் கூடாது. "நோயாளி இறப்பினும் கவலையில்லை: நான் நூலில் கூறியுள்ளபடி உண்மையைத்தான் சொல்வேன்" என ஒரு வைத்தியன் சொன்னுல் அவனை 'அறநெறி போற்றுவோன்' என நாம் சிறப்பிப்போமா?

தனி மனிதனை நோக்கத் தீமையாயமையும் ஒரு செயல், நாட்டை நோக்க நல்லதாயமைவதும் உண்டு. அதனுல்தான் அறத்துப் பாலில் 'புறங்கூறல் தீது' என்ற வள்ளுவர், பொருட்பாலில் அதனை ஒற்றற்குரிய பண்புகளில் ஒன்ருகக்

குறிப்பால் உணர்த்துவர். தனிமனிதனுக உள்ளபோது புறங்கூறல் கூடாது. அவனே அரசாங்க ஒற்றனுகப் பணி யாற்றுங்கால் புறங்கூறல் இன்றியமையாததே.

பொறையுடைமை என்ற அதிகாரத்தில் 'ஒறுத்தல் தகாது' என்றவர், செங்கோன்மை என்ற அதிகாரத்தில் ஒறுத்தல் வடுவன்று' என்று கூறியுள்ளார். மன்னன், தனி மனிதனுக இருக்கும்போது ஒற்றுதல் கூடாது. அவனே நாட்டின் தலைவனுக இருக்கும்போது ஒறுத்தல் இன்றி யமையாததே.

மானம் என்ற அதிகாரத்தில் உயிரைவிட மானம் சிறந்த தென்றும் உயிரை இழந்தேனும் மானத்தைக் காப்பதே நன்று (969) என்றும் கூறிய திருவள்ளுவர், குடிசெயல் வகை என்ற அதிகாரத்தில் அதே மானத்தைக் குடும்பத்துக் காக வேண்டி ஒருவன் இழத்தலும் நன்றே; இழக்கவும் வேண்டும் (1028) என்று குறிப்பாக உணர்த்துவர். இவை யனைத்தும், வாழ்க்கைக்காகத்தான் அறநெறிகள்' என்றும் 'அறநெறிக்காக வாழ்க்கையன்று' என்றும்தாம் உணர்த்து கின்றன.

எனவே எங்கும் எதுவும் எப்போதும் நன்ருயமைந்திடுவ தில்லை. ஓரிடத்தில் நன்ருயமைவது மற்ருேரிடத்தில் தீமையாயமைகிறது. ஆகவே கற்றபடி நிற்க என்றுதான் வள்ளுவர் கூறிவிட்டாரே என்று எப்போதும் எங்கும் எவரிடத்திலும் படித்தபடியே நடந்திடல் வேண்டும் எனப் பிடிவாதமாக—விடாப்பிடியாக—இருந்திடக்கூடாது.

'கற்றபடிநட' என்று கூறிய வள்ளுவர், அதேகுறளில் "சிலநேரங்களில் சிலரிடத்தில் சிலவற்றுக்காக அவ்வாறு நடக்க முடியாமலும் போகலாம்; கற்றதற்கு மாருகவும் நடக்க நேரலாம்; நடக்கவும் வேண்டும் அவ்வாறு நடப்பதில் ஏதும் குற்றமுமில்லை." என்ற கருத்தையும் குறிப்பாக உணர்த்திவிடுகின்ருர். அந்தக் குறிப்புத்தான் "தக" என்ற சொல்லில் அமைந்துள்ளது. அதனுல்தான் வள்ளுவர், 'நிற்க' என்பதையும் 'அதற்குத்தக நிற்க' என்ருர்.

'அதன்படி நிற்க' என்பதற்கும் 'அதற்குத்தக நிற்க' என்பதற்கும் உள்ள வேறுபாட்டை நுனித்தாராயின் தெளிந் திடலாம். 'அதன்படி' என்ருல் எந்தச் சூழ்நிலை எப்படி இருந்தாலும் கற்றது எப்படியோ அப்படியே நடந்துவிடுவது என்ருகும். 'அதற்குத்தக என்ருல் சந்தர்ப்ப சூழ்நிலைகளை யொட்டி, இடம் பொருள் ஏவல் நோக்கம் தேவை முதலிய வற்றை எண்ணி அவசியம் ஏற்பட்டால் கற்றதற்கு மாருகவும் நடக்கலாம் என்ருகும். 'தக' என்பதற்கும் ('அதன்')படி என்பதற்கும் உள்ள வேறுபாடு இத்தகைத்தாம்.

"கொல்லேறு தழுவல்!"

வித்துவான். தே. ப. சின்னுசாமி

கொல்லேறு தழுவல் என்பது ஏற்றினைத் தழுவுதலை என்க. இது பண்டைத் தமிழரின் பழக்கத்தில் ஒன்றாகும். "மாயோன் மேய காடுரை யுலகிற்கு"க் கருப்பொருள் கூறும் நம்பியகப்பொருள் "மூவின மேய்த்தல் சேவினந் தழுவல்" (நம்பி—22) என அந்நில ஆயர்களின் தொழிலாக ஏறு தழுவுதலைக் கூறுகின்றது. அதற்கியைய "ஏற்றுப்பறை"—ஏறங்கோட்பறையையும் கூறுகின்றமை காண்க.

ஏறுதழுவுதலை "நெறியிற் கூட்டமாகிய மறநிலையின்பம்" என்று சூடாமணி நிகண்டு கூறுவதும் நினைத்தற்குரியது. மற்று புறப்பொருள் வெண்பாமாலையுள் பெருந்திணைப் படலத்தில் "ஏறு கொள் வென்றி" என வொருதுறையமைந்துள்ளதுமறிக. ஏறுகொள் வென்றியாவது ஏற்றினைத் தழுவி எய்தும் வென்றியையாம். இவ்வகையில் பெறும் மணத்தை அசுரத்தில் அடக்குவர் இறையனார் களவியலுரையார். அசுரமாவது, கொல்லேறு கொண்டேன் இவளை எய்தும்......என

எந்த இடத்திலும் எந்த நேரத்திலும் எப்படிப் பட்டவரிடத்திலும் கற்றவாறுதான் நடந்து தீரவேண்டும் என்பதில்லை. கற்றதற்கு மாறாக நடக்க நேரினும் தயங்காமல் நடந்து நன்மையை விளைப்பதே நன்று. கற்றதற்கு மாறாகவும் நடக்கலாம் எனக்கண்டோம். ஆனால் அதன் விளைவு, கற்றவன் என்பதற்கு இழுக்காமாறு அமைதல் கூடாது. கற்றவனாக வாழவேண்டும் என்பதற்காகக் கற்றபடி வாழ்ந்தாக வேண்டும் என்பதில்லை. கற்றபடி வாழ்வதென்பது செய்யும் செயலைச் சார்ந்தது. கற்றவனாக வாழ்தல் என்பது, இறுதியில் விளையும் பயனைப் பொறுத்தது. பயனே முதல் நோக்கம்; செயல் முதல் நோக்கமன்று. பயனை முதல் நோக்கமாகக் கருதியதால்தான் இரண்டாம் குறளிலேயே வள்ளுவர், 'கற்றதனாலாய பயன் என் கொல்?' என வினவினார்; பயனை முதலில் எதிர்பார்த்தார். (இவ்விடத்தில் நிஷ்காமிய கர்மத்தை நினைவு கூர்ந்து குழம்பக் கூடாது அது வேறு காரணம் பற்றியது. ஈண்டு அதனை விரித்துரைக்க வேண்டிய அவசியமில்லை என விடுகிறேன்.)

பயனை நோக்க, சில நேரங்களில் கற்றதற்கு மாறாகவும் நடக்கலாம்; நடக்கவும் வேண்டும். இப்போது மீண்டு "நிற்க அதற்குத்தக" எனும் தொடரை உன்னுமின்! அதில் இக்கட்டுரையில் விளக்கிய கருத்தெல்லாம் நுண்மையாகப் பொதுளப் பெற்றிருத்தலை உணரலாம்.

இவ்வாறு சொல்லிக் கொடுப்பது. இஃது அரும் பொருள் வினை நிலை எனவும்படும்.

கற்ருேர் ஏத்தும் கலித்தொகையாம் முல்லைக் கலியில் முதலைந்து பாடல்கள் இதுபற்றி விளக்கமாக, விரிவாக, இலக்கியச் சுவைபட நாடக ஓவியமாக அமைந்துள்ளன.

முல்லையந் தண் பொழிலிலே "தண்ணறும் பிடவமுந்தவழ் கொடித் தளவமும், வண்ணவன்ருேன்றியும், வயங்கினர்க் கொன்றையும், அன்னவை பிறவும் பன்மலர் துதையத் தழை யுங்கோதையுங் கொண்டு திளைத்து விளையாடினுள் மடமொழி மங்கை யொருத்தித் தன்னுயத்துடன்.

திண்டோள் திறலொளி மாயப்போர் மாமேனி அந்து வராடைப் பொதுவனே முல்லையுங் குருந்துங் கோடலும், பாய்குருங் கல்லவுங் கடத்தவுங் கமழ் கண்மலைந்து குடவரை நங்கோவலனே போன்று கொன்றையந்தீங் குழல் ஊதி அவ் வழிச் சென்ருன்.

பண்ணமைந்த குழலோசையில் உள்ளத்தை நெகிழவிட்ட அப்பாவை அத்தீங் குழலிசை வந்தவாற்றை ஏறிட்டு நோக்கி ஞள். கண்ணிற்கு விருந்தோ! கருத்திற்கு விருந்தோ! கவி கற்பனைக்கு விருந்தோ என்ன அம்மகளிர் குழாமைக் கண்ட னன் அக்காளை!

முல்லை முறுவலித்தன. குவளையவிழ்ந்தன. தாமரை மலர்ந்தது இளம்பருதி கண்டு, "கண்ணெடு கண்ணிணை நோக்கொக்கியது." "செம்புலப்பெயல்நீர் போல அன்புடை நெஞ்சத்தாங் கலந்து நின்றது. இயற்கை தன் கருத்தை நிறைவேற்றியது. முல்லையந்தீம் பொழில் பன்னுள் இந் நிகழ்ச்சினைக் கண்டது, தோழி வாயிலானுள். மலரன்ன கண்ணுள் அருமையறியாது அலரெழுந்தது ஊரில் காவல் மிக்கது தலைவிக்கு! "அழல் போலும் மாலைக்குத்தூதா— ஆயன்—குழல் போலுங் கொல்லும் படை" (கு-1228) யாகியது தலைவிக்கு. தலைவன் தவித்தான். தோழியை வாயிலாகக் கொண்டு தமரை அணுகி மன்றல் வேண்டினன்.

"கடாஅக்களிற்றினுங் கண்ணஞ்சா ஏற்றை—விடாஅதுநீ கொள்குவை"யாயிற் கொழுங்கொடியைக் கொடுப்போம்; அன்றேல் 'கொல்லேற்றுக் கோடஞ்சுவானை மறுமையும்" "புல்லலாளே ஆயமகள்" (கலி. 103—63,64) என்றும்; "வளியறியா உயர்காவல் கொண்டு—நளிவாய் மருப்பஞ்சும் நெஞ்சினர் தோய்தற்கெளியவோ ஆயமகள் தோள்" (கலி: 103-68,70) என்றும்; "பொருபுகல் நல்லேறு கொள்பவ ரல்லால்—திருமாமெய் தீண்டலரிது" என்றுங் கூறி மறுத்து விட்டனர்.

தலைவன் ஏற்றினைத் தழுவியே தலைவியைக் கொள்கின்றேன்; அவள் சுற்றத்திற்குக் கூறுக என்றியம்பிச் சென்று விட்டான். நற்குடி ஆயர்கள் உடனே ஏறுவிடுகின்ற விழவினைத்துவக்க விழைந்தனர்.

ஊரெங்கும் ஏறங்கோட் பறையின் ஒலிகேட்டது! இளங்காளையர்கள் உள்ளம் துள்ளித் குதித்தது சேங்கன்று போல! கோதை வண்டார்க்கும் கொடியிடையார்கள் தத்தம் காதலர்கள் தம்தம் ஏற்றைத் தழுவி, தங்களைக்கொள்ள வேண்டுமென்று தோயா விழுப்புகழ்த் தெய்வம் பரவினர். அதில் நம் தலைவியும் ஒருத்தி!

ஊர்மன்ற மெங்கும் ஒரே கூட்டம்! மெல்லிணர்க் கொண்றையணிந்த மெல்லியர்கள் ஒருபுறம்! மென்மலர்க் காயா அணிந்த சொல்லிசை நல்லார்கள் ஒருபுறம்! குல்லையுங் குருந்தமும் சூடிய கொழுங் கொடிக் கோதையர் ஒருபுறம்! கமழ் கண்ணி மலைந்த கருங்குவளைக் கண்ணார் காரிகையர்கள் ஒருபுறம்! முல்லை முகையுமுருந்து நிரைத்தன்ன பல்லையுடைய பைந்தமிழ்ப் பாவையர் ஒருபுறம்! பெருமழைக் கண்ணார் ஒருபுறம்! மடஞ்சார்ந்த சொல்லர் ஒருபுறம்! சுடருங் கனங் குழைக்காதினர் ஒருபுறம்!

இவ்வாறாக "பல்லான் பொதுவர் கதழ்விடைகோட்" காண்பான் வேண்டி சூழ்ந்து அண்யணியாக நின்றிருந்தனர். அக்கூட்டத்தில் நம் தலைவியும் அவள் தம் உயிர்த் தோழியும் நின்றிருந்தனர். மன்றத்தின் தொழுவிடத்தே ஆயர்கள்.

"அணி வரம்பறுத்த பெண்காற் காரியும்" (கலி: 103–12); "வான் பொறி பரந்த புள்ளி வெள்ளையும்" (கலி: 103–16); "வளையுபு மலிந்த கோடணிசேயும், பொருமுரண் முன்பின் புகலேறு பலவெய்த, அரிமாவும். பரிமாவும் களிறுங் காரமும்" (கலி: 103–16,18); "பானிற வண்ணன் போற் பழிதீர்ந்த வெள்ளையும்" (கலி: 104-10) ஆகிய கொல்லேறுகளை "சீறருமுள் முனைன் கணிச்சிபோல் கோடுசீஇ" (கலி: 101–8) அலங்கரித்து அணியணியாக நிறுத்தினர்.

அவ்வழி "வெருஉப்பிணைமானைக்கின் நல்லாட் பெறூஉம்–குரூஉக்கட் கொலையேறு கொள்வான்" என்றும், "வரிக்குழை வேயுறழ் மென்தோள் துயில் பெறும் வெந்துப்பிற்—சேஎய் சினனஞ்சான் சார்பவன்" (கலி: 104–23,26) என்றும் ஆயர் முறையினால் பறையறைந்தனர்.

"பறையெழுந் திசைப்பப் பல்லவர் ஆர்ப்பக்" (கலி: 104–29) "காரெதிர் கலியொலி கடியிடியுருமின்னியங் கறங்க—ஊர்பெழுகிளர் புளர் புயன்மங் குலினறை பொங்க—நேரிதழுநிரை நிரை நெறிவெறிக் கோதையரணி நிற்பச்—சீர்

கெழுகிலேச் செயிரிகன் மிகுதியிற் சினப்பொதுவர்—தூர் பெழுதுதை புதைதுகள் விசும்புற வெய்த—லார்புடன் பாய்"ந்தாரகத்து" (கலி : 105-24,29) "எழுந்தது துகள்—ஏற்றனர் மார்பு—கவிழ்ந்தன மருப்புக்—கலங்கினர் பலர்" (கலி : 102-2,24)

தலைவி தலைவனைத் தன் கண்வலையால் தேடிக் கொண்டிருந்தாள். தலைவன் எதிர்ப்புறத்தில் நின்று தலைவியையும் உற்று நோக்கினன். தோழி கண்டுவிட்டாள். நேரிழைக்குங் காட்டினள். கண்டாள் அவளும்! கண்டான் அவனும்! விழியால் விடைகொடுத்தாள். வீறிட்டெழுந்தான். அனைவரும் நோக்கினர். "ஏறும்வருந்தின. ஆயரும்புண் கூர்ந்தார்." (கலி : 101-4)

கொள்வாரைக் கொள்வாரைக் கோட்டுவாய்ச் சாக்குத்திக்
கொள்வார்ப் பெருகக் குரூஉச் செகில்காண்"

(கலி: 105—35,6)

"பாடேற்ற வரைப் படக்குத்திச் செங்காவிக்—கோபெழுந்தாடுங் கணமணிகாண்." (கலி : 105-43,4); புனையிழாய் !, "பாணிறவெள்ளை யெருத்தத்துப் பாய்ந்தானை—நோனது குத்தும் இளங்காரித் தோற்றங்காண்" (கலி : 104-35,6); "தோள்வலி துணிபிணி துறந்திறந் தெய்தி மெய்சாய்ந்து கோல்வழுக்கித்தன் முன்னர் வீழ்ந்தான் மேற்செல்லாது மீளும் புகலேற்றுத் தோற்றங்காண்" (கலி : 104-46,8) என ஆயர் ஏறுதழுவியவாற்றையும், ஏன்றின் வெற்றியையும் தலைவிக்குக் காட்டிக் கூறினள் தோழி!

"ஏறும் பொதுவருமாறுற்று மாறு—இருபெரு வேந்தரும் இகலிக் கண்ணுற்ற—பொருகளம் போலுந் தொழூஉ" (கலி : 105-47,9) என்று கண்டோர் வியந்தனர்.

தலைவிக்கு நெஞ்சம் துணுக்குற்றது! தன் தலைவனுக்கு என்ன நேருமோ என்று கலங்கினள். இதைக் குறிப்பால் அறிந்தாள் தோழி. "அஞ்சில் ஓதியே! அஞ்சற்க. நங்காதல் ஏறு தழுவப் புகுங்கால் ஏற்பட்ட நன்னிமித்தங்களால் அதற்கு ஒன்றும் நிகழாது; தெளிவாயாக" என ஆற்றுவித்தாள் தோழி!

தலைவன், "எருத்தோடி மிலிடைத் தோன்றினன், தோன்றி வருத்தினன் மன்றவ்வேறு" (கலி: 102-26,7). மேலும் "மருப்பிற் கொண்டு மார்புறத் தழீஇயும்—எருத்திடை யடங்கியும் இமிலிறப் புல்லியுந்—தோளிடைப் புகுதந்துந் துறைந்து பாடேற்றும்" (கலி: 105-30-2) நீண்மருப் புறச் சாடியும் அவ்வேற்றையடக்கினன்.

ஏறுகொள் வென்றி பெற்றான் தலைவன்!" குரூஉக்கட் கொலையேறு கொண்டேன் யானென்னுந்—தருக்கன்றோ

ஆயர்மகன்" (கலி: 104-71,2) என்று நகைதோன்றக் கூறினாள் தலைவி. "நல்லேறு கொண்ட பொதுவன் முகநோக்கிப்—பாடில ஆயமகள் கண்" (கலி: 105-51,2) என்று தோழி மறுநகை தோன்றக் கூறினாள்!

மறுபக்கத்திலிருந்து குரவைக் கூத்தொலியும், தீங் குழலிசையும் ஒருங்கே யொலித்து அனைவர் உள்ளத்தையும் ஈர்த்தன. ஏறுகொள் வென்றிகொண்ட ஆயர்களும், அவர்தம் அன்புக் காதலியர்களும் குரவையாடிக் கொண்டிருந்தனர். உடனே தோழியானவள் "பாடுகம்வம்மின் பொதுவன் கொலையேற்றுக்—கோடுகுறி செய்தமார்பு" (கலி: 104–63,4) எனத் தலைவியையும் ஆயத்தையும் நோக்கிக் கூறினாள், தலைவியும் தலைவனும் அக்குரவையில் பங்கு கொண்டாடினர். "மாதர் மகளிரும் மைந்தரு மைந்துற்றுத் தாதெரு மன்றத் தயர்வர் தழூஉவி" (கலி: 103–61,2)

குரவைக் கூத்தில் உளந்தோய்ந்து தங்களை மறந் திருந்தனர் பொதுவர்கள். மகிழ்ச்சி வெள்ளம் பொங்கி வழிந்தது, தலைவியின் சுற்றத்தார்கள் களிப்பெய்தினர். கொல்லேறு தழுவிய பொதுவனின் வரையன்ன தோளையும், முல்லை முறுவலாளின் வேய்ப்புரை பணைத்தோளையும் ஒப்பு நோக்கிப் பாராட்டினர். "பண்ணமை யின்சீர்க் குரவையுள் தெண்கண்ணித்திண்டோள் திறலொளி மாயப்போர் மாமேனி—அந்துவராடைப் பொதுவனோடாய்ந்த—முறுவலாள் மென்றோள் பாராட்டிச்—சிறுகுடி மன்றம் பரந்ததுரை." (கலி: 102—35'9) "இனி மணஞ் செய்தற்குத் தண்ணுமையில் தாளந்தளராமல் முழக்குவார் களாக" வெனக் கூறினார்கள் ஆன்றோர்கள் குரவையும் முடிவுற்றது!

"முல்லை முறுவலிக்க! முகில் வண்ணன் எழில் காட்ட! சில்வண்டார் குழலிசைக்க! சீர் குயில்கள் இசைபாட! பைங் கிளிகள் வாழ்த்திசைக்க! பைந்தோகை மயிலாட! தளர் கொடிகள் தளிர்த் தேற்க!" நாறினால் கூந்தற் பொது மகளி ரெல்லாரும்—முல்லையந்தண் பொழில் புக்கார் பொதுவரோ—டெல்லாம் புணர் குறிக்கொண்டு. (கலி: 101-48, 50)

இந்த இலக்கிய நாடக ஓவியத்திலிருந்து, ஏறு தழுவல் என்பது என்னவென்பதும், அதற்குரிய காரணம் யாது என்பதும், ஏறுதழுவலின் முறை எவையென்பதும், அதன் பயன் அல்லது முடிவு எத்தகையது என்பதும் அறிகின்றோம்!

பண்டைத் தமிழரின் பண்பமை பழக்கமாகிய ஏறு தழு வல் இன்று 'சல்லிவிடுதல்', மாடுவிடுதல்', 'மஞ்சிவிரட்டுதல்', என்றெல்லாம் வழங்கி வருகின்றது. பொங்கலுக்கு மறுநாள் இந்நிகழ்ச்சி இன்றும் தமிழ் நாட்டின் சிற்சில ஊர்களில் நடைபெற்று வருகின்றதுங் காண்க!

சென்ற இதழின் தொடர்ச்சி :

களவியல் உரை நலம்

(திருவாட்டி மேனகை அம்மையார், இராணிப்பேட்டை.)

இக்கோவைச் செய்யுட்கள் மாறவர்மன் அரிகேசரி யென்றும் சுந்தர பாண்டியன் என்றும் வழங்கப்படும் வழுதியின் சீர் பரவுந் தன்மைய. இவனையே பரவையார் காதலனார்

"நிறைகொண்ட சிந்தையால் நெல்வேலி வென்ற
நின்றசீர் நெடுமாற னடியார்க்கு மடியேன்"

என்று தம் திருத்தொண்டத் தொகையுள் வைத்துப் போற்றினர். பரசமய கோளரியாகிய பாலறுவாயரால் சமணம் நீங்கிச் சைவத்தைச் சார்ந்தவன். மானினேர் விழிமாதராள் மங்கையர்க்கரசியின் மணாளனாய மாண்புடையவன். இவனை நக்கீரனாரும் பரவினரென்றல் அவரைக் கடைச் சங்கத்தினராகக் கொள்ளும் கோட்பாட்டிற்கு முரணுடைத்து. காழி வேந்தரும் சொல்வேந்தரும் சைவம் வளர்த்த நாளில்—பல்லவர் பாராண்ட நாளில் வாழ்ந்தவராதல் வேண்டும். இதனால் இந்நக்கீரர் மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரனாரல்லரென்பதும் பெறுதும்.

இவ்விடர்ப் பாட்டினை ஆய்ந்துணராத வரலாற்றாசிரியர் ஒருவர் கடைச் சங்க நாளில் விளங்கிய தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனே இவனது தந்தையாகிய செழியன் சேந்தன் எனவும் பாண்டியன் இலவந்திகைப் பள்ளித்துஞ்சிய நன்மாறனே இவ்வரிகேசரி மாறவர்மனெனவும் முடிவு கட்டிப் போந்தார் (**Indian Antiquary xL**). பின்னோனை நக்கீரனார் பாடியமையே இம்முடிவுக்கு மூலம் போலும். ஆயினும் களவியற் காலத்து உக்கிரப் பெருவழுதிக் கேற்ற பிற்காலப் பாண்டியன் யாரோ அறிகிலேம். இஃது எங்ஙனமாயினும் இவர் கூற்றில் எட்டுணையு முண்மையிலதென்பதைத் திரு. T. V. சதாசிவப் பண்டாரத்தார் தமது "பாண்டியர் வரலாறு" என்னும் நூலில் நன்கு நாட்டிப் போந்தார்.

மாணிக்க வாசகர் காலம் தேவார ஆசிரியன்மார்க்கு மிகப் பிற்பட்டதென நிறுவப்போந்த தஞ்சை T. S. சீனிவாசப் பிள்ளையவர்கள் 'தமிழ் வரலாறு' என்னும் நூலில் களவியற் கண் திருக்கோவையாரிடம் பெறாது பாண்டிக் கோவையே ஆளப்பட்டதைச் சுட்டுவர். பெருவரவிற்றாய நற்றிணை, நெடுந்தொகை, குறுந்தொகை முதலிய சான்றோர் செய்யுட்கள் பல இருப்பவும் அவைகளை எடுத்தோதி உள்ளம் அமை

யாத உரைகாரர் திருக்கோவையாரை ஆளாமைக்கும் காரணம் வேண்டுங்கொல்? உரையாசிரியன்மார் தாமியற்றிய பாடல்களே எடுத்துக்காட்டாக அமைய வேண்டுமெனும் பெருவிழைவினராய் அவ்வண்ணமே அமைத்தல் பிந்திய காலத்து உளதாந் தன்மையை நினைவு கூர்க. எனவே, திருக்கோவையாராளப்படாமை கொண்டு அது பிந்திய காலத்ததெனல் பொருளுரையன்று.

சங்க மருவிய நூலான சிலப்பதிகாரமும் வேறு சில நூல்களும் ஆளப்பட்டமை இவ்வுரை கடைச் சங்க நக்கீரனர் காலத்ததன்றென நிறுவும்.

ஆக, மேல்நிகழ்த்திய ஆய்வுகளால் களவியற்கு இப்போது வழங்கப்படும் உரைக்கு ஆசிரியர், மதுரைக் கணக்காயனர் மகனர் நக்கீரனரல்லரென்பது பெற்றும், ஆயினும் நக்கீரனரால் உரை கூறப்பெற்று அது கேள்வி வழியே நடந்து வந்து முசிரியாசிரியர் நீலகண்டனர் காலத்து வரி வடிவம் எய்தியிருத்தலுங் கூடுமன்றே? அது குறித்தும் ஈண்டு நோக்குவோம்.

ம. களவியல் தோற்றக் காரணம்

களவியலுரைப்படி, எழுத்து, சொல், யாப்பதிகாரங்களில் வல்லாரைத் தலைப்பட்டுக் கொணர்ந்த அரசன் பொருளதிகாரம் வல்லாரைத் தலைப்பட்டிலாது கவன்றனனும். ஆயின் சங்கத் தலைமைப் புலவராய நக்கீரனரை யுள்ளிட்ட நாற்பத்தொன்பதின்மரும் பொருளறியாப் பேதையராமன்றே! அவ்வாறு அவ்வாசிரியன்மார்க்கு ஆசுகற்பித்தலறிவுடையார்க்கேற்புடைத்தன்றே! நக்கீரனரும் பொருளதிகாரம் வல்லரல்லராக, அவர் தமிழாசிரியன்மார்க்குத் தலைமை பூண்டது எத்திறங் கொண்டென்னும் வினு வந்தெய்துமென்க.

திருவிளையாடற் புராணத்துக் "கொங்குதேர் வாழ்க்கை" என்னும் பாடல் பற்றிய வரலாறு நக்கீரனரின் பொருட் புலமைக்குச் சான்று பகரும். நக்கீரனர் பொருட் குற்றத்ததென வழக்கிட்ட இப்பாடலே களவியலுரையில் பெருநயப்புணர்த்தினமைக்குக் காட்டாக வருதலும் அக்கருத்தைத் தழுவிய சில கோவைப் பாடல்களும் ஆண்டமைந்தமையும் உன்னற்பாலதே. ஆயுங்காலத்துத் திருவிளையாடல்கள் உண்மை கலவாத கற்பனைச் செறிவை மூலமாகக் கொண்டது போலக் களவியல் வரலாறும் கற்பனையோ என்னும் ஐயம் நிகழும் என்க.

களவியற் கூற்றுப்படி, சங்கப் புலவன்மார் பொருளறிவு பெற்றிலராக, நெடுந்தொகை நானூறு, குறுந்தொகை புறநானூறு முதலிய தொகை நூல்களில் இடம் பெற்றுள்ள

செய்யுட்களை எவ்வறிவு கொண்டு செய்தனர்? இவை களவிய லுரைத் தோற்றத்துக்கு முன்பே தொகுக்கப்பட்டனவன்றே! பொருளறிவு சாலாப் புலவன்மார் பாக்கள் பொருளெனப் படாவன்றே! ஆயின் அவை களவியலில் எடுத்துக்காட்டாக அமைந்ததென்னை?

களவியலும் அகப்பொருட்கே உரித்தாய் இதனினும் நுணுகுமாறில்லையென நுணுக்கத்துக்கு வரம்பெய்திய நூலன்றே! ஆயின் பொருளிலக்கணமறியார்க்கு அஃ துணர்த்துவான்புக்கான் இதனைப் பெருக்கத்துக்கு வரம் பெய்திய நூலாகவன்றே செய்திருத்தல் வேண்டும்! அஃ தொழித்துத் தொகுத்துக் கூறியதனாற் பயனென்னை? தொகுத்த இந்நூற்குப் பொருளறியா நக்கீரனார் அத்துணை விரித்துப் பொருள் கூறல் பெருவியப்பிற்றன்றோ? இந்நூலும் அகப்பொருட்கே உரித்தாய்ப் புறப்பொருள் புகலாமையின் பொருள் முற்றும் மொழிந்த நூலாக முடிந்திலதே. ஆயின் புலவன்மார் புறத்திணைக்கிலக்கணம் யாண்டுப் பெற்றனர் கொல்லோ?

அல்லதூஉம், தொல்காப்பிய நெறிநின்ற தமிழர், நூலை எழுத்து, சொல், பொருளென மூன்றாக அடக்கி ஓதுவரே யன்றி, எழுத்து, சொல், யாப்பு, பொருள் என நான்காக எண்ணார். எனவே அணி இலக்கணமுணர்த்தும் வடவரின் தண்டியலங்காரம் தமிழரிடை வழங்கற்கு முன்னும் தனித்த யாப்பு நூல்கள் தோற்றம் கொண்டு அதனை ஓர் தனித்த அதிகாரமாக வழங்கும் நெறிதோற்றம் கொண்ட பின்னருமே இவ்வுரை எழுந்திருத்தல் வேண்டும். எனவேதான் உரை காரர், எழுத்து, சொல், யாப்பு, பொருளென நூலினை நான்காக எண்ணினார். ஆயினும் தொல்காப்பிய நெறி தவறிய இவ்வழக்கு யாதொரு ஏற்றமும் உடைத்தன்று என்பதே தேற்றம்.

பொருளதிகாரம் வல்லாரைத் தலைப்பட்டில்லாத அரச னின் கவற்சி அகற்றுவான் ஆலவாயடிகளாலருளப்பட்டது களவியல் என்பர் உரைகாரர். ஆயின், தொல்காப்பியத்துக் கூறப்படும் பொருளதிகாரம் பொருளுரைப்பதல்லவோ? களவிய லுரைப்படி, எழுத்துவல்லார், சொல்வல்லார், யாப்பு வல்லார், பொருள்வல்லாரெனத் தொல்காப்பியத்து ஒவ் வொரு அதிகாரத்துக்கும் தனித்தனி புலவன்மாரிருந்தன ரெனக் கோடல் இழுக்காமென்க. தொல்காப்பிய முழுதுந் தெளிந்தாலன்றி அவர் புலவரெனற்கொவ்வாது. இன்றுந் தொல்காப்பியம் முழுவதுங் கற்றுங் கவிபாட இயலாத எத் தனையோ தமிழ் வித்துவான்கள் உளராக, சிந்தைக்குஞ் செவிக்குந் தண்டாத் தேனியும் சங்ககாலச் சான்றோர்கள்

ஒரு நூல் முற்றுமுணர்ந்தாரல்லரெனல் நமக்கே வசை தருவதாம் என்க. ஆக, களவியல் தோற்றம் இன்றியமையாததென்னே என்பது.

களவியலெழுந்த காலத்துத் தொல்காப்பியப் பொருளதிகாரம் கார்த்திரளாற் கரப்புண்ட கதிரவனெனப் புலவர் கைக்குக் கிட்டாதாயிற்றெனக் கூறலும் கொள்ளற்பாற்றன்று. என்னை? இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்னரே—அதுவும் ஆணைநூலாக விளங்கியபோதே—கிட்டாத பொருளதிகாரம் இற்றை நாளில் தன் முழுவடிவினோடு முழுமதியெனப் புகழ் பரப்பல் பெரிதும் வியப்பேயென்க. அதனனே அக்கூற்று ஏற்புடைத்தன்று. அன்றியிங் களவியலுரைகாரர் கூறும் மேற்கோளனைத்துந் தொல்காப்பியமேயாதலுந் தெளிக.

எனவே, அகத்திணையையும் புறத்திணையையும் உணர்த்து வான்புக்கு ஆசிரியர் தொல்காப்பியனர் மிகவிரித்து நூல் செய்தாராக, அகத்தை மட்டுமே, அதுவும் மிகச் சுருங்கிய முறையில் அறுபது நூற்பாக்கலால் ஓதிய இன்றியமையாமைக்கு ஆக்கியோனே காரணங் கூறல் வேண்டும். அகத்தை ஓதிப் புறத்தை விடுத்தமையும் என்னே என்பது. புறத்தை உய்த்துணர வைத்தாரெனில் அவ்வளவையும் உய்த்துணர வல்லார் இவ்வறுபது நூற்பாக்களையும் உயர்த்துணர்வராகலின் இந்நூல் வேண்டா என்பது இதற்கு உரை கூறுவார்க்கு ஊற்றுக் கோலாக உதவியது தொல்காப்பியமே என்புதையும் ஈண்டு கருதுக என்பது.

மக. **பிறன் கோள் கூறல்**

"ஆயின் ஐந்திணை யென்றதல்லது அவற்றது பெயரும் முறையும் இலக்கணமும் அறியச் சொல்லிற் றிலரோ வெனின் இது சுருக்க நூலாகலிற் சொல்லிற்றிலர். அவை முடிந்த நூலிற் கொண்டுரைக்கப்படும்" என்பர் உரைகாரர் முடிந்த நூல் தொல்காப்பியமே ஆகலானும் ஐந்திணை இலக்கணம் அதன் பொருளதிகாரத்துப் பெறப்படுவதாகலானும் அதனினின்றுங் கொண்டுரைக்க என்னுங் கூற்று பொருளிலக்கணம் பெருது இடர்ப்படுவாரைக் கண்டு களவியல் வெளிப்படுக்கப் பட்டதென்னுங் கூற்றுக்கு முரண்படுவதாகும். அன்றியும், "கந்தருவ வழக்க மென்மனர் புலவர்" என்றும் முதல் நூற்பாவின்கண் வழிநூல் வாய்பாடு ஆகிய "என்மனர் புலவர்" என்பதை மொழிந்தமை காண்க. இஃது வழிநூல் வாய்ப்பாடன்றென உரைகாரர் வலியுறுத்தி மறுப்பரேனும் அக்கூற்று வலியின்மை உரைநல ஆய்வின்கண் உணர்த்தப் படும். மற்றும், இவ் "என்மனர் புலவர்" என்னும் வாய்பாடு ஐம்பத்து நான்காம் நூற்பாவிலும் பயிலும் இஃதேபோல்

"என்ப" என்னும் வாய்பாடு கூ,மஉ,கம,ருஉ ஆவது நூற்பாக்களிலும் "மொழிப" என்னும் வாய்பாடு மஅ ஆம் நூற்பாவிலும் "வரையார்" என ரும,ருக ஆவது நூற்பாக்களிலும் பயிலும்.

எனவே இந்நூல் பிறன்கோள் கூறலும் இதிற் கூறப் படாதன முடிந்த நூல்கொண்டறிக என்னலும் உடைத்து.

"தொல்காப்பியனார் பாலைக்கு நிலம் வேண்டிற்றிலர் வேண்டாமையின் தெய்வமும் வேண்டிற்றிலர். பிறர் பகவதியையும் ஆதித்தனையும் தெய்வமென்று வேண்டுவர்"

என்பர் உரைகாரர், எனவே உரை கூறுங்காலத்துத் தொல்காப்பியமே யன்றிப் பிறநூலும் பயின்றன என்ப துணரப் படுதலின் களவியற் கின்றியமையாமையின் றென்பதும் பொருளதிகாரம் பெருதிடர்ப் பட்டுழிக் களவியல் தோன்றிய வரலாறு மெய்மையாதலும் இல்லையென இதனாற் பெறுதும். இன்னும் இதனானே, உரைகாரர் கடைச் சங்க நாட்களுக்குப் பிற்பட்டவர் என்பதும் பெறுதும்.

மஉ. **இல்லது இனியது**

இவ்வாறு களவியல் தோற்றக் காரணமே மெய்மையிற் றீர்ந்து போயதாக அதன் உரைவரலாறும் அவ்வழியே துணை பற்றித் தொடரும் என்க. என்னை? நக்கீரர் முதலிய ஆசிரியன்மார் தொல்காப்பிய நெறியில் தோய்ந்தொழுகின ரெனக் கூறினுமன்றே! தொல்காப்பியர் நூற்பாக்களோ உலகியலை ஒட்டி யெழுந்தனவேயன்றிக் கற்பனை யொழுக்கினைக் கழறுவ வல்ல. தொல்காப்பிய உரையாசிரியன்மார் இக்கருத்தினை யாண்டும் வலியுறுத்தியே வருவர். எடுத்துக் காட்டாக,

"முதல்கரு உரிப்பொருள் என்ற மூன்றே
நுவலுங் காலை முறைசிறந் தனவே
பாடலுட் பயின்றவை நாடுங் காலை"

(தொல் அகத்திணை ங.)

என்பதற்கு உரைவகுத்த ஆசிரியர் நச்சினார்க்கினியர்

"இஃது இல்லதெனப்படாது உலகியலேயாம்" என்றும், "இச்செய்யுள் வழக்கினை நாடக வழக்கென மேற்கூறினார், எவ்விடத்தும் எக்காலத்தும் ஒப்ப நிகழும் உலகியல் போலாது உள்ளோன் தலைவனாக இல்லது புணர்த்தன் முதலாகப் புனைந்துரை வகையாற் கூறும் நாடக இலக்கணம் போல யாதானு மொரோவழி ஒருசாரார் மாட்டு உலகியலானி கழும் ஒழுக்கத்தினை எல்லார்க்கும் பொதுவாக்கி இடமுங் காலமுங் நியமித்துச் செய்யுள் செய்த ஒப்புமை நோக்கி. மற்று இல்லோன் தலைவனாக இல்லது புணர்க்கும் நாடக

வழக்குப்போல் ஈண்டுக் கொள்ளாமை" நாடக வழக்கு "என்னும் சூத்திரத்துள் கூறுதும்" என்றார். பின்னரும்,

"நாடக வழக்கினும் உலகியல் வழக்கினும்
பாடல் சான்ற புலநெறி வழக்கம்
கலியே பரிபாட் டாயிரு பாங்கினும்
உரிய தாகு மென்மனர் புலவர்"

(தொல் அகத்திணை—டுங)

என்னும் நூற்பாவுரையில் ஆசிரியர் நச்சினார்க்கினியர்

"இவ்வதிகாரத்து நாடக வழக்கென்பன புணர்ச்சி உலகிற்குப் பொதுவாயினும் மலைசார்ந்து நிகழுமென்றுங் காலம் வரைந்தும் உயர்ந்தோர் காமத்திற்குரியன வரைந்தும் மெய்ப்பாடு தோன்றப் பிறவாறுங் கூறுஞ் செய்யுள் வழக்கம். இக்கருத்தானே" "முதல் கருஉரிப் பொருளென்ற மூன்றே நுவலுங்காலை" என்று புகுந்தார் இவ்வாசிரியர். இப்புலநெறி வழக்கினை இல்லது இனியது புலவரால் நாட்டப்பட்ட தென்றுமோ வெனின் இல்லதென்று கேட்போருக்கு மெய்ப்பாடு பிறந்து இன்பஞ் செய்யாதாகலானும் உடன்கூறிய உலகியல் வழக்கத்தினை ஒழித்தல் வேண்டுமாகலானும் அது பொருந்தாது. அல்லதூஉம் அங்ஙனம் கொண்ட இறையனார் களவியலுள்ளும்

"வேந்துவினை யியற்கை பார்ப்பார்க்குறித்தே"

(இறை—நஎ)

"அரச ரல்லா வேனை யோர்க்கும்
புரைவ தென்ப வோரிடத்தான"

(இறை—நஅ), எனவும்

"வேந்தற் குற்றுழிப் பொருட்பிணிப் பிரிவென்
றாங்க விரண்டு மிழிந்தோர்க் குரிய (இறை—நகூ)

எனவும் நான்கு வருணமுங் கூறி நால்வகைத் தலைமக்களையு முணர்த்தலின் இல்லதென்பது தொல்லாசிரியர் தமிழ்வழக் கன்றென மறுக்க இக்கருத்தானே மேலும் "மக்கணுதலிய அகனைந்திணையும் என்பர்" என்றுரைத்தார்.

இவ்வாறு தமிழ் மரபு பெரிதும் பிறழ்ந்து ஆரிய மரபே சீரியதென ஒழுகுஞ் சிந்தையர் காலத்து வதிந்த ஆசிரியன் மாரே தொல்காப்பியத்துக் குரைவகுப்பான் தொடங்கி தமிழ் மரபு வழாது பேனுங்கடம் பூண்டொழுகினர். ஆனல் இறையனாரகப் பொருளுரை காரரோ தொல்காப்பிய நெறி நின்றுந் தளர்ந்து உலகிய லென்பதனை மறுத்து இல்லது இனியது நல்லது என்று புலவரால் நாட்டப்பட்டதோ ரொழுக்கமென நாட்டப் புகுந்தனர். அதனையும் நன்கு நிறுவ இயலாது "உலகத்து நடக்கும் அகப்பொருளிலக்கண

மெல்லா மிவ்வறுபது சூத்திரத்துள்ளே தொகுத்தானுகலி னென்பது'' என்று ஒருவழி உலகியலைச் சுட்டியும் மற்ற இடங்களில் இல்லது இனியது என்ற கற்பனையியலைச் சுட்டியும் நகூவது நூற்பாவுரையில் ''இந்நூல் உலகினேடு ஒத்தும் ஒவ்வாதும் நடக்கின்றதாகலான்'' எனக் கூறி முற்றிலும் தம்மோடேயே மாறுகொள்வர். எனவே தமிழ் மரபு காத்த கடைச்சங்கத்து மதுரைக் கணக்காயனுர் மகனு ரல்லரிவ்வுரை வகுத்தாரென்பது பெறுதும். உரைநலம் ஆய்வுழியும் இம்முடிபு வலுப்பெறலைக் காண்பாம்.

௰௩. உரையாசிரியர் பற்றிய முடிபு

எனவே, இறையனுர் களவியல் கடைச்சங்க நாளதன்று என்பதே துணிபு. பெயர் துணியமுடியாத நல்லிசைப்புலவர் ஒருவர் தொல்காப்பிய அகப்பொருட் பகுதியைத் தொகுத்து இந்நூல் இயற்றினர் எனக் கொள்ளலே ஏற்புடைத்தாகும். என்னை ?

''குறையுற வுணர்தல் முன்னுற வுணர்தல்
இருவரு முள்வழி யவன்வர வுணர்தலென
மதியுடம் படுத்தல் ஒருமூ வகைத்தே''
(தொல்—களவியல்—௩௬)

''முன்னுற வுணர்தல் குறையுற வுணர்தல்
இருவரு முள்வழி யவன்வர வுணர்தலென்று
அம்மூன் றென்ப தோழிக் குணர்ச்சி'' (இறை—எ)

''குறியெனப் படுவ திரவினும் பகலினும்
அறியத் தோன்றும் ஆற்ற தென்ப''
(தொல்—களவியல் ௩௧)

'' குறியெனப் படுவ திரவினும் பகலினும்
அறியக் கிளந்த இடமென மொழிப (இறை—௰அ)

எனவரும் இந்நூற்பாக்கள் பெரும்பான்மை ஒப்புமை யுடைமை காண்க.

களவிய லாசிரியரும் இறையனுர் என்ற பெயர் பெற் றிருத்தல் கூடும். இஃது 'இறையனுர் களவியல்' என்ற பெயர்ப் பயிற்சியான் புலனும். ஆயினுந் தலைச்சங்கத் திறையனுர்வேறு; களப்பிரர் காலத்துக்குப் பின்பு வாழ்ந்த இவர்வேறு எனத் தெளிக. இந்நூல் எழுந்தமைக்குக் காரணம் நன்கு புலப்படவில்லை. களவியற்கண் வரும் வாலாறும் இசைவுடைத்தன்று. எனினும் இந்நூல் பெற் றுள்ள வளமார்ந்த உரையை நோக்குங்கால் தமிழன்னை இந்நூல் வெளிப்பாட்டால் உயர் வெய்தின ளென்றே கொள்ளல் வேண்டும்.

களவியல் எழுந்த காலம் மாறவர்மன் அரிகேசரிகாலமே யாகும். என்னை? இக்காலத்தேதான் தமிழ் தந்நிலையி னின்றும் இழிவு நோக்கிச் செல்வதாயது. களப்பிரர் ஆட்சிக் குழப்பமும் சமண புத்த சமயங்களின் எழுச்சியும் தொன்னூல் கட்கு அழிவு தேடியிருத்தல் வேண்டும். பெண்டிரை வெறுக்குஞ் சமயத்தார் பெண்களின்பப் பகுதி கூறும் தொல் காப்பியப் பொருளதிகாரத்தைப் போற்றுரன்றே? எனவே அஃது கற்பாரின்றிக் கவிஞர்கள் வீட்டில் மறைவுற்று வாழ்ந்திருத்தல் நேர்ந்தது. தமிழர் தம் அகவாழ்வு இப்படி அவலப்படுதலைக்கண்ட 'இறையனூர் என்ற நல்லிசைப்புலவர் தொல்காப்பியத்துக்குத் துணை நூலாக அரசன் வேண்டு கோட்கிரங்கிக் களவியலை யாத்தனர் இதுதோன்றிய காலம் அரசன் சைவஞ்சார்ந்த பின்னரே யென்க. என்னை? அவன் சமண் சமயச் சார்பிலுள்ளவரை அகப்பொருட்கிலக்கணம் நாடாணுகலின். தொல்காப்பியம் வல்ல இறையனூர் கற்பார்க்கு எளிமை தோன்ற இந்நூலைச் செய்தனர். களவியலிற் குறிக்கப்படும் பஞ்சமும் இவன் தந்தை காலத்தே தொடங்கியிருந்ததும் இக்கருத்தை அரண் செய்யும். சீனதேயத்தனுகிய "யுவான் சுவாங்" என்பான்தான் பாண்டி நாட்டுக்குச் செல்லப் புறப்படுங்கால் மாறவர்மன் அரிகேசரியின் தந்தையாகிய செழியன் சேந்தன் அப்போது தான் இறந்தனன் என்றும் அந்நாட்டிற்பஞ்சம் மிகுந்திருந்த தென்பதையுங் குறிக்கின்ருன். அன்றிச் சங்க மிரீஇச் சான் ரேரைப் புரந்தவனும் பகைவர் புலத்தை வென்று வாகை சூடியவனும் ஏற்றூர்க்கு "ஈர்ங்கை நிறையப் பூவும் பொன்னும் புனல்படச் சொரிந்து...... இரவலர்க் கருங்கல மருகாது வீசிய" உக்கிரப் பெருவழுதி காலத்துப் பஞ்சந் தோன்றி யமைக்குக் களவியலுரையன்றி வேறு சான்றுகிடையா. எனவே களவியல்தோற்றம் கொண்டது நின்றசீர் நெடுமாறன் காலத்தே என்பதும் களப்பிரர் ஆட்சியாலும் சமணர் சார் பாலும் யாண்டும் அகத்திணையே விரவிவரும் தொல்காப்பியப் பொருளதிகாரம் பனி படர்ந்த பகலோனெனப் படிப்போ ரின்றிக்கிடந்த தென்பதும், தமிழர் அகவாழ்வு சிறக்க வேண்டுங் கருணையால் நெடுமாறனூர் வேண்ட இறையனூர் என்ற பிற்காலப் பெரும்புலவர் தொல்காப்பியத்தைத் தொகுத்துக் களவியல் கண்டனர் என்பதும் பெற்றும். தக்க ஆதாரம் இன்மையானும் நம் ஆசிரியன்மார்வரலாற்றைச் செவ்வனே ஆக்குவாரின்மையானும் இவ்வகை இடர்ப்பாடுகள் ஆய்வாளர் வழியில் மலைபோலப் படுத்திருந்து மாணுஇன்னல் விளைக்கின்றன என்பதையும் ஈண்டு குறித்தல் சாலும்.

இனி உரையாசிரியர் பற்றி ஆயுங்காலத்து நக்கீரர் இருவர் என்ற கொள்கைக்கு உடம்படுதல் இன்றியமை யாதது. முன்னைய நக்கீரனூர் திருமுருகாற்றுப்படை முதலிய

நூல்களருளிய கடைச்சங்கத் தலைமைப் புலவர் மதுரைக் கணக்காயனர் மகனர் நக்கீரனர் ஆவர் பின்னையவரோ நக்கீரர் நாலடி நாற்பது, கைலைபாதி காளத்திபாதி யந்தாதி, திருஈங்கோய்மலை எழுபது, களவியலுரை முதலியவற்றின் ஆசிரியராய நக்கீரனர் ஆவர். இவர் நின்றசீர் நெடுமாறன் காலத்து வதிந்தவர். ஈங்கோய்மலையின் இயற்கை வளப் பத்தை எடுத்துரைப்பதில் இணையற்று விளங்கும் இவ்வாசிரியர் பெருமான் திருவாக்கே களவியலிலும் பயின்று நம்மை இன்பத் தாழ்த்துகிறது.

மற்று களவியல் வரலாறும் உரைவரலாறும் பாயிரத் திலக்கணமும் முசிறியாசிரியர் நீலகண்டனர் காலத்தே இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். 'பாயிரம் நடந்து வந்த முறை', நக்கீரனரின் உரை வழிவழி வந்து, இவர்காலத்து இன்றியமையாதெனக் கருதப்பட்ட சிற்சில மாற்றங்கள் பெற்று இப்போதுள்ள வடிவைப் பெற்றது என்பதே தக்க முடிவு.

கோவைப் பாடல்களை 'யாரோ பிற்காலத்து உரையை ஒட்டி இயற்றிச் சேர்த்த துறைப்பாடலே யென்று கொள்ளாமோ யெனிற் கொள்ளாம். அவை உரையாசிரியரே யமைத்தனர் என்றே கொள்வாம். அவை அன்னவாதலை "வேறும் என நின்றிகல் மலைந்தார் விழிஞத்து விண்போய்" என்ற கோவைப்பாடற் கமைந்த விரிவுரை யொன்றே விளக்கி விடும் என்க. நக்கீரனர் உரை என்ற வழக்கினை நோக்குங்கால் இப்பிந்திய நக்கீரரே உரைவகுத்தாரென்றே துணிபெய்தும். ஆயினும் பாயிரம் மட்டும் பிற்காலத்திணைந்த தென்க. மேலே "பாயிர விளக்கம்" என்ற இடத்தும் "உரைகாரரை நக்கீரனரே அறியாரோ" என்ற இடத்தும் இம் முடிபுக்கு உரிய காரணங்களைக் காட்டினம்.

எனவே, களவியல் தோற்றக் காலமும் உரைகண்ட காலமும் கி.பி. 640 முதல் 670 க்குள் இருத்தல் வேண்டும் என்பதே எம்துணிபு.

மேற்கண்ட எமது முடிபுக்கு அரண் செய்யும் பெற்றி யமைந்தன யாதுங் கிடைத்திலதெனினும், உற்று ஆய்வார்க்கு வேறு முடிபுகள் கொள்ள ஊற்றுக்கோல் போன்ற செய்திக ளின்மையான் இம்முடிபுக்கே உந்தப்படுவர். இவ்வாறு ஒரு சிறந்த நூலின் உண்மை வரலாற்றை அலைப்பின்றி அறிய கில்லாது இடர்ப்பாடுறுதல் தமிழர் நம் தமிழன்னையை உரிய முறையில் பேணத்தவறிய பேதமையானே என்க.

காலத்தாற் பிந்தியதெனுங் கோட்பாடு எம் உள்ளக் கிடைக்கைக் கிசைவிலதாயினும் நடுநின்ருய்வுழி வேறுமுடிபு கொள்ள் இடந்தரவில்லை. காலத்தால் முந்தியதெனின்

வாலி ஒறுக்கப்பட்ட முறை சரியா?

வித்துவான். க. இராமசாமி

வாலி ஒறுக்கப்பட்ட முறை சரியா என்ற இக்கட்டுரை, சித்திரை—வைகாசி பொழில் (1963) துணர் ௩௯-ல், தன் அம்பு இலக்குத் தவறுதென அறிந்த வில்வீரன் அறைகூவி அம்பெய்யின் தன் வல்லமையைப் புகழ்ந்து பேசுதலாகு மன்றோ? என்றும்: வலியுடையவனுக்கே எது சரி எது பிழை அதைத் தீர்க்கும் உரிமை உண்டென்னும் கொள்கை பொருந்தா தென்பது வாலியின் வதையால் இனிது நாட்டப் படுதல் காண்க என்றும் யாழ்ப்பாணம் திரு. இராமநாத பிள்ளை B. A., அவர்கள் வாலிவதை என்ற தலைப்பில் ஆய்ந்து நிறுவியுள்ள காரணங்களை ஆய்வு செய்தற் பொருட்டு எழுந்த தாகும்.

இலக்கியத் திறனாய் வென்பது இலக்கிய ஆசிரியரின் வழிநின்று, காய்தல் உவத்தலின்றி நடுநிலைக்கண் நின்று நன்காய்ந்து உண்மையை யுணர்த்துதலேயாம். இங்ஙன மின்றி ஆசிரியரின் கருத்தையும் புறக்கணித்து தம் கருத்திற்கேற்ப உரைத்தல் உண்மையை மறைப்பதேயாகும்.

வாலியின்மீது இராமன் சாட்டுகின்ற குற்றங்கள் இரண்டு. ஒன்று சுக்கிரீவனைக் கொல்லத் துணிந்தது. மற்றொன்று அவன் இல்லக்கிழத்தி உரிமையைத் தனக்குரிமையாக்கிக் கொண்டது.

சுக்கிரீவனை வாலி கொல்லத் துணியக் காரணமென்ன? வாலி மாயாவியுடன் போருடற்றப் புகுந்த குகையின் வாயிலைக் கற்களாலடைத்து விட்டுக் கிட்கிந்தாபுரி மன்னனாக சுக்கிரீவன் முடிசூடிக் கொண்டமைக்கேயாம். பகை முடித்து

சங்க காலச் சான்றோர் மீது சாலாவடுச் சுமத்தியதாக முடியும். பிந்திய தெனலால் நூலின் பெருமை குன்றாது. என்னை? பயில்வாரின்றிக்கிடந்த தொல்காப்பியப் பொருளதி காரத்தை மீட்டுந் தமிழரிடைப் பயிலச் செய்தது இந்நூலே யாகலின் என்க. தமிழரைத் தமிழ் நெறிப்படுத்துவான் கொண்டதயையான் இந்நூலாசிரியர் மாட்டும் உரையின் மாட்டும் இறைமைத் தன்மையினை ஏற்றினர் என்க. எனவே யாம் கூறிய காலமுடிபு எவ்வாற்றானும் ஏற்ற முடைத்தாய் விளங்கல் காண்க.

இனி, உரை நலத்தினையும் அவ்வுரைக்கண் விரவிவரும் பாண்டிக் கோவையின் நலத்தினையும் ஆய்வாமாக.

மீண்ட வாலி சினங்கொண்டு தன்னைத் துன்புறுத்துங்கால் தானாக விரும்பி அரசனாகவில்லை என்றும் அமைச்சர்களின் வற்புறுத்தலுக்காகவே ஆட்சியை ஏற்றுக்கொண்டதாகவும், தான் தவறு செய்யவில்லை என்றும் மன்றாடுகிறான். ஈண்டு சுக்கிரீவனின் வாதம் சரியா என்பதைச் சற்று சிந்திக்க வேண்டும். தன் அண்ணன் பலம் வாய்ந்த எதிரியுடன் சண்டையிடச் சென்றவன் என்னானானெனக் கிஞ்சிற்றும் கவலை கொண்டானல்லன். அண்ணனின் கட்டளைப்படி வாயிலில் காவலிருந்த அவன் வாலி மீளாமை கண்டு தானும் குகையினுள் சென்றிருத்தல் வேண்டும். அதுவே உண்மையான சகோதர அன்பாம். இராமனும் சீதையும் உறங்குகையில் "வில்லையூன்றிய கையோடும் வெய்துயிர்ப்போடும்," நின்ற இலக்குவன், "தம்பியரின்றி மாண்டு கிடப்பனோ தமயன் மண்மேல்," என்ற கும்பகர்ணன் ஆகியோரது சகோதர அன்புடன் ஒப்பிட்டு நோக்குக. நோக்குழி சுக்கிரீவன் அண்ணன்மீது பற்றுக்கொண்டிலன் என்பது புலப்படும். நாடு அரசின்மையால் அல்லலுறும் என்று அமைச்சர்கள் வற்புறுத்தியதாலேயே தான் ஆட்சியை ஏற்றதாகச் சுக்கிரீவன் கூறுகின்றான். இராமன் வருவதாகக் கூறிய பதினான்கு யாண்டுகள் கழிந்தும் அவன் வரவில்லையே என்பதற்காக, தென்றிசையன்றி வேறு திசை நோக்காத பரதன் யார் தடுத்தும் கேளாது தீப்பாயத் துணிகின்றான். அப்பொழுது ஆட்சியை ஏற்றுக்கொள்ளுமாறு சத்துருக்கனிடம் செப்புகின்றான். ஆனால் அவனோ, காடு சென்ற அண்ணனுக்குக் காவலாகச் சென்றவன் ஒரு தம்பி, சென்றவர்கள் வரவில்லையே என்பதற்காக உயிர்விடத் துணிகின்றவன் ஒரு தம்பி, நான் மட்டும் அரசாள்வேனாம் என்னே! இவ்வாட்சியின் இனிமை! என எள்ளி நகையாடுகின்றான். இவர்களுடன் ஒப்பிடுங்கால் சுக்கிரீவனின் கூற்றுக்கள் ஒவ்வாமை உணர்க.

மேலும் சுக்கிரீவனுக்கு அரசனாக வேண்டும் என்ற எண்ணமும் உண்டு. இராம லக்குமணரிடம் சென்று மீண்ட அநுமன் "எளிதின் நிற்கரசு தந்துதவுவார்,"—எனக் கூறுதலினின்றும் மேற்காட்டிய கருத்து வலியுறுதல் கண்டுணர்க. மற்றும் சுக்கிரீவன் அரச போகத்தையும், இன்ப நுகர்ச்சியையும் பெரிதும் விரும்புபவன் என்பதைக் கம்பன் வாக்கால் உணர்க.

தித்தி யாநின்ற செங்கடை வாய்ச்சியர்
முத்தி வாள்நகை முள்ளெயி றூறுதேன்
பித்து மாலும் பிறவும் பெருக்கலான்
மத்த வாரண மென்ன மயங்கினான்

"பிரிவற்ற மயக்கத் தான்முந் துற்றதோர் பெற்றியோரான்"

என்று இராமனால் அரசுபெற்ற சுக்கிரீவனை நமக்குக் காட்டுகிறான் கம்பன். அன்றியும், மயக்கந் தெளிந்த சுக்கிரீவன் இலக்குவன் ஏன் தன்மீது கோபங்கொண்டான் என அங்கதனை வினவ, அவன்;

"......... செல்வமெய்தி
வியந்தனை யுதவி கொன்றாய் மெய்யிலை யென்ன வீங்கி
உயர்ந்தது சீற்றம்"

என்கின்றான். இக்கூற்றிலிருந்து சுக்கிரீவன், செல்வத்தால் செருக்கடைபவன், செய்ந்நன்றி கொல்பவன், உண்மையில்லாதவனென்று இலக்குவனே கூறுவதையுணர்க.

மேற்கூறியவற்றால் சுக்கிரீவன் தன் அண்ணன் மாட்டுப் பற்றிலனென்றும், அவனது வலிமைக்கஞ்சியே அடங்கியிருந்து பின் சமயம் கிடைத்ததும் மன்னனானான் என்றும் அறிகின்றோமாதலின்; அத்தகைய தம்பியை அடித்துத் துரத்தியதற்காக வாலியைக் குற்றவாளியாக்கல் தகவுடைத்தன்று.

இனி இரண்டாவது குற்றச் சாற்றினை ஆய்வோம். தம்பியின் மனைவியைக் கவர்ந்தது தவறே. பிறன் மனை கவர்ந்தமைக்காக வாலி ஒறுக்கப்படவேண்டியவனே. தண்டனை வழங்குதற்கும் சில விதிகள் உண்டல்லவா? இராமன் அம்முறையினைப் பின்பற்றினானெனில் இல்லை. தன் மனையாளைத் தகாத முறையில் கவர்ந்து சென்ற இலங்கேசுவரனிடம் அங்கதனைத் தூதுவிடுத்து "தேவியை விடுதியோ அன்றி ஆவியை விடுதியோ? எனக் கேட்டு வருமாறு செய்கின்ற இராமன், வாலியின் தன்மையைத் தூது வாயிலாகவோ அன்றி நேரிலே அறிந்து அவன் இணங்காவிடில் தண்டித்திருத்தல் வேண்டும். இராமனோ அப்படிச் செய்தானல்லன். சுக்கிரீவனுக்கு இழைத்த அநீதியைப் போக்க இராமன் கட்டளையிடின் வாலி அதனை ஏற்றுக்கொள்ளான் என்பதற்கும் இடமின்று. ஏனெனில், சுக்கிரீவன் அறைகூவிப் போர்க்கழைத்த காலை "இராமன் உன் தம்பிக்குத் துணையாகலாம்," என்று தாரை தடுத்தாள். வாலியோ "பிழைத்தனை பாவியுன் பெண் பேதைமையால்," என்றும், "எம்பியும் யானுமுற் றெதிர்ந்த போரிடை, அம்பிடை தொடுக்குமோ வருளி னாழியான்," என்றும் கூறுகின்றான். இக்கூற்றுக்களால் அவன் இராமன் மாட்டுக் கொண்ட நல்லெண்ணமும் தெளிவாதல் காண்க. மேலும் இராமனைத் திட்டுகின்றபொழுது "சிங்கத்தைக் கொன்று சிறு நரியைத் துணை கொண்டாயே, என்னிடம் கூறியிருப்பின் ஓர் நொடியில் மீட்டுத் தருவேனே" என வாலி கூறுவதினின்றும் இராமனுக்கு உதவவும் அவன் தயங்கான். வாலியின் வால் சென்றவிடத்து இராவணன் கோல் செலாதென்று அநுமன் கூறுவதால் சீதையை எளிதில் மீட்டுத்தரும் ஆற்றலும் அவனுக்கு உண்டென்பது போதரும்.

"இரக்க மெங்குகுத் தாயென்பா லெப்பிழை கண்டா யப்பா"? என்ற வாலிக்கு, "உன் தம்பியிடத்துக் குற்றமின்மை யுணர்ந்தும் அவனைக் கொல்லலுற்றனை, அவன் மனைவியைக் கவர்ந்தனை ஆகலானும், அறத்தை நிலைநாட்டுதற்காகவும், அவன் என் நண்பனாகலானும் நிற்கட்டனன்," என்று பதிலிறுக்கின்றனன் இராமன். தம்பியைக் கொல்லத் துணிந்தமைக்கு உரிய காரணத்தை முன்னர்க் கூறினம். இரண்டாம் குற்றச் சாட்டினுக்கு வாலியின் பதிலைக் காண்போம்.

நாங்கள் விலங்கினமாகலானும், மனிதரைப் போன்ற ஒழுக்கக் கட்டுப்பாடுகள் கிடையாது ஆகலானும் தம்பியின் மனைவியைக் கவர்ந்தது குற்றமாகாதென வாலி பதில் கூறுகிறான். அதற்கு இராமன், பகுத்தறிவுடைமையான் நீ விலங்கன்று ஆதலின் நீ செய்தது குற்றமே என்கின்றான். ஈண்டு இராமன் கூற்றினைச் சற்று கூர்ந்து நோக்குதல் வேண்டும். "வல்லவன் வகுத்ததே வாய்க்கால்", என்ற இராமனின் கோட்பாடு இனிது புலப்படும். கூறுதும்.

சுக்கிரீவன் போர்க்கழைத்தமை கேட்டு ஆரவாரத்துடன் வாலி போருக்கு வருகின்றான். புதரில் மறைந்து நின்ற இராமன் இளவலிடம் பார்த்தனையா தம்பி வாலியின் வீரப் பெருமிதத்தை என்கின்றான். இராமனுக்கோ "ஆவியைச் சனகன் பெற்ற அன்னத்தை அமிழ்தின் வந்த தேவியைப்" பிரிந்தமையால் உண்மை தோன்றிலது. ஆனால், இலக்குவன் இம்முறை கேடான செயலை நினைத்துக் கோபமுறுகிறான். "தம்முனைக் கொள்ளக் கொடுங் கூற்றைக் கொணர்ந்த," இவனது அறநெறி தவறிய செயலை எண்ணி வருந்துகின்றேன் ஆதலால் ஒன்றையும் கவனித்திலேன் என்றும்; அண்ணனிடத்திலேயே இவ்வாறு நடந்து கொள்ளும் இவன் மாற்றார் திறத்து எத்தகையனோ? என்றும் தம் கருத்தினைப் புலப்படுத்துகிறான். உண்மைத் தம்பியாம் இலக்குவனுக்கல்லவா சுக்கிரீவன் இழிந்த செயலும், தம் அண்ணனின் அறநெறி தவறிய போர்முறையும் புலப்படுகின்றன. "அறத்தா றழுங்க" என்று அடித்துப் பேசுகிறான் இளவல் இராமனது பதிலைப்பாருங்கள்.

அத்தாவிது கேளென வாரியன் கூறுவானிப்
பித்தாய விலங்கி னொழுக்கினைப் பேசலாமோ
எத்தாயர் வயிற்றினும் பின்பிறந் தோர்களெல்லாம்
ஒத்தாற் பரதனபெரி துத்தமனாத லுண்டோ.

"பெற்றுருழைப் பெற்ற பயன்பெறும் பெற்றியல்லால்
அற்றார்நவை யென்றலுக் காகுநரார் கொலென்றான்"

என்று இராமன் கூறுவனவற்றை நோக்குக. தன்மனைவியைத் தேடுதற்குத் தனக்கோர் துணை கிடைக்கவிருக்கும் சமயம் தம்பி நியாயாநியாயம் பேசுகின்றானே என்று இராமன் இளவல் மீது கோபங் கொள்கிறான். அதை வெளிக்குக்

காட்டாது வேறு வகையால் அவனைக் கண்டிக்கின்றான், பரதனே உத்தமத் தம்பி என்று பேசுகிறான். வாலி நாங்கள் விலங்கு என்று கூறியபொழுது, தேவரில் தோன்றினீர் குற்றமற்ற நன்னெறிகளை உணர்ந்தீர் ஆகலின் விலங்கல்லீர் என்று கூறுகின்ற அதே இராமன் இங்கே "விலங்கி னொழுக் கினைப் பேசலாமோ?" என்பது எவ்வறத்தின்பாற் படுமென்க. ஒருகால் வாலி கூறியது போன்று "மனுநெறி கூறிற் றுண்டோ?" அறிஞர்கள் ஓர்ந்துணர்க. மற்றும் நண்பராகக் கொண்டாரிடத்துப் பெறும் பயனைக் கருதுவதன்றிக் குற்ற மில்லாதவரென்று கூறுதற்குரியார் யார்? என்றும் இராமன் பேசுகிறான் இக்கூற்றுக்களால் சுக்கிரீவனது துணையால் சீதையைப் பெறுதலாகிய பயனை இராமன் கருதினானே அன்றி அறத்தை நிலைநாட்டும் எண்ணம் அந்நிலையில் அவனுக்குத் தோன்றவில்லை என்பது நன்கு புலப்படும். நட்புக் கொள்ளும் இடத்து "தீயரே யெனினும் நின்னோடுற்றவர் எனக்கும் உற்றார்" என்ற இராமன் கூற்றும் மேற்காட்டிய கருத்தினை வலியுறுத்தல் காண்க.

வாலி சிறந்த சிவபக்தன், தேவர்க்காக அமிர்தம் கடைந் தவன், தேவர்க்கு இன்னல் செய்தவர்களை அழித்தவன், அறத் தின் வேலி, சுக்கிரீவனைப் போன்று கள்ளுண்டு மயங்கிக் காமச் சேற்றில் அழுந்தியவனல்லன். ஆனைக்கும் அடிசருக் கும் என்பதற் கேற்பத் தவறு செய்து விட்டான். தம்பியின் மனைவியைக் கவர்ந்தது தவறென உணர்கின்றான். குற்றவாளி யைத் தண்டித்த முறை தவறு என்கின்றான் "வெவ்விய புளிஞரென்ன விலங்கியே மறைந்து வில்லால் எவ்விய தென்னை"? எனக் கேட்கின்றான். இராமனது வாய் அடை பட்டுப் போகின்றது. இலக்குவனது போலிச் சமாதானம் ஏற்புடைத்தன்று என்பது தெளிவு. வாலி தவறு செய்தான்; அதனை யுணர்ந்தான்; அதற்காக வருந்தினான் ஆனால்,

இல்லறந்துறந்த நம்பி தான் வில்லறந் துறந்ததனை உணர்ந்ததாகத் தெரியவில்லை. இராவணனிடம் "இன்று போய் நாளை வா", என்ற அதே இராமன் ஈண்டு வாலியின் தடைக்கு விடை கூறாதது ஏன்? அறிஞர்கள் ஆய்க. எனவே இதுகாறும் கூறியவற்றால் "வலிமை யுடையவனுக்கே எது சரி எது பிழை அதை நீக்கும் உரிமை உண்டு", என்னும் கொள்கை கிட்கிந்தை இராமனிடத்து நிலவுதலைக் கண்டு தெளிக.

திருவள்ளுவரின் குற்றச்சட்டக் கருத்துக்கள்

தி. வேங்கட வரதன், பி. ஏ., பி. எல்.,

தனி மனிதனது வாழ்க்கையை ஒரு சமூகக் கட்டுக் கோப்பிற்குள் கொணரப் பயன்படுவன சட்ட திட்டங்கள். ஒரு நாட்டில் நிலவி வரும் சட்டங்களை அந்நாட்டு மக்களின் சமூக உணர்ச்சிகளின் எதிரொலி எனலாம். பெரும்பான்மை மக்களின் விருப்ப உணர்ச்சியே சட்டமாக மாறுகிறது. அவ்வகை உணர்ச்சிகள், சமூகத் தேவைகளை அடிப்படையாகக் கொண்டவையாதலால் அத்தேவைகள் மாற மாறத் தாமும் மாறுபடுகின்றன. சமூகத் தேவைகள் காலத்திற்குக் காலம் சமுதாய வளர்ச்சிக்கு ஏற்ற வண்ணம் வேறுபடுகின்றன. பண்டைய மனிதன் தேவைகளையும் இன்றைய மனிதன் தேவைகளையும் ஒப்பிட்டுப் பார்த்தால், பண்டைய சட்டக் கருத்துக்களுக்கும் இன்றைய சட்டக் கருத்துக்களுக்கும் உள்ள வேறுபாடுகளின் சிறப்பு புலப்படும். அடிக்கடி ஏற்படும் சட்ட மாற்றங்களுக்கும் இதுவே காரணமாகும். ஆயினும், எக்காலத்திற்கும், எவ்வகைச் சமூகத்திற்கும் இயைந்த சில கருத்துக்கள் உண்டு. அவை மனித இயற்கையை அடிப்படையாகக் கொண்டவை. இயற்கை மாறுத் தன்மை உடையதாகையால் அவையும் மாறுதன. இயற்கையின் அடிப்படையில் எழுந்த அத்தகைய சட்டக் கருத்துக்குவியலே "இயற்கையின் சட்டம்" என அழைப்பர். அத்தகைய சட்டக் கருத்துக்கள் காலத்திற்கப்பாற்பட்டவை. அவை திருவள்ளுவர் காலத்திற்கு முன்பிருந்து இன்றுவரை சமூக வாழ்வை ஒழுங்குபடுத்தி வந்துள்ளன. அவற்றுள் சிலவற்றைத் திருவள்ளுவரும் கூறிச் சென்றுள்ளார்.

திருவள்ளுவர் திருக்குறளில் அக்காலச் சட்ட திட்டங்களைப்பற்றி விரிவாக ஏதும் கூறவில்லை. அக்காலத் தமிழ் நாடு ஒரேவழி ஆட்சியற்றுப் பல்வேறு மன்னர்களின்கீழ் சிதறுண்டு கிடந்தமையால் சட்டங்கள் நாட்டிற்கு நாடு பிரிவிற்குப், பிரிவு வேறுபட்டிருந்தன. மேலும் சட்டங்கள் சமயச் சார்பு கொண்டவையாய்த் திகழ்ந்தன. எனவே உலகப் பொதுமறையொன்றை உருவாக்க எண்ணிய திருவள்ளுவரது கண்ணோட்டத்திற்குள் பிளவுபட்ட அச் சட்டக் கருத்துக்கள் விழத்தவறின. இருப்பினும் மாறுத் தன்மை வாய்ந்த எல்லோருக்கும் ஏற்ற, சில நல்ல கருத்துக்கள் திருக்குறளில் இடம் பெறுமல் இல்லை. அவற்றுள், குற்றச் சட்டச் சிறப்புடைய சிலவற்றை இங்கு ஆராயலாம்.

"முறை செய்து காப்பாற்று மன்னவன் மக்கட்
கிறை யென்று வைக்கப்படும்"

என்ற குறளின் வழியாய் திருவள்ளுவர் நடுநிலையினின்று வழுவாது குடிகளுக்கு அறம் வழங்கிக் காப்பாற்றும் மன்னவனை அக்குடி மக்கள் கடவுளென வணங்குவர் என்று தெரியப் படுத்துகின்றார். திருவள்ளுவர் "முறை செய்து" என்று கூறுவதன் பொருள் ஆராயத்தக்கது. "முறை' என்ற சொல்லை திருவள்ளுவர் பல குறள்களில் கையாள்கிறார். அரசனது அறங்கூறும் செயலைக் குறிக்க "முறை செய்தல்" என்ற சொற்றொடரைப் பயன்படுத்துகிறார். வேறு பல தமிழ் நூல்களும் நீதி வழங்கும் செயலை "முறை செய்தல்" என்று குறிப்பிடுகின்றன. ஆவிற்கு நீதி வழங்கிய மனு நீதிச் சோழனை "மகனை முறை செய்த மன்னவன்" என்று மணிமேகலை பாடிற்று; "கறவை முறை செய்த காவலன்" எனச் சிலப்பதி காரம் புகழ்ந்தது. நரைமுடி பூண்டு முதியவர்களுக்கு அறங் கூறிய கரிகால் வளவனை, "நரை முடித்துச் சொல்லான் முறை செய்தான்" என்று பழமொழி பரவியது. முறை செய்தல் என்பது முறையானதைச் செய்வதாகும். எது முறையான தெனின், ஆன்றோரால் வரையறுக்கப்பட்டு, ஒரு குறிப்பிட்ட அமைப்பிற் கியைந்தவண்ணம் செயல்படுத்துவதே முறை யானதாம். அத்தகைய அமைப்பின் சிறப்பு என்னவென்றால், அறம் வழங்கும் முறையானது மனிதனுக்கு மனிதன் மாறாமல், எல்லோருக்கும் பொதுவானதாக விளங்கும். இல்லா விட்டால் தனி மனிதன் மேலுள்ள விருப்பு, வெறுப்பு அற ஆட்சியை நடுநிலையற்றதாக்கும். திருவள்ளுவர் கொண்ட இக்கருத்து எக்காலத்திற்கும் இயைந்தது; இன்றைய சட்டங் களின் நிலைக்களனாய் அமைவது. நமது அரசியல் சட்டத்தின் 21 வது பிரிவும் இக்கருத்தையே வலியுறுத்துகிறது. ஆங்கிலத் தில் "ப்ரொசிடுரல் லா" **(Procedural law)** அல்லது "ட்யூ புரோசு" **(Due Process of law)** எனக் குறிப்பிடுவதும் இக் கருத்தினதே.

"செங்கோன்மை" என்னும் அதிகாரத்தில் திருவள்ளுவர் அரிய பல கருத்துக்களை அள்ளித் தெளித்துள்ளார். அவ்வதி காரத்தின் முதற்குறள் சட்டச் சிறப்புப் பெற்றது. எது என்ற கேள்விக்கு விடையளிக்கும் வண்ணம்,

> " ஓர்ந்து கண்ணோடாது இறைபுரிந்து யார்மாட்டும்
> தேர்ந்து செய்வஃதே முறை"

என்று கூறுகிறார். "ஓர்ந்து" என்பதால் ஒருவன் குற்றம் செய்தவனா அல்லனா என்பதை ஆராய்தல் ஒருவனைக் குற்றம் சாட்டுவதற்கு முன் நடைபெற வேண்டிய இன்றியமையாத செயல் எனப் புலப்படுகிறது. இன்றைய காவல் துறையினரும் ஒருவனைக் குற்றம் சாட்டுமுன் புலன் விசாரணை ஆகிய முதல் நடவடிக்கைகள் எடுத்து ஆராய்ந்த, பின்னரே அவனைக் குற்

றம் சாட்டுகின்றனர். மேலும் இன்றைய குற்றச் சட்டப்படி குற்றவாளியின் குற்றத்தை நீதிமன்றத்தில் ஐயத்திற்கிட மின்றித் தெளிவாக்க வேண்டியது குற்றம் சாட்டுவாருடைய கடமையாகும். "கண்ணோடாது" என்ற சொல் உணர்த்துவது யாதெனின், குற்றவாளியின் செல்வாக்கு, உயர்வு, தாழ்வு இவற்றை அறம் வழங்கும்பொழுது பார்த்தல் கூடாது என்ப தாகும். "யார் மாட்டும்" என்ற தொடரும் இக்கருத்தையே வலியுறுத்துகிறது. குற்றம் செய்தவர் எவரேயாயினும் சட்டத் தின் பிடியினின்று நழுவ விடுதல் கூடாது என்பதே இதன் பொருள். இன்றைய குற்றச் சட்டத்தின் 'அகர'மெனத் திகழ்வது இக்குறிப்பேயாகும். "தேர்ந்து" என்பதால் குற் றத்திற்களிக்கப்படும் தண்டனையானது அதன் கொடுமைக் கேற்ற அளவுடைத்தாய் இருக்கவேண்டும் என்று புலனு கிறது. இக்கருத்தும் இன்று நடைமுறையில் இருக்கும் ஒன்ருகும்.

"ஒறுத்தாரை ஒன்ருக வையாரே" என்றும் "ஒறுத் தார்க்கு ஒருநாளை யின்பம்" என்றும் கூறிய அதே வள்ளுவர் குற்றங்கடிதலை தீய செயலாகக் கருதவில்லை; "குற்றங்கடிதல் வழுவன்று; வேந்தன் தொழில்" என்கிருர். மேலும் குற்றங் கடிந்து முறை செய்யா மன்னவன் தானே கெடுவான் என்று ஒறுத்தலின் சிறப்பை எடுத்தோதுகின்ருர். கொல்லா நோன்பை மேற்கொண்டவனை எல்லா உயிருந்தொழும் என்று அறம் சொன்ன வள்ளுவர்,

"கொலையிற் கொடியாரை வேந்தொறுத்தல் பைங்கூழ்
களைகட்ட தனொடு நேர்"

என்ற குறள் வழியாய் கொலைத் தொழில் செய்யுங் கொடி யாரை நிலத்தினின்று களையைப் பிடுங்கி எறிவதுபோல் வேரறுத்தல் வேண்டும் என்று வாதிடுகிருர். இன்று கொலைத் தண்டனை கூடாது. அது மனிதப் பண்பாட்டிற் கொவ்வாதது என்ற கொள்கை வலிமை பெற்றுள்ளது. பல நாடுகளும் கொலைத் தண்டனையை ஒழித்துள்ளன. ஆயினும் கொலைத் தண்டனையின் தேவையைப் பல நாடுகள் இன்னும் இன்றி யமையாத ஒன்ருகக் கருதுகின்றன. அருளுணர்ச்சியின் ஊற் ருன திருவள்ளுவரே கொலைத் தண்டனையின் தேவையை அறிந்தபொழுது, நாம் மேற்கொண்டு பேச என்ன இருக்கிறது ?

கொலைத் தண்டனையை ஒப்புக்கொண்ட வள்ளுவர் மற்ற கொடிய தண்டனைகளை ஒப்பாமலா இருப்பர் என்று நாம் எண்ணிவிடுதல் கூடாது. கொடிய தண்டனைகளை வள்ளுவர் பரிவுடன் நோக்கவில்லை என்பதைப் பல குறள்கள் எடுத்துக் காட்டுகின்றன.

குற்றம் சாட்டப்பட்டவன் குற்றம் செய்தவனா என்பதை ஆராய்ந்து அறிந்த பின்னர் அவனை எவ்வாறு தண்டிக்க வேண்டும், தண்டனையின் தரம் எப்படி இருக்க வேண்டும் என்பனவற்றை "வெருவந்த செய்யாமை" என்னும் அதிகாரத்தில் தெளிவாகக் கூறியுள்ளார். அவ்வதிகாரத்தின் முதற் குறள்,

> " தக்காங்குநாடித் தலைச்செல்லா வண்ணத்தால்
> ஒத்தாங்கு ஒறுப்பது வேந்து "

என்பதாகும். இக்குறளின் வாயிலாகக் குற்றம்செய்த ஒருவனுக்கு அளிக்கப்படும் தண்டனையானது அவன் மேற்கொண்டு அத்தகைய குற்றங்களைச் செய்ய எண்ணுத அளவு இருக்க வேண்டும் என்பதைத் திருவள்ளுவர் தெரிவிக்கின்ருர். குற்றத்திற்களிக்கப்படும் தண்டனையின் அடிப்படை நோக்கத்தை ஆராயும் நூலை இன்று ஆங்கிலத்தில் "பீனலசி" (fenology) என அழைப்பர். தண்டனையின் அடிப்படை நோக்கம் எவ்வாறு இருக்க வேண்டும் என்பதைப்பற்றி பல சட்ட அறிஞர்கள் பலவித கருத்துக்களைத் தெரிவித்துள்ளனர். அவற்றுள் சிறப்பான சில ஆராயத்தக்கன. ஒரு சாரார், தண்டனையானது குற்றவாளியை மீண்டும் குற்றம் செய்யா வண்ணம் தடுக்கும் தன்மை வாய்ந்ததாக இருக்க வேண்டும் என்பர். இது "தடுப்புக் கொள்கை" எனப்படும். மற்ருெரு சாரார், ஒருவனுக்களிக்கப்படும் தண்டனை, மற்றெல்லோரையும் அச்சுறுத்தி, அவர்களை அத்தகைய குற்றங்களைச் செய்ய எண்ணுதபடி கடுமை வாய்ந்ததாக இருக்க வேண்டும் என்பர். இதை " அச்சுறுத்தும் கொள்கை " அல்லது " எடுத்துக்காட்டுக் கொள்கை" எனலாம். வேருெரு சாரார் தண்டனைகள் குற்றம் செய்தோரை பழிவாங்கும் தன்மை உடையதாய் விளங்க வேண்டும் என்கின்றனர். இன்னும் ஒரு சாரார் தண்டனைகள் குற்றவாளிகளைச் சீர்திருத்தி நல்ல குடிமக்களாக மாற்றுவனவாக இருக்க வேண்டும் எனக் கொள்கின்றனர். இதை "சீர்திருத்தக் கொள்கை" என்பர்.

மேலே குறிக்கப்பட்டுள்ள கொள்கைகளில் வள்ளுவர் ஒப்பும் கொள்கை யாது என்பதைச் சற்று ஆராய்வோம். "தக்காங்குநாடி தலைச்செல்லா வண்ணத்தால் ஒத்தாங்கு ஒறுப்பது வேந்து" என்ற தொடரால் குற்றவாளி மீண்டும் குற்றம் செய்வதைத் தடுக்கும்வண்ணம் தண்டனை விளங்க வேண்டும் என்பது தெரியவருகிறது. எனவே இன்றைய "தடுப்புக் கொள்கை"யையே வள்ளுவர் ஒப்புக்கொள்கிருர் என்பது,தெளிவாகிறது. ஆனல் வள்ளுவரது தடுப்புக் கொள்கைக்கும், அக்காலத்தில் மற்ற நாடுகளில் நிலவியிருந்த தடுப்புக் கொள்கைக்கும் மிக்க வேறுபாடு உண்டு, வடநாட்டுச் சாணக்கியரும் தமது நூலில் தண்டனைகள் தடுக்கும்

தன்மை வாய்ந்தனவாக இருக்க வேண்டும் என்ற கொள்கையை வலியுறுத்தியுள்ளார். ஆனால் அவர் விதித்திருக்கும் தண்டனைகள் மிகக் கொடுமையானவை. வள்ளுவர் அத்தகைய கொடிய தண்டனைகளைக் கனவிலும் கருதாதவர் என்பதற்கு "வெருவந்த செய்யாமை" என்னும் அதிகாரத்தில் உள்ள எல்லாக் குறள்களும் சான்றாக இருக்கின்றன. எடுத்துக் காட்டாக, ஓரிரு குறள்களைக் காணலாம்.

"கடிதோச்சி மெல்லவெறிக நெடிதாக்க
நீங்காமை வேண்டுபவர்"

என்ற குறளின் வாயிலாகக் குற்றங்களைத் தண்டிப்பவர்கள் ஒருவனை குற்றம் சாட்டும்பொழுது கடுமையாகத் தோன்றி, தண்டிக்குங்காலை மென்மையாக அளவு கடவாமல் தண்டனை அளிக்க வேண்டும் என்று வள்ளுவர் அறம் கூறுகிறார். "மெல்ல வெறிக" என்று கூறியதனால் கடுமையான தண்டனைகளைத் திருவள்ளுவர் விரும்பவில்லை என்பது தெளிவாகிறது. மேலும், கடுமையான தண்டனைகள் குற்றவாளிகளைக் கடின நெஞ்சம் படைத்தவர்களாக மாற்றுமேயன்றி அவர்களைத் திருத்த முயற்சி செய்யா. தண்டனைகளின் நோக்கம் குற்றவாளிகளைச் சீர்திருத்தம் செய்து நல்ல குடிமக்களாக மாறச் செய்வதாய் இருக்க வேண்டும். கொடுமையான தண்டனைகள் குற்றவாளிகளைச் சீர்திருத்தா; வாழ்க்கையில் வெறுப்புற்ற, வன் செயலாளர்களாக மாற்றும். மிகக் கொடிய தண்டனைகள் அரசப்பற்றைப் போக்கி உட்பகையைப் பெருக்கும்.

"கடுமொழியும் கையிகந்த தண்டமும் வேந்தன்
அடுமுரண் டேய்க்கு மரம்"

என்ற குறளின்படி, அளவு கடந்த தண்டனை அரசினுடைய வலியைக் குறைக்கும்.

மேலே கண்ட திருக்குறட் கருத்துக்கள் எக்காலத்திற்கும் எவ்வகைச் சட்ட அமைப்பிற்கும் பொதுவானவை. திருக்குறள் ஒரு பொதுமறை என்பதற்கு இவை மற்றொரு சான்றாகத் திகழ்கின்றன. மற்ற சட்டக் கருத்துக்களைக் காட்டிலும் குற்றச் சட்டக் கருத்துக்களுக்கு அதிகச் சிறப்பை வள்ளுவர் அளித்துள்ளதால் அரசாட்சியில் குற்றங்கடியும் பணியின் மேன்மை நன்கு தெளிவாகிறது. குற்றம் செய்வோரைத் தண்டிக்க இயலாத அரசு நாள்தோறும் தேயும் என்பதை

"நாடொறு நாடி முறை செய்யா மன்னவன்
நாடொறு நாடு கெடும்"

எனக் கூறிச் செல்கிறார் நாயனார்.

ஆதிமந்தி

ச. பாலசுந்தரம்

இசைமுகிலோன் :—

யாருன்னைக் கேட்டார்கள் மடையா?

சரத்குமாரன் :— [இரக்கமுற்றவன் போல]

.... நண்பா!

யாசிக்கும் வழியுரைக்க வந்தேன், என்னை
நேருக்கு நேர்பழித்துப் பேசு நோகேன்
நினைத்ததை யான் சொல்லாமல் செல்லமாட்டேன்
பேருக்கு நண்பனென எண்ணுதே நீ
பெறும்மகிழ்ச்சிக் கெனதுயிரும் தருவேன்; ஆனல்
ஊருக்குள் ஆட்டனத்தி உள்ளமட்டும்
உன்கருத்தை மருதிஒத்துக் கொள்ளமாட்டாள் (126)

இசைமுகிலோன் :—

அத்திமனம் நீயறியாய் மருதியின்பால்
அவனுக்குக் காதலில்லை ....

சரத்குமாரன் :—

.... அதையா சொன்னேன்
புத்திதடு மாறுகிருள் மருதி என்ருல்
புரியாமற் பேசுகின்ருய்! ஆட்டனத்தி
வித்தையிலே மயங்காத பெண்டிருண்டா?

இசைமுகிலோன் :—

வீண்பேச்சு; மருதியின்பால் ஒருகா லத்தும்
அத்தியுளம் செல்லாது ....

சரத்குமாரன் :—

.... மடையா! நம்பால்
அவனுள்ளம் வாராதென் றறியுங் காறும் (127)
மருதியுனை விரும்புவது வானப் பூதான்...
மற்றுமொன்று சிந்திக்க வேண்டும் அத்தி
கருதுவதை நாமெவ்வா றறிதல் கூடும்
கட்டழகில் மயங்காத காளையர் யார்?
விரதிகளும் வழுவியதைப் படித்துள்ளோம் நாம்
வீண்வாதம் எதற்காக—உன்விருப்பம்
ஒருபொழுதுமில்லை அத்தி உள்ள மட்டும்.

இசைமுகிலோன் :—

உள்ளமொரு நிலையிலில்லை பின்பு பார்ப்போம் (128)

[சோர்ந்த உள்ளத்தோடு முகிலோன் செல்லுகிருன் சரத்குமாரன் தன் சூழ்ச்சி நிறைவேறும் என்ற மகிழ்ச்சியோடு சிரித்துக்கொண்டே செல்லுகிருன்.]

பதினேருங் காட்சி முடிவு

காட்சி 12.

நடிகர்: கூத்தன், இசைமுகிலோன், சரத்குமாரன், ஆட்டனத்தி.
இடம்: கூத்தன் வீடு
காலம்: இரவு

[சரத்குமாரன் கூறிய மொழிகளால் உளந் திரிந்த இசைமுகிலோன் தன் தந்தையிடம் ஆட்டனத்தியை வெளியேற்றுமாறு கூறிப் பூசலிடுகிறான்]

இசைமுகிலோன்:—
அப்பா! இங் கெனக்கினிமேல் வேலை யில்லை
அவனிருக்க வேண்டுமெனில் நான்போ கின்றேன்

கூத்தன்:—
இப்போநீ என்னசெய்யச் சொல்லு கின்றாய்?

இசைமுகிலோன்:—
எத்தனை நாள் பகைவனுடன் வாழ்வது? அத்தி
எப்போதும் எனக்கிடையூ றியற்று கின்றான்
இவனிருக்கும் இடத்திலெனக் கென்ன வாழ்வு?

கூத்தன்:—
தப்பேதும் அவன்செய்ய மாட்டானே! நீ
சரியாகச் சொல்லாமல் ....

இசைமுகிலோன்:—
.... சொல்வ தென்ன? (129)

சரத்குமாரன்:— [வந்து கொண்டே]
"படிப்பாளி இசைஞானி நடன மன்னன்
பாவலன்யான்" என்றெங்கும் பறை முழக்கி
எடுப்பான மங்கையரை மயக்கு கின்றான்
இன்னுமென்ன? ....

கூத்தன்:— [வெகுண்டு]
...... இருக்காது வரட்டும் நேரில்...

சரத்குமாரன்:—
நடிப்பானே; நீங்களதை நம்பு வீர்கள்

இசைமுகிலோன்:—
நன்றிகெட்ட பதரிந்த வீட்டில்—என்ன—
கொடுத்தாவைத் திருக்கின்றான் ......

கூத்தன்:—
[சரத்குமாரனைப் பார்த்தபடியே]
.... உனக்கு யாரோ
கோள்சொல்லி உள்ளார்கள் குடிகேடர்கள் (130)

[சரத்குமாரன் மெதுவாக நழுவிச் சென்று விடுகிறான்]

ஆட்டனத்தி போல்உலகில் பலர் தோன்றுர்கள்
அறிவில்மட்டு மன்று பல அருங் குணத்தில்
ஈட்டெழிலில் எளிமையினில் இயைந்த வாழ்வில்
இவனெப்பார் மிகவரியர் அவன் நம் வீட்டில்
நாட்டமுடன் இருக்கும் வரை புகழ்நமக்கு
நான்நேரே கேட்கின்றேன் ... முகிலா! மன்னர்
கூட்டத்தில் ஒருவனவன்; உன்னை வேண்டிக்
கொள்கின்றேன் அவனிடத்தில் அழுக்கு றுதே. (131)

உடன்பிறப்பின் மேலாக உன்னை எண்ணி
ஒழுகுகின்றுன் உரைக்கின்றுன், உனக்கு வேண்டும்
கடன்புரியக் காத்துள்ளான்—உன்விருப்பைக்
கவலையுடன் முடித்துவைப்பான்—காலம்நேரும்
இடம்பார்த்திங் கிருக்கின்றுன்—எவனே சொன்ன
இழிவுரையால் உள நந்திரிந்து பின்வ ருந்தும்
மடங்கொண்டு திரியாதே ... ...

ஆட்டனத்தி :—

[அப்பொழுது வந்து கொண்டே]

... ... வணக்கம் அப்பா!

கூத்தன் :—

மாலையிலிந் நேரமட்டும் எங்கு சென்றுய்? (132)

மன்னரிட மிருந்தழைப்பு வந்த திங்கே
வருகின்ற மதிநாளில் ஆட வேண்டும்.

ஆட்டனத்தி :—

முன்னருங்களிடஞ் சொன்ன படிதா னே? நம்
முகில்பாடிஞல்யானும் ஆடுகின்றேன்
என்னுடனே இசைமுகிலோன் இருத்தல் வேண்டும்
இருவருக்கும் புகழொன்றுய் வளர வேண்டும்

கூத்தன் :—

மன்னருளம் எப்படியோ? ... ...

ஆட்டனத்தி :—

... ... தானே சென்று
மந்திரியைக் கேட்கின்றேன், மதித்தால் உண்டு (133)

இசைமுகிலா! உடற்கென்ன? சோர்ந்துள்ளாயே

இசைமுகிலோன் :—

என்றும்போல் தான்உள்ளேன் ... ...

ஆட்டனத்தி :—

... ... இல்லை இல்லை
அசைவுடனே காணுகின்றுய்; அகத்தில் ஏதோ
அரிக்கிறதுன் நினைவை ... ...

கூத்தன் :—

.... உன்னைப் பற்றி
வசையாரோ சொல்லியுள்ளார் அதனைக் கேட்டு

ஆட்டனத்தி :—

வசைபேசல் வஞ்சகருக் கியல்பு நாமே
திசைமாறிச் செல்லாமல் வாழ்ந்தால் தீமை
செயநினைப் பார் தாம்அழிவார் ....

கூத்தன் :—

... ... சரிவா ருங்கள் (134)

[எல்லோரும் உணவுண்ணச் செல்கின்றனர்]

பனிரண்டாங் காட்சி முடிவு

காட்சி 13.

நடிகர்: ஆதிமந்தி, மருதி, இடம்: வழிநடை
காலம்: முற்பகல்

[நெருநல் நடைபெற்ற முத்தமிழ் விழாவில் ஆட்டனத்தியும் இசைமுகிலோனும் கலந்துகொண்ட சிறப்பைப்பற்றி இருவரும் உரையாடுகின்றார்.]

ஆதிமந்தி :—

நெருநல்ஏன் மருதி! எனை மறந்துவிட்டு
நீதனியே கலைக்கூடம் சென்று விட்டாய்?
வருவாய்நீ என்றங்கே காத்திருந் தேன்

மருதி :—

மனம்ஒப்பி உள்ளபடி சொல்நீ நேற்றைத்
திருவிழவை கண்டுவரும் விருப்பம் உண்டா?
தேடியுனை எங்கெங்கோ அலைந்து நொந்தேன்

ஆதிமந்தி :—

மருதியுன துளமறியக் கேட்டே னல்லால்
மறப்பாயா? என்னருமைத் தோழி! உன்மேல் (135)
பிழைகாணப் பேதைமையா? ....

மருதி :— [மிகமகிழ்ச்சியோடு]

... ... ஆதிமந்தி!
பெருமைக்குச் சொல்லவில்லை விழா மன்றத்தில்
நுழைவதற்கே முடியவில்லை, நூல் வல்லோர்கள்
நோக்குமிடம் எங்கெங்கும் நிறைந் திருந்தார்
அழையாமல் அயல்நாட்டுக் கலைஞர் பல்லோர்
ஆர்வமொடு வந்திருந்தார்... அடடா! நெஞ்சங்
குழையுதடி நீயில்லாக் குறைதான் அங்கே;
குவலயத்திம் முத்தமிழின் விழாவைப் போல (136)

நடப்பதென்ப தருமையங்கே நடந்த வற்றை
நாவாலே இசைப்பதென்ப தியலா துன்றன்
மடப்பத்தால் அங்குவர மறுத்து விட்டாய்

ஆதிமந்தி :—
வருந்தாதே மருதி!என்றன் அன்னை சொல்லைக்
கடப்பதற்கு விருப்பமில்லை... விடு—நீ அங்கே
கண்டஅருங் காட்சிகளைச் சொல்லுன் கூற்றை
விடப்பெரிதா நான்வந்தங் கென்ன கண்டு
விடுவேன் ; நீவிளக்கிச் சொல் ... ...

மருதி :—
... ... ஆடல்பாடல் (137)

இரண்டிலுமே நம்மவர்தாம் இசை பெற்றூர்கள்
இசைமுகிலோன் பாடலிலே இனிமை வெள்ளம்
திரண்டு மக்கள் செவிகளிலே ... ...

ஆதிமந்தி :— [நகைத்து]
... ... நிறையஉன்றன்
செவிவழியே புகுந்துளத்தில் தேங்கிப் பொங்கி
புரண்டுநிலை ... ...

மருதி :—
... ... போடீநான் சொல்ல மாட்டேன்

ஆதிமந்தி :—
புதிதாக என்னசொன்னேன் முகிலைக் கண்டு
மிரண்டுசெல்லும் மயிலில்லை என்றேன் ... ...

மருதி :—
... ... அத்தி
விளையாட்டைச் சொன்னுல்நீ விரும்பிக் கேட்பாய் (138)

ஆதிமந்தி :—
போவேன்நான் இப்படிநீ சொன்னுல் ... ...

மருதி :— [செல்லமாக]
... ... போயேன்...

ஆதிமந்தி :—
போகட்டும்; வெகுளாதே நடந்ததைச் சொல்!

மருதி :—
யாவருமே ஆட்டனத்தி ஆடல் கண்டங்
கப்படியே ஓவியம்போல் அமைந்து விட்டார்
பாவாடல் பண்ணுடல் பாவத் தாடல்
படிந்தாடல் எழுந்தாடல் பரவி யாடல்
கோவாடல் கூத்தாடல் குறிப்பா லாடல்
குனிந்தாடல் குழைந்தாடல் குரவை யாடல் (139)

ஆதிமந்தி :—

போதுமடி! உன் ஆடல் …… ……

மருதி :— [நகைத்து]

…… …… புதுப்பெண் போல
பொங்குகிற தேமுகத்தில் நாணம் ……

ஆதிமந்தி :—

…… …… …… என்னை
ஏதுமறியாதவ ளென் றெண்ணி விட்டாய்

மருதி :— [குறும்பாக]

எவர் சொன்னூர் நேராகக் கேட்டிருப்பாய்;

ஆதிமந்தி :—

நாதவொலி கேட்டாடும் நாகம் போல
நல்லிசையை முகில்பாட நானு கேட்டேன்

மருதி :— [வெறுப்பாய்]

தீதுபடப் பேசாதே—என் றன் உள்ளம்…

ஆதிமந்தி :—

சிக்கிவிட்ட தவரிசையில் சரியா? ……

மருதி :— [மிக்க துயரத்தோடு]

…… …… …… தோழீ! (140)

உங்களி ருவரையும் நான் ஒன் றுகூட்டி
உலகறிய வாழும்வகை செய்யும் மட்டும்
இங்கெதையும் எனக்காகச் சிந்தை செய்யேன்
என்னூணை என் தமிழ் மேல்ஆணை! இந்தச்
செங்கதிரோன் மீதாணை …… ……

ஆதிமந்தி :—

[பரபரப்புடன் இடைமறித்து]

…… …… தோழி ஒன் றும்
சிந்தைசெய்யாய்; சூழ்நிலையை எண்ணு யாய்நீ
பொங்குகின்ற உணர்ச்சியினுல் சூளுரைத்தால்

மருதி :—

பொருந்தும் அதைப் பொருத்துவதென் கடமை (141)

[என்று கூறி ஆதிமந்தியை அழைத்துச் செல்லுகிருள்]

பதிமூன்ருங் காட்சி முடிவு

காட்சி 14.

நடிகர் : செவிலி முல்லை, சரத்குமாரன்,
ஆதிமந்தி, மருதி. இடம் : முல்லையின் வீடு
காலம் : முன்னிரவு

[அழுக்காறு கொண்ட சரத்குமாரன் ஆதிமந்தியைப் பற்றி முல்லையம்மாளிடம் தகாத முறையிற் கோள் மூட்டுகிருன். அரசன் மகளாகிய ஆதிமந்தியை ஆட்டக்காரன் மணப்பதில் விருப்பமில்லாத செவிலியாகிய முல்லை கண்டிக்கிருள்]

சரத்குமாரன் :—
பாட்டீஏ! பாட்டீ! ... ...

முல்லை :— [உள்ளிருந்தபடியே வந்து]
... ...யாரப்பா ? ...வாவா !

சரத்குமாரன் :—
பாட்டி!இங்கே ஆட்டனத்தி வந்தானு? நான்
வீட்டிலிருப் பானென்று போனேன்... இல்லை—
வேறெங்கே போயிருப்பான்? எங்கும் செல்ல
மாட்டானே... (உம்) ஆதிமந்தி? ... ...

முல்லை :— [கிளர்ச்சியின்றி]
... ... படிப்பதற்கு
மருதியிடம் போவதாக ... ...

சரத்குமாரன் —
... ... சரிதான் அப்போ
கேட்டதெல்லாம் உண்மைதான் ... ...

முல்லை :— [கவலையோடு]
... ... என்ன தம்பி
கேட்டாய்நீ? ... ...

சரத்குமாரன் :—
... ... எனக்கேன் வம்பு—நாளை (142)
தன்னாலே தெரிகிறது ... ...

முல்லை :—
... ... என்னப்பா நீ
தானுகப் பேசுகிருய் ... ...

சரத்குமாரன் :—
... ... இல்லை—பாட்டி
சொன்னாலும் பொல்லாங்கு ... ...

முல்லை :—
... ... சும்மா சொல்லு !

சரத்குமாரன் :—
துளிக்கூட உனக்கெதுவும் தெரியாதா? பேர்
என்னாலே வந்ததென ஆதி மந்தி
என்மீது கோபிப்பாள்; இருந்தா லும்என்

முன்னாலே வந்ததையேன் மறைக்க வேண்டும்?
முளையினிலே கிள்ளித்தான் ஆக வேண்டும். (143)

வயதுவந்த பின்னரும் பெண் படிப்பதென்ற
வழக்கத்தால் வந்தவினை ... ஆட்டனத்தி ...
கயவனவன்; கலைஞனென ஆதி மந்தி
கருதியுளங் கலங்குகிருள் ... காதல் பேச்சு
நயமாகப் பேசுகிருன், நானே நேரில்
நன்ருகக் கேட்டேன்; உன்மகளைச் சற்று
பயமுறுத்தி வை, இன்றேல் பழிப்பு நேரும்
பார்ப்பதற்கு நல்லவர்போல் நடிக்கின் ருர்கள். (144)

இப்பொழுதும் அவனிடம்தான் சென்றிருப்பாள்

முல்லை :—

எனக்கொன்றும் தெரியாதே... வரட்டும் இங்கே

சரத்குமாரன் :—

தப்பாக எண்ணுதே பாட்டி வாறேன்.

[சரத்குமாரன் போகிருன் அப்பொழுது ஆதிமந்தி வந்து கொண்டிருக்கிருள்.]

முல்லை :—

தாயில்லாப் பெண்ணென்று பார்த்தால்... ஏண்டீ!
அப்படியே நில்லங்கே எங்கே போனுய்?
ஆட்டனத்தி இடத்திலுனக் கென்ன வேலை?

ஆதிமந்தி :—

எப்பொழுதங் கேபோனேன் —மருதி வீட்டில்
இருந்தபடி வருகின்றேன் ... ஏனம்மா நீ (145)

கொதிப்போடு பேசுகிருய்? என்ன செய்தி?
கூறம்மா ... ...

முல்லை :— [சிறிது தணிந்து]

... ... ஒன்றுமில்லை குடித் தனத்தை
மதிப்பாகச் செய்வதற்கு வேண்டும் மட்டும்
வாசித்தால் பெண்களுக்குப் போதும் எல்லாம்
விதிப்படித்தான் நடக்கும்இனிப் பள்ளிக் கூடம்
வேண்டாம்நீ வீட்டிலிரு படிப்புப் போதும்

ஆதிமந்தி :—

அதெப்படிநான் இருப்பதம்மா அருங் குறையாய்?
ஆண்டிறுதி அடைவதற்குள்—வந்த தென்ன? (146)

முல்லை :—

விறலிமகள் ஆடுவதை விட்டு விட்டு
வீணைகப் படிக்கின்றேன் என்று சொல்லி
அறவேநீ ஆடுவதை மறுத்து விட்டாய்
அதுவேநம் தொழில், போனுல் போகட்டும்போ

பிறவியிலே இருந்திருந்தால் வருமென்றே நான்
பேசாமல் இருந்துவிட்டேன் ....

ஆதிமந்தி : [ஒன்றும் புரியாதவளாய்]
.... அதனு லென்ன
குறையெனக்கு வந்த திப்போ? ......

முல்லை :—
.... ஒன்றுமில்லை
குற்றமெல்லாம் என்மேல்தான் இதுபோல் பேசி (147)
பட்டியென்ற பெயரெடுக்கப் பழகி விட்டாய்
பணிவுனக்குக் கடுகளவும் இல்லை, போபோ!
கெட்டதெல்லாம் என்னுல்தான் பெண் படித்தால்
கெடுமதிதான் தோன்றும் உனைப் பயிலச் சொல்லி
விட்டதற் கிங்கிது போதாதின்னும் வேண்டும்

ஆதிமந்தி :—
வெறுப்புனக்கு வரும்படி நான் செய்தேன்?
தொட்டதற்கெல்லா மெதற்குப் படிப்பைக் குற்றம்
சொல்லுகிருய்? ....

முல்லை :— [அப்பொழுது மருதி வர]
...... மருதியா?வா! நீயும் கேளு! (148)
பருவப்பெண் பள்ளிக்குச் சென்ருல் அங்கே
பண்போடு நடப்பவர்கள் எத்தனைப் பேர்
உருவொப்பில் லாதவள் நீ; மேலும் ஆடி
உயிர்பிழைக்கும் குலத்தவள் நீ ...

மருதி :— [முல்லையின் கருத்தறியாளாய்]
.... அதனு லென்ன?
கருவொத்துப் பிறந்தவருள் உயர்வு தாழ்வு
கற்பிப்ப தென்ன அறம்? அம்மா! இந்த
பருவத்தோ டுருவமெல்லாம் இயற்கைச் செல்வம்
பண்பொன்றே நாம்வளர்த்துக் கொள்வ தாகும் (149)

முல்லை :—
பண்பெங்கே வாழ்கிறது? பாழும் மக்கள்
படிப்பதொன்று நினைப்பதொன்று சொல்வ தொன்று
கண்பின்னே செய்வதொன்று கணக்குப் பார்த்தால்
கயமைப்பேய்க் கடிமைகளாய் கடன்பட் டிங்கே
நண்பரைப்போல் நடிப்பவர்கள், தந்நலத்தில்
நாட்டமுற்றுப் பொதுநலத்தை அழிப்போர் நூற்றில்
எண்பதுபேர் இருப்பார்கள் ....

ஆதிமந்தி :—
.... என்னம்மா நீ
இப்படியே எண்ணுகின்ருய் இணையில் லாத (150)

திறல்வீரன் செங்கோலான் கலைகள் யாவும்
தேர்ந்த திருமாவளவன் ஆட்சியின் கீழ்
உறவாக வாழும்போ திந்த ஐயம்
உன்னைமட்டும் வாட்டுவது மிக வியப்பு

முல்லை :—

மறவேலும் செங்கோலும் கையிற் கொண்டு
வஞ்சகத்தை நெஞ்சகத்தே கொண்டுள் ளானே!

ஆதிமந்தி :—

அறம்போற்றும் மன்னவனை இகழ்ந்தால் என்றன்
அகம்பொறுக்கா தம்மாநீ என்னைப் பேசு ! (151)

சென்னிமர பிற்கேயோர் செங்கதிர் போல்
செந்தமிழ்செய் தவத்தாலே வந்த வேந்தை
உன்னுமற் பேசுகிறாய் ....

முல்லை :—

[கொதிப்போடு]
.... உன்னைப் பெற்ற
உத்தமியின் றிருந்தால்நான் பேச மாட்டேன்
கன்னியர்தம் மனத்தைமிகக் கரைத்துக் கள்ள
காதலென்ற பசப்புரையால் கலைத்துத்—தோன்றி
மின்னலெனக் கழியும் உடல் உறவிற்காக
மெல்லியலார் தமைக்கொல்லும் விலங்கே ஆண்கள் (152)

ஆதிமந்தி :—

இப்புவிக்கே காதலெனும் தத்து வத்தை
இயம்பி அதன் வழிநடந்தவ் விலக்கியத்துள்
செப்பியதோர் தெய்வநிலை தேர்ந்து வாழும்
செந்தமிழர் பண்பினையே சிதைத்துப் பேச
எப்படியம்மா துணிந்தாய்? ஏதோ ஒன்றை
எண்ணியுளம் நைந்திவ்வா றுரைக்கின்றாய் நீ;
தப்புநிகழ்ந் திருந்தால்சொல்? ....

முல்லை :— [இரக்கத்தோடு]

.... அடி!யென் பேதாய்!
தமிழகத்திற் கரணம்வந்த போதே பெண்பால் (153)
ஆடவர்கள் தவறிழைக்க அஞ்சார் என்ற
அறிவுனக்குத் தோன்ற வில்லை? ......

மருதி :— [இடைமறித்து]

.... தோன்றுதம்மா
பாடுபெறுந் திருமணத்தைப் பலருங் காணப்
பரிந்துசெயப் பாவலர்கள் பார்த்தார்; மேலும்
கேடுசெய்யும் பொய்வழுவு கிளைத்த பின்னர்க்
கரணத்தை யாத்தார்கள் ஐயர் என்னும்

நீடுமொழி படியாமற் பேச வில்லை
நெறியின்றி வாழவந்த சில்லோ ரீங்கே (154)

பலவாருய்ச் சடங்கியற்ற முனைந்த காலைப்
பைந்தமிழர்க் கிதுகரணம் என வகுத்துப்
புலவோர்கள் செய்ததன்றி எங்கோ யாரோ
புல்லறிவால் தவறியதாற் செய்தார் என்றல்
நலமாமோ? ....

ஆதிமந்தி :—
...... நவைபுரிந்தோர் பின்னர் மட்டும்
நசையோடு வாழ்வாரோ நன்கு சொன்னுய் ;

முல்லை :—
சிலநாளா நீர்பேசும் முறையைப் பார்த்தால்
செய்தி யெல்லாம் உண்மைஎன்றே தேறவேண்டும் (155)

எண்ணரிய பண்புவழக் கொழுக்கம் நாண் தேர்ந்
தியங்கிவரும் பழங்குடியிற் பிறந்தார்க் கன்றிக்
கண்ணிருந்தும் குருடாகிக் கருத்திருந்தும்
கைபோகிக் கல்வியெனும் ஒளியிழந்து
பெண்ணென்ற பித்தேறிப் பிறிது நோக்காப்
பெற்றியது'காளை' எனும் பருவம்—பூத்த
வண்ணமலர் போல்விளங்கி மனத்தை மாற்ற
வரும்மங்கைப் பருவமுமிங் கவ்வாறேதான் (156)

பருவ(ம்)நிதி உடற்பசியால் தோன்றுங் காதல்
பாசியைப் போல் வேரில்லாப் பான்மைத்தாகும்
உருவமழ குளத்திமிரால் தோன்றும் காதல்
உள்ளீடற் றொருகாலைக் கொருகால் தேயும்

மருதி :—
உருவமுதல் ஈரைந்தும் ஒப்பி ஊழால்
உண்மையுணர் வறிவுடனே தோன்றுங் காதல்?

முல்லை :—
பெருமையதே; ஆனுலும் இங்கு வாயாற்
பேசுதற்கும் நடைமுறைக்கும் பேதம் கோடி (157)

ஏட்டிலுள்ள காதலைப்போல் இனித் திடாது ;

ஆதிமந்தி :—
எதைகருதிப் பேசுகிருய் அம்மா ?

முல்லை :— [வெகுளியோடு]
.... உன்பால்
ஆட்டனத்தி அடிக்கடிவந் தளவ லாலே
ஐயத்தால் அலரெழுப்பு கின்ற திவ்வூர்
ஈட்டந்தான் நமக்கில்லை என்ருல் இந்த
இழிவையுமா நாம்சுமக்க வேண்டும்? அந்த

ஆட்டனத்தி யுடன் இனிநீ பேசவேண்டாம்
அவனிருக்கும் இடத்திலும் நீஇருக்க வேண்டாம் (158)

"அமிழ்தைப் போல் பேசிஎன தாருயிர்நீ
அலைகடலே வறண்டாலும் உன்மேல் ஆசை
இமியேனும் குறையா"தென் றினிக்கப் பேசி
எழில்பருகிப் பின்விடுவார் தமைநம் பாதே

மருதி :—

தமிழ்க்குடியில் தமிழ்நாட்டில் தமிழத் தாய்க்குத்
தகைமகவாய்ப் பிறந்தவருக் கெக்கா லத்தும்
துமியேனும் தவறுசெயத் தோன்ரு தம்மா
துன்புறினும் தூயதன்றி வேறு செய்யார் (159)

ஆதிமந்தி :—

ஏனென்னை இவ்வாறு கொல்லு கின்ருய்?

மருதி :—

இயல்பாலும் பண்பாலும், இலக்கி யத்துள்
தானம்மா அவரைப்போல் தன்மா னஞ்சால்
தமிழ்மகனைக் காணவொணும் ....

முல்லை :—

[வெறுப்பாய்]

.... ஆமாம் போடி!

[மருதி போகிருள் போனபின்பு]

தேனைப்போல் பேசிஉனைத் திரித்து விட்டான்
தேசமென்ன பிறப் பென்ன? தெரிவாயா நீ?
மானமுள்ள மறத்தமிழன் மகள் நீ—உன்னை
மணப்பதற்குச் சிறிதும் அவன் தகுதியாகான் (160)

ஆதிமந்தி :—

அவரைப்போல் நானும் ஓர் போக்கிலித்தான்
அவராயின் ஆடவர் யான் அடிமைதானே?
புவியாள்வோன் மகளாயான்ப் பொன்ற லின்றி,
பூமிக்குப் பொறையாகி வாழ்கின் றேனே
தவழாமுன் தாயிழந்தேன்—ஐயோ! என்னல்
தாங்கமுடியா தம்மா—ஏன்பி றந்தேன்—
கவலைப் பட்டழிவதற் கேன் எனைவளர்த்தாய்
கண்டபடி என்னையுந்தான் பேசுவார்கள் (161)

தந்தையின் பேர் தெரியா தாள் என்றிகழ்ந்து
தாழ்த்தி உயிரோ டிவ்வூர் சுட்டெரிக்கும்
இந்தநிலை வேண்டாமென் தந்தை யாரென்று
இப்பொழுதே சொல்லம்மா, இனிமே லிங்கே
நிந்தையுடன் வாழேன் நான்—என்பிறப்பு
நேர்மையற்ற தென்ருல்சொல் இன்னே மாய்வேன்

முல்லை :—

[அழுதுகொண்டே]

வெந்த புண்ணில் வேல்நுழைப்பார் போலநீஎன்
வேதனையைக் கிளறுகிருய் ஐயோ ! அம்மா ! (162)

மாசற்ற பிறப்புடைய மாணிக்கம் நீ
மன்னர்தலை வணங்கு குலத்துதித்தாய், கண்ணே !
நீ,சற்றுப் பொறுத்திரம்மா சமயம் நேரும்
நீயார் யான் யாரென்ற நிசம்விளங்கும்
தேசுற்ற குடிப்பிறந்த தெய்வமம்மா
தெரியாமல் உனைப் பேசமாட்டார்—நாக்குக்
கூசுமிதைக் குறித்துனக் குக்கவலை வேண்டா
குறையில்லாத் தவமகள்நீ குறிக்கோள் இன்றி (163)

உன்விருப்பைத் தடுத்திங்கே உரைக்க மாட்டேன்
உயிரைப்போல் உனைவளர்த்தேன் உனது நன்மை
என்வாளுள் குறிக்கோளாம் என்னை நம்பு
இசைபாடி ஆடி நறுங் கலைவளர்க்கும்
என்விருப்பப் படியாநான் செய்தேன் உன்னை ?
ஏனென்று தெரிந்தாயா ? உன்றன் தந்தை
முன்வந்திங் குனையழைக்கும் போது காண்பாய்
முதுமையில்என் மனம் முறியச் செய்திடாதே (164)

ஆதிமந்தி :—

உயர்குடியிற் பிறந்தவள் யானுனல் முன்னை
ஊழின்றி ஒருவர்பால் உளஞ் செல்லாதென்
றியல்வரைந்து கூறுவது பொய்யாகும் மோ ?

முல்லை :—

இலக்கணம் போல் வழக்குநடை இருக்காதம்மா

ஆதிமந்தி :—

அயர்வில்லா வாழ்வவரோ டாகும் இன்றேல்
அழியுமட்டும் அழியாத கன்னியே யான் !

முல்லை :—

துயர் வேண்டாம் கண்ணே நான் ஆய்ந்துகாண்பேன்
அதுவரைக்கும் பொறுத்திரம்மா விதிபோல் ஆகும் (165)

[மிகுந்த துயரத்தோடு ஆதிமந்தியை அணைத்துச் செல்கிருள்]

பதிநான்காம் காட்சி முடிவு.

காட்சி 15.

கூடிகர்: சரத்குமாரன், ஆட்டனத்தி, மருதி, இரும்பிடர்த்தலையார். இடம்: சோலைவழி காலம்: பிற்பகல்

[அமைதியற்ற உள்ளத்தோடு சரத்குமாரன் தனியே]

சரத்குமாரன் :—

உள்ளபடி உலகத்தில் தமிழ கத்தை
உன்னிப்பார்த் தால்,கலையில் காவி யத்தில்
கள்ளமிலா ஒழுக்கத்தில் கல்வி கேள்வி
கடமைகளில் ஒப்புரவில் சிறந்த தென்ப(து)
எள்ளளவும் ஐயமில்லை இந்நாட் டாரின்
இறைமைக்கும் இயம்பரிய வீரத் திற்கும்
அள்ளுசுவைச் செந்தமிழின் நெறியோ டாங்கே
அமைந்துள நூல், ஆட்சியிவை காரணம் மாம் (166)

என்பதிலே மாறுகொள்ள இடமே இல்லை!
எனக்கேன் இத்தமிழகத்திற் பற்றே இல்லை?
முன்பெதுவும் கற்கவில்லை யான்; ஆனாலும்
முத்தமிழைக் கற்பதிலே முயற்சி இல்லை!
தின்பதிலே திளைப்பதிலே தென்னாட் டோடு
சேர்ந்த பின்னும் சிந்தையிலே திரிபுணர்ச்சி!
என்புதுமை? இவ்வுணர்வை வெல்வ தென்றல்
எளிதாகா தென்பதெல்லாம் உண்மை உண்மை (167)

உருவுணர்வு உள்ளம்அவா உண்ப தெல்லாம்
உலகமக்கள் யாவருக்கும் பொது வென்றாலும்
வருமரபு குலப்பிறப்பு வழக்கம் வாழ்வின்
வகையாவும் மண்வாகில் வருமென்பார் சொல்
ஒருபொழுதும் பொய்யில்லை—ஒரு நாட்டில் மற்
றொருநாட்டான் எத்துணையாண் டுறைந்தாலும் தான்
கருதுவது தன்முன்னோர் வாழ்ந்த நாட்டைக்
கலையைப்பண் பாட்டைஎன்ப துண்மை உண்மை (168)

[அப்பொழுது ஆட்டனத்தி பின்புறம் வந்தவன் சரத்குமாரன் தனியே பேசிக்கொண்டிருப்பதைக்கண்டு நட்புள்ளத்தோடு வினவுகிறான்.]

ஆட்டனத்தி :—

கொடியைப் பார்த் தென்னப்பா பேசுகின்றாய்?
கொஞ்சுமொழித் தேன்வண்டுக் கூட்டம் உன்னைத்
தொடவிட்டுச் சும்மாவா இருக்கும்? ......

சரத்குமாரன் :—

[வெறுப் போடு]

.... என்னைத்
தொல்லைசெய வேண்டாம்போ! உனக்கெப் போதும்

துடியிடையார் சிந்தனைதான் ஏனென்ருல் நீ
தொல்காப் பியன்மரபில் வந்தாய் பாரு
செடிகொடிகள் சோலைமலர் மரங்கள் எல்லாம்
சேலை கட்டும் மங்கையராய்க் காட்சி நல்கும் (169)

ஆட்டனத்தி :—
திசைமயங்கிப் போகிறதே பேச்சு ? ......

சரத்குமாரன் :—
[எள்ளலோடு]
... ... ஆம்ஆம்
செந்தமிழைக் கற்றதனுல், திருட்டுக் காதல்
நசையாலே என் நினைவும் நழுவிப் போச்சு

ஆட்டனத்தி :—
நண்பா !இந் நச்சுரைகள் வேண்டா ... ...

சரத்குமாரன் :—
[வீணே பகைவளர்க்க எண்ணி]
... ... போடா
தசைத்தி மிரால் நானென்றும் பேசவில்லை
தமிழ்படித்த தாலுனைப்போல் நானும் கெட்டு
வசை மொழிசேர் ஒழுக்கத்தால் வஞ்சகத்தால்
வழுக்கி விழ மாட்டேன் ... ...

ஆட்டனத்தி :—
[வியப்பும் வெகுளியும் சேர]
... ... நீ எதை நினைத்து (170)

வரையின்றிப் பேசுகிருய் ? வாய்க் குவாய்நீ
வளர்தமிழை இழுக்கின்ருய் ?

சரத்குமாரன் :—
[இகழ்ச்சியோடு]
... ... வழக்கங் கெட்ட
உரைமலிந்த தமிழ்தானே உங்கள் உள்ளத்
தூன்றி நின்று கெடுக்கிறது ? ... ...

ஆட்டனத்தி :—
[வெகுண்டு]
.... சரத்குமாரா !
புரையாக இனிப்பேசின் பொறுக்கா துள்ளம்
புலமையறம் அன்பொழுக்கம் கடமை யாவும்
திரைகடல்சூழ் உலகினுக்கே வழங்கி வாழும்
செழுங்கலைசால் செந்தமிழைப் பற்றிக் கூறும் (171)
தகுதியுனக் கில்லையடா ....

சரத்குமாரன் :—
.... அடடா வீரத்
தமிழ்மகவே! தமிழில் என்ன சிறப்பிருக்கு ?

பகுதிசெய்து பார்த்தால்அங் கொன்று மில்லை
பாணினி,வான் மீகியைப்போல் ஒருவ ருங்கள்
தொகுதியிலே உண்டா ? தொல் காப்பியத்தைத்
தூக்கிவைத்துப் பேசுகின்றீர்—துருவிப் பார்த்தால்
மிகுதி யும்அவ் வடமொழியிற் கண்டதாகும்
மிஞ்சுவது களவொன்றே—வீரப் பெண்ணே ? (172)

ஆட்டனத்தி :—

வாய்திறந்தா வசைபேசு கின்றாய் ? இந்தா
வாங்கிக்கொள் [அறைகின்றான்] வக்கின்றி வாழவந்த
நாய்மகனே ! நன்றியிலாப் பதரே ! இந்த
நானிலத்தில் நாகரிகம் வளர்க்கும் எங்கள்
தாய்மொழியை வேண்டு மென்றே பழிப்பவர்க்குத்
தாடைபோம் பின்எதிர்த்தால் தலையே போகும்

சரத்குமாரன் :—

யேய்ப்பயலே ! உன்னைஎன்ன செய்கின் றேன்பார்

ஆட்டனத்தி :—

பேதை ! உனக்குரமிருந்தால் அருகே வாடா (173)

[இருவரும் ஒருவரை ஒருவர் நெருங்கி மற்போரிடு கின்றார்கள்—அத்தியின் மேலாடையும் சட்டையும் கிழிந்து விடுகின்றன சரத்குமாரனைத் தூக்கி எறிகிறான் அத்தி,கீழேவிழுந்த சரத்குகுமாரன் எதிர்பாரா நிலையில்—அத்தியின் கண்களில் மண்ணைத் தூவுகிறான்—அத்தி அலறிக் கண்களைக் கசக்கும்போது —ஒரு மரத்துண்டினால் அத்தியின் மண்டையிலடிக்கிறான் குருதி சொட்ட மயங்கி விழுகிறான். அத்தி—மேலும் சரத்குமாரன் கட்டையை ஓங்கும் போது எதிர்ப்பாராமல் இரும்பிடர்த்தலையார் வருகிறார்]

இரும்பிடர்த்தலையார் :—

[விரைந்து வந்து சரத்குமாரனைத் தடுத்து]

ஏ ! ஏ ! நில் நீயும் ஒருமனிதன் தானா

[சரத்குமாரன் ஓடுகிறான்]

[அத்தியைப் புரட்டிப்பார்க்கிறார்]

என்னஇது—மடியவில்லை—மயக்கம்—ஆமாம்

[தண்ணீர் கொண்டுவந்து முகத்தில் தெளித்துத் துடைத்து விட்டு ஒரு பச்சிலையைக் கசக்கிப் புண்ணில் கட்டுகிறார்]

ஆஆ ! யார் இவன் நம் ஆட்டனத்தி !

[தோளில்'வில்' அடையாளம் பொறித் திருப்பதனைக் கண்டு சிறிது சிந்திக்கிறார்—ஓடிவிழுந்த சரத்குமாரன் புலவர் பொருளுரையை மறைந்திருந்து கேட்கிறான்]

அட்டாயீ தென்னவடு! கொடுமை—என்ன ?
ஈது... இலச்சினைபோல் தோன்றுகின்ற(து)
என்னகுறி விற்பொறியா ? என்ன விந்தை !

[தொடரும்]